REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 நவம்பர் 22 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 89 இல. 277 | Monday 22,November, 2021 | 20பக்கங்கள் | 30/-

## வரவு – செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு இன்று

### மாலை 5 மணிக்கு வாக்கெடுப்பு இடம்பெறும்



2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்களிப்பு இன்று (திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய 06

### பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பம்;

## நோய் அறிகுறிகள் இருப்பின் மாணவர்களை அனுப்ப வேண்டாம்

### பெற்றோருக்கு சுகாதார அமைச்சு அறிவுரை



கொரோனா அச்சுறுத்தலால் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மீண்டும் இன்று (22) திறக்கப்படும் நிலையில் நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. 06

### 02வருட ஆட்சியில் சவால்களுக்கு மத்தியில்

## குறைவான வளப் பயன்பாட்டுடன் பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

### சந்திம வீரக்கொடி MPயின் உரைக்கு ஜனாதிபதி செயலகம் விளக்கம்



கடந்த இரண்டு வருடகால ஆட்சிக் காலத்தில், சவால்களுக்கு மத்தியில் குறைவான வளப் பயன்பாட்டுடன் பாரிய வேலைத்திட்டங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடைமுறைப்படுத்தி வருகின்றார். நாடு பூராகவும் செயற்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட 06

## போரில் இறந்தவர்களை நினைவு கூருவதில் தவறில்லை

### அதனை அரசியலாக்குவதே தவறானது – டக்ளஸ்



போரில் இறந்தவர்களை அவர்களுடைய உறவினர்கள் நினைவு கூருவதில் தவறேதும் இல்லை. ஆனால் அதனை அரசியல் நடவடிக்கையாக முன்னெடுப்பதுதான் பிரச்சினையை உருவாக்கி விடுகின்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார். கடந்த ஆட்சி 06

# தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுதலையாவர்

### வவுனியா மக்கள் சந்திப்பில் ஞானசார தேரர் அறிவிப்பு



(வவுனியா விசேட நிருபர்)

அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியினால் மக்கள் கருத்துக்களை பெறும் நடவடிக்கை நேற்று வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் சட்டத்தரணிகள், மதத்தலைவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தார்கள். செயலணியின் தலைவர் ஞானசார தேரர் ஒருநாடு ஒருசட்டம் தொடர்பில் இங்கு தெளிவுபடுத்தினார்.

வவுனியாவில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் செயணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்த கருத்து தொடர்பில் முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவிக்கையில்,

இந்தக் கலந்துரையாடலில் அரசியல் கைதிகளின் விடுதலை, தொல்பொருள் திணைக்களங்களின் நடவடிக்கை, பௌத்த விகாரரைகளை அமைப்பது, எமது மத வழிபாடுகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை, மாவீரர் தினம் தொடர்பில் எமது உரிமை 06

# TNA எம்.பிமாருக்கு எதிராக புலம்பெயர் தமிழர் போர்கொடி

### சுமந்திரன், சாணக்கியனுக்கு எதிராக கனடாவில் ஆர்ப்பாட்டம்







கனடாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் ராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் கலந்துகொண்ட நிகழ்வொன்றுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் இடையூறு விளைவித்துள்ளனர்.

கனடாவில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளை அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டம் டொரொண்டோவில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்தில் உரையாற்றும்போது மண்டபத்தினுள் பிரவேசித்த எதிர்ப்பாளர்கள் கூட்டத்திற்கு 06

## இரசாயன உர இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படவில்லை

### இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை



நெல் மற்றும் மரக்கறி உள்ளிட்ட பெரும்போக பயிர்ச் செய்கைக்காக இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பெரும்போக பயிர்களுக்குத் தேவையான தாவர ஊட்டச் சத்துக்கள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட இருப்பதாக 06



இலங்கைக்கு வருகை தந்துள்ள அருஸிய்யத்துல் காதிரிய்யா தரீக்கா சர்வதேச அமைப்பின் ஆன்மீகத் தலைவர் அதி சங்கைக்குரிய அப்ழலுல் உலமா அல்லாமா அஷ்ஷெய்க் டொக்டர் தைகா அஹ்மத் நாஸிர் ஆலிமை பிரதமரின் மத விவகார இணைப்பாளர்களான வண.கலாநிதி அக்ரஹாரே கஸ்ஸப நாயக்க தேரர், கலாநிதி சிவ ஸ்ரீ பாபு சர்மா குருக்கள், அஸ் ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரி, அருட் தந்தை சிக்ஸ்டஸ் குருகுலசூரிய ஆகியோர் வரவேற்பதையும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் பர்ஸான் மன்ஸூர் அருஸிய்யதுல் காதிரிய்யா தரீக்காவின் அமைப்பின் வரவேற்பு குழு தலைவர் முஹ்யித்தீன் காதர் ஆகியோர் அருகிலிருப்பதையும் படத்தில் காணலாம்.

## அரசை எதிர்த்து நின்று எதனையும் சாதிக்க முடியாது


### இராஜதந்திர ரீதியில் காய்களை நகர்த்த வேண்டும்



அரசை எதிர்த்து நின்று எதனையும் சாதிக்க முடியாது. சிறுபான்மை சமூகமாக உள்ள நாம் அரசுடன் இராஜதந்திர ரீதியில் காய்களை நகர்த்தி எமது தேவைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என 06

## வீடு அல்ல காணி தேவையே மலையக மக்களது பிரச்சினை

### உணர்ந்து செயற்பட முன்வருமாறு ஜீவன் அழைப்பு



(ஷம்ஸ் பாஹிம்)

மலையக மக்களுக்கு வீடு வழங்குவதைவிட அவர்களுக்கு சொந்தமாக காணி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். ஒரு இலட்சம் வீடுகள் மலையகத்துக்கு தேவைப்படும் நிலையில் 14ஆயிரம் 06

### கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக

## மத்திய வங்கி ஆளுநர் யாழ்ப்பாணம் விஜயம்



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று முன்தினம் (20) யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இலங்கை மத்திய வங்கி 06

## இரு வாரங்களில் 08 இலட்சம் சிலிண்டர்கள் வந்தடைந்தன

### தட்டுப்பாடு இவ்வாரம் முதல் நீங்குகிறது




இந்த வாரத்திற்குள் 08 இலட்சத்துக்கும் அதிகமான எரிவாயு சிலிண்டர்கள் உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படும் என லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜனக பத்திரத்ன நேற்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஏழு நாட்களில் நிறுவனம் ஏற்கனவே 07 இலட்சம் எரிவாயு சிலிண்டர்களை உள்நாட்டு சந்தைக்கு விநியோகித்துள்ளது. 06

## காணாமலாக்கப்பட்டவர்களை கண்டுபிடிக்க 20 ஆவணங்கள் தேவை

### காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகம் உறவினர்களுக்கு கடிதம்

முறைப்பாடு மட்டும் போதுமானதல்ல எனவும் தெரிவிப்பு



காணாமலாக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 20 ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும் என காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 06

## பதுளை சிறையில் 12 கைதிகளுக்கு கொவிட்

### பரிசோதனைகளில் உறுதியானது



பதுளை சிறைச்சாலையில் 12 கைதிகளுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (20) முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளிலேயே இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பதுளை பிரதேசத்துக்கு 06

## 998 kg வெடிபொருட்கள் மன்னாரில் அகப்பட்டது

### இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதாக சந்தேகம்



இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் டைனமெற் வெடிபொருட்கள் வீடு ஒன்றிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடற்படையினரின் இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் 06

## சிறிதரன் MP க்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

### கொடும்பாவியும் எரிக்கப்பட்டது



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு எதிராக 'கள்ளவாக்கு சிறிதரனே கல்வியைப் பற்றி பேசாதே' எனக் கோசம் எழுப்பியவாறு வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. 06

### அரச சேவைக்கு அபகீர்த்தி ஏற்படுத்த இடமில்லை;

## அரசாங்கத்தை அரசாங்க ஊழியர்கள் விமர்சிக்க தடை

### சமூக ஊடகங்களை கண்காணிக்கவும் நடவடிக்கை



அரசாங்க ஊழியர்கள் சமூக ஊடகங்களில் அரசாங்கத்தை விமர்சிக்கக் கூடாது என உத்தரவுவெளியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசாங்கத்திற்கு எதிரான எதிர்மறையான கருத்துக்கள் வெளியாவதை தடுப்பதற்காகவே இந்த உத்தரவை அரசாங்கம் பிறப்பித்துள்ளது. உள்துறை இராஜாங்க அமைச்சு இந்த 06

### விக்கல் வீராச்சாமி



நாட்டில கொரோனா மோசமா பரவுது, அதிலும் புதிய திரிபு வேகமா பரவுதாம், சனத்த கவனமாக இருக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கு.....

எது, எங்கட சனம் கவனமா இருக்கிறதோ, வெள்ளவத்த பக்கம் வந்து பாருங்கோ, திருமண விழாவில குறைஞ்சது 300 பேருக்கு மேலதான்...!!!

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

## 'ஒரே நாடு, ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி

# அனைத்து மாகாணங்களிலும் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் ஆரம்பம்







"ஒரே நாடு, ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள், நேற்று முன்தினம் (20) வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்று (21) யாழ்ப்பாணம் வலம்புரி மண்டபத்தில் இதற்கானப் பணிகள் தொடர்ந்தன. சட்டத்தரணிகள், தொழில் வல்லுநர்கள், மதத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சட்டத்தை சம அளவில் செயற்படுத்துவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் கருத்துக்களை கேட்டறிவது, இந்த ஜனாதிபதி செயலணியின் நோக்கமாக உள்ளது. இன்று முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் தொடரும், எதிர்வரும் நாட்களில் ஏனைய எட்டு மாகாணங்களிலும் உள்ள மக்களின் கருத்துக்களை கேட்டறிய எதிர்பார்த்துள்ளதாக செயலணி அறிவித்துள்ளது.

வவுனியா போகஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள "வட மாகாண சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் சங்கம்" அலுவலகத்திலும் வவுனியா மாவட்டச் செயலகத்திலும் இவ்வாறு கருத்துக்களை கேட்டறியும் பணிகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வந்திருந்தவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

நீண்டகாலமாகத் தங்களது மனங்களில் இருந்த எண்ணங்களை இதன்போது அவர்கள் செயலணியிடம் வெளிப்படுத்தினர்.

அத்துடன், இவ்வாறானதொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பொதுமக்களுக்கு ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் பாராட்டியதோடு, "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்பதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

பேராசிரியர் ஷாந்தி நந்தன வீரசிங்க, அய்யம்பிள்ளை ஆனந்தராஜா உள்ளிட்ட செயலணியின் உறுப்பினர்கள், செயலணியின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளருமான ஜீவந்தி சேனாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக்குள் "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினர் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் கருத்துகளைக் கருத்திற்கொண்டு, செயலணியின் நோக்கத்துக்கமைய அவற்றை ஆராய்ந்த பின்னர், அதன் அடிப்படையில் இலங்கைக்கு ஏற்ற வகையில் செயற்திட்ட வரைபு ஒன்றைத் தயாரிப்பதற்காக, 2021 நவம்பர் 30ஆம் திகதியன்று இந்தச் செயலணி உருவாக்கப்பட்டது.

**'ஒரே நாடு, ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி**
**த.பெ. எண். 504,**
**கொழும்பு.**

என்ற முகவரிக்கு அல்லது ocol.consultations@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, உங்களுடைய கருத்துக்கள் மற்றும் யோசனைகளை அனுப்பி வைக்க முடியும். இன்று முதல், தனிப்பட்ட முறையிலும் இச் செயலணிக்கு கருத்துகளைத் தெரிவிக்க முடியும் என்று செயலாளர் அறிவித்துள்ளார்.

# அமைச்சர் விமல் வீரவன்ச - இலங்கைக்கான புதிய கியூப தூதுவருக்கிடையிலான கலந்துரையாடல்







இலங்கைக்கான புதிய கியூப தூதுவர் *Andre Marcolo Gonzalez Guardiola:*

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர், அமைச்சர் விமல் வீரவங்ச ஆகியோருக்கிடையில் இராஜதந்திர சந்திப்பு கொழும்பில் உள்ள கைத்தொழில் அமைச்சில் அண்மையில் நடைபெற்றது.

முதலில் புதிய கியூப தூதுவருக்கு அமைச்சர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தேசிய சுதந்திர முன்னணியாக எதிர்காலத்தில் தூதுவருக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராக இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் கியூபாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவைப் பேணுவதே தமது நோக்கமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னணிக்கும் கியூபாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த தயாராக இருப்பதாக புதிய தூதர் கூறியுள்ளார்.

கியூபாவில் தென்னை சாகுபடி தொழில் வளர்ச்சிக்கான தூதுவர், அமைச்சரின் உதவியை கோரியுள்ள நிலையில், அமைச்சர், இது தொடர்பில் தனது பூரண ஆதரவை வழங்கத் தயார் எனவும் தெரிவித்தார்.













வை.எம்.எம். ஏ யின் 71 ஆவது வருடாந்த மாநாடு சனிக்கிழமை கொழும்பு 7 இலங்கை மன்றக் கல்லூரியில் வை.எம்.எம்.ஏ யின் தேசியத் தலைவர் சஹிட் எம். ரிஷ்மி தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக நீதியமைச்சா் அலி சப்ரி,கௌரவ அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா ரினோசியா ஆகியோர் கலந்து கொண்டனர்.மாநாட்டில் ஓட்டமாவடி பிரதேச சபைத் தலைவருக்கு விசேட விருது வழங்கப்பட்டது. அத்துடன் பெண்கள் தலைவி பவசா தாஹா, உட்பட சிறந்த வை.எம்.எம். ஏ கிளைகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்ட போது,...

படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர், அஷ்ரப் ஏ சமத்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk



**தொழுகை நேரம்**

22 முதல் 24வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.43 |
| லுஹர் | 11.58 |
| அஸர் | 03.20 |
| மஃரிப் | 05.51 |
| இஷா | 07.04 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் கார்த்திகை 6

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: திரிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | சுகம் |
| கும்பம் | மறதி |
| மீனம் | வெற்றி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# பிரதமருக்கு ஆசி வேண்டி போதி பூஜை



பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு கோட்டை சம்புத்தலோக விஹாரையில் லேக்ஹவுஸ் பொதுஜன பெரமுன தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் போதி பூஜை நிகழ்வு இன்று (22) நடைபெறும். பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுக்கான ஆசிர்வாத பூஜை காலை 10.00 மணிக்கு சுகாதார விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைவாக நடைபெறும் என ஸ்ரீலங்கா பொதுஜன லேக்ஹவுஸ் முற்போக்கு ஊழியர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமரின் சொந்த நிதியில் 100 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி

## அநுராதபுரத்தில் வறிய குடும்பங்களுக்கு உதவி

அநுராதபுரம் மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் 100 குடும்பங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தனது சொந்தப் பணத்தில் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

பிரதமரின் பிறந்த நாளை ஒட்டி இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அநுராதபுரம் மிரிசவெட்டிய ரஜமஹா விஹாரையில் குறைந்த வருமானம் பெறும் 05 குடும்பங்களுக்கு பிரதமர் தனது தனிப்பட்ட பணத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

# கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தை சில எம்.பிகள் துஷ்பிரயோகம் செய்வதாக சபாநாயகர் குற்றச்சாட்டு

## இது வாக்களித்த மக்களை அவமதிக்கும் செயல்

*(எம்.ஏ.அமீனுல்லா )*

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வகையிலும் கருத்துக்களை வெளியிட சுதந்திரம் உள்ளது என்பதற்காக சிலர் அவ்வாறான சுதந்திரத்தை துஷ்பிரயோக செய்துவருவதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் தமக்குமட்டுமன்றி, தமக்கு வாக்களித்த மக்களையும் அவமதிக்கும் செயல் எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கவலை தெரிவித்தார்.

அண்மைக்காலமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், பாராளுமன்றத்தினுள் தவறான நடத்தைகளை வெளிப்படுத்தும் பதாகைகளை காட்சிப்படுத்தினார்கள். இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வந்துள்ளதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்த சட்டங்களை கொண்டுவரும் எண்ணம் இல்லை எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம் செய்து , அங்கு வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர், ஊடகவியலாளர் மத்தியில் சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய சபாநாயகர் :

பாராளுமன்றத்தில முறைகேடாக நடந்துகொள்வதனால் பாராளுமன்ற உறுப்பினர்களினது கௌரவம் கண்ணியம் என்பன இல்லாதுபோகின்றன ஆகவே கோவிட் அபாயம் நீங்குகின்ற வரை அனைவரும் தனித்தனியாக நமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றி, ஒவ்வொருவரும் முதலில் தன்னை தான் பாதுகாத்துக்கொள்ளல் அவசியமாகும். அவ்வாறு தம்மை மாற்றிக்கொள்வதன் மூலமே நாடுமுழுதும் மிக பயங்கரமாக அச்சுறுத்திக்கொண்டிருக்கும் இந்த கோவிட் நோயிலிருந்து நாமும் எமது நாடும் விடுபட முடியும் .



வரவுசெலவுக்கான விவாதத்தின் போது நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்ற மரபு இல்லை.

06

# முன்னாள் புத்தளம் தினகரன் நிருபர் காலமானார்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

லேக்ஹவுஸ் நிறுவன தினகரன் பத்திரிகையில் 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் புத்தளம் தினகரன் நிருபராக கடமையாற்றி வந்த ஓய்வு பெற்ற அதிபர் எம்.ஐ. அப்துல் ரவூப் மாஸ்டர் ஞாயிற்றுக்கிழமை (21) காலை புத்தளத்தின் காலமானார்.

மர்ஹூம் ரவூப் மாஸ்டர் ஓய்வு பெற்ற அதிபர், ஒரு சிறந்த நாடக கலைஞர், சிரேஷ்ட மேடை அறிவிப்பாளர், அறிவிப்பு துறையில் அன்னார் தொகுத்து வழங்கும் நேர்முக வர்ணனை சுவாரஸ்யம் மிக்கதாக அமைந்திருக்கும். அரசியல் மேடைகளில் அரசியல் பிரமுகர்களை நகைச்சுவையாக விழிப்பதில் அவர் தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்தவர்.

அன்னாரின் ஜனாஸா நேற்று மாலை புத்தளம் வெட்டுக்குளம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# 2022 வரவு செலவு திட்ட வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவேன்

## புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

எதிர்வரும் டிசம்பர் மாதம் வாக்கெடுப்புக்கு வரவுள்ள வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளதாக முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் தெரிவித்தார்.

புத்தளம் தில்லையடி பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று முன்தினம் (13) மாலை பார்வையிட வருகை தந்த போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று காரணமாக எமது நாடு பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. இன்று டொலர் இல்லாத பிரச்சினையோடு, பொருளாதார ரீதியாக எமது நாடு நலிவடைந்துள்ளது.



சவால் மிக்க இந்த கால கட்டத்திலும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் மத்தியில் எமது ஜனாதிபதி, பிதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் மக்களுக்கு நிவாரணம் அடங்கிய பட்ஜட் பொதியை வழங்கியிருக்கிறார்கள்.

எனவே, 20 ஆவது திருத்த சட்ட மூலத்துக்கு ஆதரவு வழங்கியதைப் போலவே, 2022 வரவு செலவு திட்டத்திற்கும் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளேன் என்றார். புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அலி சப்ரி ரஹீம், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை தலைவராக கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரசின் உறுப்பினர் ஆவார்.

அ.இ.ம.கா , ஸ்ரீ.மு.கா உள்ளிட்ட கட்சிகள் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் தேசிய கூட்டணியில் தனித்துப் போட்டியிட்டதுடன், அதில் பாராளுமன்ற உறுப்பினராக அலிசப்ரி ரஹீம் தெரிவானார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்துள்ள நிலையில், அக்கட்சியின் உறுப்பினரான அலிசப்ரி ரஹீம், 20 ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவு வழங்கியது முதல் அரசுக்கு ஆதரவு உறுப்பினராக செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் ஒரு பகுதி மக்கள் பாவனைக்காக

## 28இல் ஜனாதிபதி, பிரதமரினால் திறந்து வைப்பு



கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம முதல் குருணாகல் வரையான பகுதி எதிர்வரும் 28 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் குறித்த வீதி திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. குறித்த வீதியில் மீரிகம, நாகலகமுவ, தம்பொக்க, குருணாகல் மற்றும் யங்கபிட்டிய ஆகிய 5 வெளியேறும் பகுதிகள் உள்ளதாகவும் கடந்த 2017 ஆம் ஆண்டு குறித்த வீதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கோவிட் தொற்றினால் மேலும் 19பேர் உயிரிழப்பு

நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். இவர்கள் அனைவரும் நேற்றைய தினம் உயிரிழந்தவர்களாகும்.



அதன்படி, நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14,127 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று (21) மேலும் 508 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்று நபர்களின் எண்ணிக்கை 556,437 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கோவிட் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 526,734 ஆக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# 'ஒரே நாடு, ஒரே சட்டம்' தொடர்பில் மக்கள் கருத்தறியும் பணி இன்று

முல்லைத்தீவு , கிளிநொச்சி மாவட்டங்களில் “ஒரே நாடு, ஒரே சட்டம்” தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு யாழ்ப்பாணம் வலம்புரி மண்டபத்தில் நேற்று இதற்கானப் பணிகள் தொடர்ந்தன.

இன்றை தினம் (22), முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் தொடரவுள்ளது. எதிர்வரும் நாட்களில் ஏனைய எட்டு மாகாணங்களிலும் உள்ள மக்களின் கருத்துக்களை கேட்டறிய எதிர்பார்த்துள்ளதாக செயலணி அறிவித்துள்ளது.

வவுனியா போகஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள “வட மாகாண சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் சங்கம்” அலுவலகத்திலும் வவுனியா மாவட்டச் செயலகத்திலும் இவ்வாறு கருத்துக்களை கேட்டறியும் பணிகள் இடம்பெற்றன.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வந்திருந்தவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். நீண்டகாலமாகத் தங்களது மனங்களில் இருந்த எண்ணங்களை இதன்போது அவர்கள் செயலணியிடம் வெளிப்படுத்தினர். அத்துடன், இவ்வாறானதொரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ அவர்களுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டனர்.

தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பொதுமக்களுக்கு ஜனாதிபதி செயலணியின் தலைவர் அதி. வண. கலகொடஅத்தே ஞானசார தேரர் பாராட்டிய தோடு,

06



கடற்படை மேற்கொண்ட தேடுதலின் போது யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் வைத்து 68 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. படகொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 பயணப் பொதிகளில் இவை மறைத்து வைக்கப்பட்டுள்ளதை காணலாம்.

# எரிவாயு தட்டுப்பாடு இன்னும் சில வாரங்களில் முடிவுக்கு வரும்

சந்தையில் நிலவும் எரிவாயு தட்டுப்பாடு அடுத்த சில நாட்களில் முடிவுக்கு வரும் என நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.



நாளாந்தம் ஒரு இலட்சம் வரையில் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிப்பதற்கு அந்தந்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

சந்தையில் சீமெந்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு அடுத்த இரு வாரங்களில் நிவர்த்தி செய்யப்படுமென இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சீமெந்து பொதியொன்று 1,275 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக சந்தையில் எரிவாயு,சீமெந்து போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வரும் நிலையில் அதனை சீர் செய்ய பல்வேறு முன்னெடுப்புகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

ஆனால் தொடர்ந்தும் தட்டுப்பாடு நீடிப்பதோடு இது தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்து வருவது தெரிந்ததே. எரிவாயு விலைகள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அதிகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.





பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு காலி கோட்டை மீரான் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்ற விசேட துஆப்பிரார்த்தனை,காலி மாவட்ட பொதுஜன பெரமுன முஸ்லிம் அமைப்பாளரும் துறைமுக அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளருமான ராசிக் அன்வர் தலைமையில் நடைபெற்றது.காலிமாவட்ட உலமா சபை தலைவர் மொஹமட் மௌலவி துஆப் பிரார்த்தனை செய்வதையும் பிரதேச செயலாளர் ஹிமாலி ரத்னவீர காலி பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் கபிலசேனாதிபதி உட்பட கலந்து கொண்ட முக்கியஸ்தர்களையும் காணலாம்.
(படஉதவி: மொஹமட் சஹ்ரான்)

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 143.01 | 149.30 |
| கனடியன் டொலர் | 156.79 | 162.96 |
| யூரோ | 223.85 | 232.26 |
| ஜப்பான் யென் | 1.7169 | 1.7858 |
| சிங்கப்பூர் டொலர் | 145.77 | 150.65 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.16 | 273.85 |
| சுவிஸ் பிராங்க் | 211.85 | 219.78 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 534.00 | கட்டார் ரியால் | 55.29 |
| குவைத் டினார் | 665.86 | சவூதி ரியால் | 53.68 |
| ஓமான் ரியால் | 522.98 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.81 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 06ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை

அறிவு ஆற்றல் ஆகியவற்றில் தம்மைக் காட்டிலும் சிறந்த பெரியவராய் இருப்பவரோடு உறவுகொண்டு அவர்வழி நடப்பது மிகப்பெரும் வலிமையாக அமையும்.

## கல்வி நடவடிக்கைகளுக்காக அனைத்து வகுப்புகளும் ஆரம்பம்

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் 06 ஆம், 07ஆம், 08 ஆம், 09 ஆம் வகுப்புகள், கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன. ஏற்கனவே 200 பிள்ளைகளுக்குக் குறைந்த பாடசாலைகளும், அதனைத் தொடர்ந்து பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளும் அதன் பின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர் தர வகுப்புகளும் என்றபடி கட்டம் கட்டமாக பாடசாலை வகுப்புகள், கல்வி நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் எஞ்சியுள்ள ஏனைய வகுப்புகளும் இன்று முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்படுகின்றன.

இந்த வகுப்புகளும் ஆரம்பிக்கப்படுவதோடு நாட்டிலுள்ள அனைத்து அரசாங்கப் பாடசாலைகளினதும் எல்லா வகுப்புகளும் ஒன்றரை வருடத்திற்கு பின்னர் கல்வி நடவடிக்கைகளுக்காக ஏக நேர காலத்தில் இயங்கும் நிலையைப் பெற்றுக் கொள்கின்றன.

2020 ஜனவரியில் உலகிற்கே பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்த கொவிட் 19 தொற்று அதேயாண்டு மார்ச் மாத நடுப்பகுதியில் இந்நாட்டிலும் பதிவாகத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் முதலில் விடுமுறை வழங்கப்பட்டு மூடப்பட்டன. என்றாலும் மாணவர்களின் கல்வி நலன்களைக் கருத்தில் கொண்டு இப்பாடசாலைகளைக் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் இத்தொற்று அவ்வப்போது தீவிரமடைந்து அம்முயற்சிகளுக்கு பெரும் தடைகல்லாக அமைந்தன.

இருந்த போதிலும் தற்போது இத்தொற்றுக்கு நாளாந்தம் உள்ளாவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதோடு, நாட்டின் சனத்தொகையில் பெரும்பகுதியினருக்கு இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்பின்புலத்தில் பாடசாலைகளைக் கல்வி நடவடிக்கைகளுக்காக கட்டம் கட்டமாகத் ஆரம்பிக்கும் நடவடிக்கை கடந்த மாதம் தொடங்கப்பட்டது. அதன் ஊடாக ஆரம்பிக்கப்படுவதோடு எல்லா வகுப்புகளும் ஒரே நேரத்தில் செயற்படும் நிலைமை ஏற்படுகின்றது.

2020 மார்ச் மாதத்திற்கு முன்பைப் போன்று பாடசாலைகளின் அனைத்து வகுப்புகளும் இயங்கும் நிலையை தற்போது அடைந்துள்ள போதிலும் மாணவர்களோ ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை நிர்வாகத்தினரோ 2020 மார்ச் மாதத்திற்கு முன்பைப் போன்று செயற்பட முடியாது. மாணவர்களின் கல்வி நலன்களைக் கருத்தில் கொண்டு தான் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றனவேயொழிய இத்தொற்று அச்சுறுத்தல் முழுமையான கட்டுப்பாட்டை அடைந்துவிட்டது என்பதற்காகவல்ல. அதாவது இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் தான் வீழச்சி ஏற்பட்டிருக்கின்றது.

இதேவேளை, இத்தொற்றின் டெல்டா திரிபில் மற்றொரு துணை உரு திரிபும் இந்நாட்டில் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. இதனை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று மருத்துவ பீட பேராசிரியர் சந்திம ஜீவேந்திர உறுதிப்படுத்தி இருக்கின்றார்.

இவ்வாறான சூழலில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயம் டொக்டர் அசேல குணவர்ன, விஷேட சுற்று நிருபமொன்றை வெளியிட்டிருக்கின்றார். மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை நிர்வாகத்தினர் எவருக்காவது இத்தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் அவர்கள் எவ்வாறு பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டதாக இச்சுற்றறிக்கை அமைந்திருக்கின்றது.

அதனால் கொவிட் 19 தொற்றைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் உச்ச பட்ச கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். இதன் நிமித்தம் இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைத் தொடர்ந்தும் கடைபிடித்தொழுகுவது இன்றியமையாததாகும்.

அதேநேரம் இத்தொற்று அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஒன்றரை வருடங்களாகப் பாடசாலைகள் மூடப்பட்டிருதந்தால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன. இப்பாதிப்பைக் குறைக்கும் வகையில் சில வகுப்பு மாணவர்களுக்கு இணைய வழி மூலம் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் ஆசிரியர், அதிபர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளால் அந்நடவடிக்கையும் பாதிக்கப்பட்டன. ஆனாலும் பாடசாலையில் கல்வியைப் பெற்றுக்கொள்வது போன்று இணைய வழி ஊடாகப் பெற முடியாது என்பது தான் பெரும்பாலானவர்களின் கருத்தாகும். அதனால் கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்வியைச் சீரமைக்க வேண்டிய தேவையும் தற்போது காணப்படுகின்றது.

ஆகவே கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நிலவிக் கொண்டிருக்கும் சூழலில் அத்தொற்றின் பரவுதலுக்குத் துணை போகாத வகையில் செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அத்தோடு சுகாதார வழிகாட்டல்களை ஒழுங்குமுறையாகப் பின்பற்றியபடி கல்வியை வழங்க ஆசிரியர்களும் அவ்வழிகாட்டல்களுக்கு ஏற்ப கல்வியைப் பெற்றுக்கொள்ள மாணவர்களும் தவறக்கூடாது. அப்போது இத்தொற்று மீண்டும் பரவுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளாது. அதுவே சுகாதாரத்துறையினர் உள்ளிட்ட மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை, பாகிஸ்தான் பொருளாதார வர்த்தகத்தில் புதிய உத்வேகம்

வரலாற்று ரீதியாக குறைந்த வருமானம் கொண்ட நாடாக இலங்கை இருந்து வருகிறது. இவ்வாறான பொருளாதார நிலைமைகளுக்கு பல்வேறு பரிமாண காரணிகள், காரணமாக இருக்கலாம் என் இலங்கைக்கான முன்னாள் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் சாத் கத்தாக் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017 இன் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கையின் படி, இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கையின் மோசமான செயல்பாட்டிற்கு இரண்டு காரணிகள் வெளிப்படையான பங்களிப்பை அளித்துள்ளன.

ஒன்று, அடுத்தடுத்து வந்த நிர்வாகங்கள் தனியார் துறையை விட்டு விலகி, அரசு வழிநடத்தும் கொள்கைகளுக்கு ஆதரவாக,1977 இல் நாடு பொருளாதார தாராள மயமாக்கலைத் தொடங்கும் வரை தொடர்ந்தது என்றார்.

இரண்டாவது, 80 களின் முற்பகுதியில் தொடங்கி 2009 வரை தொடர்ந்த தமிழ் இனப் பிரச்சினையானது,வட மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியையும் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கையும், தேசிய பொருளாதாரத்தில் இருந்து 12வீதமான மக்களையும் நீக்கியது. இது தவிர, நாடு முழுவதும் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களால் மூன்று தசாப்தங்களாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மூன்று தசாப்தங்களாகத் திணிக்கப்பட்ட தமிழ் இனக் கிளர்ச்சியானது அதன் பொருளாதாரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் மூலம் நாடு அதன் உயிர்வாழ்வதற்கான போரில் சிக்கிக்கொண்டது. இதனால் பொருளாதார முன்னுரிமைகள் நீண்ட காலமாக பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை ஆற்றலைக் கொண்டுள்ள ஒரு சிறிய தீவு நாடு என்ற வகையில், அதன் உள்ளார்ந்த சரங்கள் மற்றும் அரசியல் செலவுகளுடன் அண்டை நாடான இந்தியாவிலிருந்தான இறக்குமதியின் மீது அதிக நம்பகத்தன்மை கொண்டிருந்தது.

உலகளாவிய முன்னுரிமைகள் புவிசார் அரசியலில் இருந்து விலகி, புவிசார் பொருளாதாரத்திற்கு சமீப காலமாக நகர்ந்து வருவதால், அதிக இணைப்பு வசதிகளுடன், தொழில்நுட்ப மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நன்றி செலுத்தும் வகையில், நாட்டின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகள் அந்தந்த நாடுகள் மற்றும் மக்களின் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்துகின்றன.



பிராந்தியத்தில் சீனாவினால் பெல்ட் அண்ட் ரோட் முன்முயற்சியை (பிஆர்ஐ) அறிமுகப்படுத்தியதன் மூலம், இலங்கை போன்ற ஏழை பிராந்திய நாடுகளின் பொருளாதார விருப்பங்கள் பன்மடங்கு மேம்பட்டுள்ளன.

ஒருபுறம் மென்மையான நிபந்தனைகளுடன் கூடிய சீனாவின் நிதியுதவி பொருளாதார வளர்ச்சிக்கான மாற்று வழிகளை வழங்கியுள்ள நிலையில், இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் அச்சுறுத்தல் மற்றும் கழுத்தை நெரிக்கும் கொள்கைகளில் இருந்து அவர்களை விடுவித்தது.

பாகிஸ்தானும் இலங்கையும் அதன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் 2005 ஜூனில் கையெழுத்திட்டன. அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 2005 இல் டொலர் 212 மில்லியனில் இருந்து 2017 இல் டொலர் 400 மில்லியனாக உயர்ந்தது.

பாகிஸ்தானின் இலங்கைக்கான பிரதான ஏற்றுமதிகளில் சீமெந்து, ஜவுளி பொருட்கள் ஆடை மற்றும் துணி வகைகள், மருந்து பொருட்கள், அரிசி, சர்க்கரை மற்றும் காய்கறி பொருட்கள் போன்றவை அடங்கும். அதேசமயம் இலங்கை முக்கியமாக வெற்றிலை, தேங்காய் பொருட்கள், தேயிலை, ரப்பர் பொருட்கள் நெளி தாள்கள் போன்றவற்றை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்கிறது.

பாகிஸ்தான், இலங்கைக்கு 206 பொருட்களுக்கு சலுகை வழங்கியுள்ளது. அதே நேரத்தில் இலங்கை பாகிஸ்தானுக்கு 102 பொருட்களுக்கு சலுகை வழங்கியது.

இருதரப்பு வர்த்தகத்தில் படிப்படியான அதிகரிப்பு இருந்தபோதிலும், அடையப்பட்ட குறி எமது பரஸ்பர திறன்களை விட மிகக் குறைவாக உள்ளது, இது ஒரு வருடத்திற்கு ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமாகும். கட்டுமானம், ஜவுளி/ஆடை தயாரிப்பு, உற்பத்தித்திறன், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள், மின்சார பொருட்கள், தோல் பொருட்கள், பேரீச்சம்பழம் மற்றும் கரும்பு சர்க்கரை போன்ற பாரம்பரியமற்ற துறைகள் போன்ற சேவைகளுக்கான உறவை விரிவுபடுத்த வேண்டிய அவசியமாகும். சுற்றுலாத் துறையில் பயன்படுத்தப்படாத மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் உள்ளன, அவை இரு நாடுகளின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரே நாட்டுக் கண்காட்சிகளை அதிக முறைப்படி அதிகரிப்பது காலத்தின் தேவையாகும்.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் இடையிலான சுற்றுலா இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். பாகிஸ்தானின் பொருளாதாரத்திலும் இது ஒரு பெரிய பங்களிப்பாக இருக்க முடியும். சுற்றுலாத்துறை என்பது சாத்தியமான ஒன்றாக இருந்த போதிலும், இரு நாடுகளினதும் இருதரப்பிலான சுற்றுலா மிகக் குறைவாக காணப்படுகிறது. இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும், அதன் அளவு மற்றும் சனத்தொகையை விட பலவற்றை வழங்கக்கூடியது. பூமியின் மேற்பரப்பில் உள்ள மிகத் தொன்மையான நாடு, ஆதாமின் சிகரத்தை வைத்திருப்பதாகக் கூறுகிறது, அங்கு கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும் யூதர்கள் ஆதம் நபி பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டபோது பூமியில் வந்ததாக நம்பும் மலை. பார்க்கும் இடமெல்லாம் பசுமை, 5 நட்சத்திரங்கள் முதல் 1 நட்சத்திர ஹோட்டல்கள் வரை பல்வேறு விருந்தோம்பல் ஏற்பாடுகளுடன் சுற்றிலும் அழகான கடற்கரைகள் உள்ளன.

அனுராதபுரம், சிகிரியா, பொலன்னறுவை, கண்டி மற்றும் காலி ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நாட்டின் வரலாற்று மற்றும் தொல்பொருள் உடைமைகள் அதன் நன்கு பராமரிக்கப்பட்ட நாகரிக பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையான அற்புதங்களாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இரு நாடுகளும் வெளிநாட்டு பார்வையாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு விதிவிலக்காக விருந்தோம்பும் மக்கள்தொகையால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் அண்மையில் பாகிஸ்தானில் உள்ள பௌத்த பாரம்பரியத்தை உள்ளடக்கிய அதிநவீன ஆவணப்படத்தை தயாரித்துள்ளது, இது எப்போது வேண்டுமானாலும் இலங்கை பிரதமரால் திறந்து வைக்கப்படும். குறிப்பாக இலங்கை மற்றும் உலக பௌத்த மக்கள் தொகையில் இருந்து சமய சுற்றுலாவிற்கு வருவோருக்கு இது பெரும் ஊக்கமாக இருக்கும். மேலும் நன்கு அறியப்பட்ட சுற்றுப் பயண வழிகாட்டிகளிடையே முறைப்படுத்தப்பட்ட மற்றும் அடிக்கடி தொடர்புகொள்வதற்கு இரண்டு அரசாங்கங்களும் நிதியுதவி மற்றும் வசதிகளை வழங்க வேண்டும்.

பல்வேறு நலன்கள் மற்றும் திறன்களைக் கருத்தில் கொண்டு சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்குமான கவர்ச்சிகரமான தொகுப்புகள், சமூக ஊடக தளங்கள் மற்றும் இணையதளங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட வேண்டும்.

கவர்ச்சிகரமான பயண வசதிகள், தங்குமிட வசதிகள் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் எங்கள் இரு நாடுகளின் ஹோட்டல் தொழில் துறையினரால் உருவாக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

**சில்மியா யூசுப்...**

# காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு திணைக்கள அனுமதியின்றி 2018இல் 214 பேரை நிரந்தரமாக்கியமை கோப் குழுவில் அம்பலம்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பத்து லட்சம் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு 2018ஆம் ஆண்டு இணைத்துக் கொள்ளப்பட்ட 214 பணியாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இன்றி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பதாக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழு) தெரியவந்தது. அமைச்சரவை அனுமதியின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் இவர்கள் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டபோதும், அதன் பின்னர் 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கு அமைய இவர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இங்கு புலப்பட்டது.

- ✦ 50 வருடங்களில் கையகப்படுத்தப்பட்ட மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பில் தகவல்கள் இல்லாமை பாரிய பிரச்சினை
- ✦ கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் தொடர்பான 200க்கும் மேற்பட்ட கோப்புகள் காணாமல் போனதாகவும் தெரியவந்தது

குறிப்பிட்ட திட்டமொன்றுக்காகப் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இன்றி இவ்வாறு சேவையில் நிரந்தரமாக்குவதில் பாரிய தவறு இழைக்கப்பட்டிருப்பதாகவும், இது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குத் தவறான முன்னுதாரணமாக அமைகிறது என்றும் கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார். எனவே, இது தொடர்பில் அமைச்சின் மட்டத்தில் உரிய விசாரணை நடத்தப்பட்டு முழுமையான அறிக்கை ஒரு மாத காலப்பகுதிக்குள் குழு முன்னிலையில் வழங்கப்பட வேண்டும் என்றும், இந்த நிலைமையைத் திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் காணி அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ஏ.கே ரணவக்க அவர்களுக்கு கோப் குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார்.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் செயற்றிறன் அறிக்கை குறித்து கடந்த 17ஆம் திகதி பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் கோப் குழு ஆராய்ந்திருந்தது. இதன்போதே இவ்விடயங்கள் தெரியவந்தன.

1972ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க காணி மறுசீரமைப்புச் சட்டத்துக்கு அமைய அமைக்கப்பட்ட காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஊடாக காணிகளைக் கையகப்படுத்தும்போது கையகப்படுத்தப்பட்ட காணிகள் மற்றும் அந்தந்த அரசாங்கங்களின் காலப் பகுதிகளில் அப்புறப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பில் சரியான தகவல்கள் இல்லாமை பாரிய பிரச்சினை என கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். இதுவரை ஏறத்தாழ 17 இலட்சம் ஏக்கர் காணிகள் ஆணைக்குழுவிடம் காணப்படுவதாகவும், இவற்றின் மதிப்பு துல்லியமானதாக இல்லையென்பதும் இங்கு தெரியவந்தது. காணிகளைக் கையகப்படுத்தும்போதும், பல்வேறு அரசுகளின் கீழ் காணிகளைப் பெற்றுக்கொள்ளும்போது சரியான முறையில் அளவிடல் பணிகள் மேற்கொள்ளப்படாமை இந்நிலைமைக்குக் காரணம் என காணி அமைச்சின் செயலாளர் இங்கு தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் பிரதான சொத்துக்களான இந்தக் காணிகள் தொடர்பில் சரியான தகவல்களும், மதிப்பீடுகளும் ஆணைக்குழுவிடம் இருப்பது அவசியமானது என்றும், காணிகளை சரியான முறையில் அளவீடு செய்து, அதுபற்றிய திட்டவட்டமான அடிப்படை ஆவணத்தைத் தயாரிப்பது அவசியம் என்றும் குழு சுட்டிக்காட்டியது. இது சம்பந்தமாக நவீன ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விரைவான வேலைத்திட்டத்தை தயாரித்து கோப் குழுவிற்கு அறிவிக்குமாறு அதன் தலைவர் அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த நிலங்களின் தரவுகளை டிஜிட்டல் மயமாக்க வேண்டியதன் அவசியத்தை குழு வலியுறுத்தியது. இதன் மூலம் பல்வேறு முறைகேடுகள் உட்பட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என சுட்டிக்காட்டிய குழு, செயலாளரிடம் உடனடியாக தலையிடுமாறு பணிப்புரை விடுத்தது.





காணி கையகப்படுத்தல் தொடர்பான சில கோப்புகள் காணாமல் போயுள்ளதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். இது போன்று கிட்டத்தட்ட 200 கோப்புகள் காணாமல் போனது தெரியவந்தது. இது தொடர்பில் உடனடியாக ஆராயுமாறு அமைச்சின் செயலாளருக்கு கோப் குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார். பொதுமக்களிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட காணிகளிலிருந்து உரிய பலனைப் பெற்றுக் கொள்ள வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை தனிநபர்களுக்கு வழங்குவது பாரிய பிரச்சினையென்றும், இதனைச் சீர் செய்வது அவசியமானதாகும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் 19721974ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்குத் திட்டங்கள் மற்றும் சாற்றுதல் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக 50 ஏக்கர் காணிகளை வழங்காத 260 காணிகள் காணப்படுவதாகவும் இங்கு தெரியவந்தது. இதனால் 50 வருடங்களாக காலதாமதமடைந்திருக்கும் இந்தச் செயற்பாடு வரலாற்றுப் பிரச்சினையாக இருப்பதால் அடுத்த ஆறு மாதங்களுக்குள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விசேட வழியொன்றை ஏற்படுத்த உரிய தலையீட்டை வழங்குமாறும் கோப் குழுவின் தலைவர், அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

ஆணைக் குழுவின் வசம் உள்ள ஏறத்தாழ 17 இலட்சம் காணிகள் தொடர்பில் பல வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கு அமைய அவற்றின் பெறுமதி 676 மில்லியன் ரூபா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு தற்போதைய காலத்துக்கு ஏற்ப சீர் செய்யப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிலையில் ஒரு ஏக்கரின் பெறுமதி சுமார் 500 ரூபாவாக உள்ளதால், இப்பிரச்சினையை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கையை ஆறு மாதங்களுக்குள் மேற்கொள்ளுமாறும் குழு பரிந்துரைத்தது.

அத்துடன், ஆணைக்குழுவினால் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்ட பின்னர் அந்தக் காணிகளை வங்கிகளில் அடகு வைத்து கடன் பெறுவது சிக்கலானது என்றும் இங்கு தெரியவந்தது. அத்துடன், சில காணிகள் பிரதேச செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படுமா என்ற கேள்வி குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஆணைக்குழுவின் வசமுள்ள பெறுமதியான காணிகளை அடையாளம் கண்டு அவற்றைப் பயனுள்ள விதத்தில் அபிவிருத்தி செய்வதற்கான மாதிரியைத் தயாரிப்பதே தற்போதைய அவசர தேவை என கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். இது தேசிய முக்கியத்துவம் மிக்கது என்பதால் நில அளவைத் திணைக்களம் உள்ளிட்ட தரப்பினருடன் இணைந்து உரிய வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக மீண்டும் ஒருமுறை குழு முன்னிலையில் அழைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார். இக்கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இரான் விக்ரமரத்ன, நளின் பண்டார, மதுர விதானகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய அரிய தமிழ் கல்வெட்டு திருமலையில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புகைபடர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புது வெளிச்சமூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு. அக்கண்டுபிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகரமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன. அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதினால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன. இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். முதலில் இக்கல்வெட்டுப் பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் என்பவரால் வைத்திய கலாநிதி த.ஜீவராஜுக்கு தெரியப்படுத்தப்பட்டதன் மூலம் அதுபற்றிய தகவல் எமக்கும் பரிமாறப்பட்டது. அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்கு தொல்லியற் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான பா.கபிலன், வி. மணிமாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் கிரிதரன் ஆகியோருடன் 30.01 2021 அன்று திருகோணமலை சென்றிருந்தோம். இந்நிலையில் திருகோணமலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்டன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் நா.சந்திரசேகரம் மற்றும் கோமரன்கடவல பிரதேச செயலக உத்தியோகத்தர் நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன் அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது.

இக்கல்வெட்டு, திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனிநிர்வாகப் பிரிவாக உள்ள



கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப் பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும் அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டட அத்திவாரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் அழிவடைந்த சிவாலயம் அதேநிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது. இம்மலையின் மேல்பகுதியில் திருவாசிபோன்ற வட்டமும் அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன. சிவலிங்கத்திற்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார். இக்குறியீடுகளுக்கு கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. முதல் இரு வரிகளும்இ ஏனையவற்றில் சில சொற்களும் சமஸ்கிருத கிரந்தத்தில் இருக்கின்றன. கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும் தெளிவற்றும் காணப்படுகின்றன. இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வமிகுதியால் பல சொற்களைப் படித்தனர். ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும் எனது கலாநிதிப் பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலுவுக்கும் தமிழக தொல்லியற் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டு அறிஞரான கலாநிதி சு.இராஜகோபாலுக்கும் இக்கல்வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன். அவர்கள் இருவரும் ஒருவார காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும் பகுதியை வாசித்து அதன் வாசகத்தை தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதன் வாசகம் பின்வருமாறு:



**1) ஃஷிகே ஸ்ரீவிம்ஜங்கோ3ஸநெள ம்ருகே3விம்ச0தி ப4.**
**2)..ச0க்தி ப்ரதிஷ்டா2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஸ்ரீ**
**3) ஜத்திகள் ?ஸ ஜஸ்ரீகுலோஸத் துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழஜம**
**4) ண்டலமான மும்முடிஸசோழ மண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க வி**
**5) ஜயவாகு தே3வற்கு வீராபி4ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட**
**6) ஜநேமி பூசை காலஸங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு4வுமாந திருக்கோ**
**7) ஜ யி லை ஸ யு டை ய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய**
**8) நாற்கு ச0ஜக்திஸ ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா**
**9) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பன்னுவித்து நமக்கு ஜப்**
**10) ராப்தமாய்ஸ வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்ஜதுஸ நாட்டில் ல**
**11) ச்சிகாஜதிஸபுரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள் ளிட்ட நில**
**12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய**
**13) மரமும் கீநோக்கிய கிணறும்பேருடரை நீக்கி குடி மக்களுள்பட**
**14) இந்நாஜச்சியார்க்கு திருபப் ஸபடிமாற்றுக்கும் மண்டபக் கொற்று**
**15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோத3கம் ப**
**16) ண்ணிக் குடுத்தேன்இ . லுள் ளாரழிவு படாமல்**
**17) ண்ண..ட்ட ப் பெறுக்கிவுண்டார் கள் ஜஆஸய்**
**18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்**
**18) மாக . . டையார் பி கெங்கைக் கரையிலாயிரங்**
**19) குரால் பசுவைக் கொன்றா ஜர்பாவங்ஸ கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா**
**20. ஹ்மணரைக் கொன்றார் பாவஜங் கொண்ஸடார்கள் மேலொரு**
**21. மாற்றம் விலங்குரைப்பார் .. காலிங்கராயரின்ஜசொல்படிஸ**
**22. த்தியஞ் செய்வார் செய்வித்தார் ||**

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரிய வந்துள்ளன. அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப் போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன. மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அது தோன்றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும் தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே இக்கல்வெட்டின் புகைப்படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந்தேன். பேராசிரியர் இரகுபதியால் கல்வெட்டின் சில பாகங்கள் வாசிக்கப்பட்டு அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவர் அவ்வப்போது எனக்கு தெரியப்படுத்தியிருந்தார். இந்நிலையில் தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன. தென்னிந்தியாவில் நீண்ட கால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற்றாண்டிலிருந்து ஒரு பேரரசாக எழுச்சியடைந்த போது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர், இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர். இது முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993 இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது. கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டதாக சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம். சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. இதன்படி இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன. திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன. அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலநறுவையைத் தலைநகரகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி.1070 இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. இதை உறுதிப்படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது. பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்களில் மும்முடிச் சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும் தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் இப்பகுதியில் சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்கசோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது. மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதிமுக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பேராசிரியர்.சுப்பராயலு இக்கல்வெட்டில் (வரிகள் (35) வரும் “ஸ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம்” என்ற சொற்தொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுளார். பேராசிரியர் இந்திரபாலா இத்தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215 இல் பொலநறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத்துகின்றார். அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான் என்பதற்கு 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார். இவற்றிலிருந்து இலங்கையை வெற்றிகொண்டு பொலநறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், குலோத்துங்கசோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த்தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப் படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரநிதியாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 1178 , 1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. இங்கே கலிங்கமாகன் பொலநறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது. இதனால் குலோத்துங்கசோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும்.

பொலநறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல் நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந்நிலையில் சோழ, கேரள தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கைமீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215 இல் பொலநறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது.

இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும் சிங்கள தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்த போது கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெத்துவந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன. சில அறிஞர்கள் இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்திலிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர். இந்நிலையில் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டில் கலிங்கமாகன் கங்கை வம்சத்துடனும் கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும் படையெடுப்புகள் மூலம் கலிங்கநாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப்பரணியும் சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கரவர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்புபடுத்தி பேராசிரியர் இந்திரபாலாவால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கட்டுரையை மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 810 வரிகளில் வரும் “திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து” என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில்(காமக் கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது. பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது.

அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும். கோமரன்கடவல சிவன்கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற சொற்தொடரால் தெரிகின்றது.

காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக் கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை இக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திற்கும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களை கொன்ற பாவத்திற்கும் ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும் காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும் விளக்கங்ளும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. முதலில் '“ஸ்வயம்புவுமாந திருக்கோ (ணமலை) யுடைய நாயநாரை” என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி “ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை” எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக் கொண்டுள்ளார்.

இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும். மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை “லச்சிகாமபுரம்” என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார்.

இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர(வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தாகும். பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் “மாநாமத்துநாடு” என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார். இக்கூற்றை பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார். இக் கல்வெட்டில் "பற்று" என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் "பத்து" என அழைக்கப்படுகின்றது.

இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்தாலும் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டைப் படியெடுக்க வேண்டியிருந்தது.

ஆயினும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்கவேண்டியிருப்பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும்.

இவ்விடத்தில் இக்கல்வெட்டைப் படிப்பதற்கும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணரவும் உதவிய என் ஆசிரியர்களுக்கும் எனது தொல்லியல் பட்டதாரி மாணவர்களுக்கும் ஆய்விடத்தை அடையாளப் படுத்திக் காட்டியதுடன் எம்முடன் இணைந்து பணியாற்றிய திருகோணமலை நண்பர்களுக்கும் என் நன்றிகள்.







பேராசிரியர்
ப. புஸ்பரட்ணம்...

## போரில் இறந்தவர்களை ...

காலத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு அரசாங்கம் அனுமதித்திருந்தது. தற்பொழுது மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு நீதிமன்ற தடையுத்தரவுகளை பொலிஸார் பெற்று வருகின்றனர்.

இது தொடர்பில் அமைச்சர் என்ற வகையில் என்ன தெரிவிக்கின்றீர்கள் என ஊடகவியலாளர் வினவினார். அதற்கு பதில் அளித்த அமைச்சர், ஆட்சிக்கு ஆட்சி மாற்றங்கள் உள்ளது. இப்பொழுது பார்த்தீர்களெனில், அந்த ஆட்சியை சேர்ந்தவர்கள் அன்று அரசாங்கத்திற்கு எதிரான கோசத்தில் 'நந்தி ஒழிக' என்று குறிப்பிட்டிருந்தார்கள். நந்தி என்பது தமிழ் மக்களுடையதும், இந்து மக்களுடையதும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழிபாட்டு சின்னம். ஆனால் இவர்கள் நந்தி ஒழிக என்று போட்டுள்ளார்கள். அவர்கள் நாட்டையும், மக்களையும், தவறாக வழிநடார்த்த முற்படுவதாகதான் அன்று மேற்கொண்டிருந்தார்கள். ஆனால், இறந்தவர்களை அவர்களது உறவுகள் நினைவுகூர்வதும், அதற்காக பிரார்த்தனை செய்வதெல்லாம் பிரச்சினை அல்ல. இதை ஒரு அரசியல் நடவடிக்கையாக முன்னெடுக்கும்போதுதான் பிரச்சினைகள் வரும், வந்தும் உள்ளது. இதைதான் அன்று முதல் நான் சொல்லி வருகின்றேன் என அவர் தெரிவித்தார்.

## தமிழ் அரசியல்...

கள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை தொடர்பில் பேசியிருந்தேன்.

அப்போது அவரிடம் இருந்து வந்த பதிலில் அரசியல் கைதிகள் தொடர்பாக உள்ளே இருப்பவர்கள் தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பேசியுள்ளார். மிக விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குறிப்பிட்டார். இது தொடர்பில் ஜனாதிபதி தன்னிடமும் தெரிவித்ததாகவும் தெரிவித்தார். இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள். மகாவம்சத்தில் தமிழ் பௌத்த துறவிகள் இருந்தமைக்கான ஆதாரம் உண்டு. தமிழ் மக்களின் வழிபாட்டுக்கான உரிமை மறுக்கப்படும் இடங்களை பார்வையிடுவதாக தெரிவித்தார். குருந்தூர் மலையில் கதிர்காமம் போன்று இரு மதத்தினரும் வழிபடக் கூடிய நிலை வருவதனை தான் விருப்புவதாக தெரிவித்தார். நாம் இணைந்து வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார். மாவீரர் தினம் தொடர்பில் கேட்டிருந்தேன். பல்வேறு காலங்களிலும் மரணித்த மாவீரர்களை நினைவு கூர உரிமை உள்ளது எனத் தெரிவித்தேன். இந்த விடயம் தொடர்பில் தான் முழுமையாக பதில் செல்ல முடியாது எனவும், இருந்தாலும் விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக மேற்கொண்ட விடயம் தவறு. அதற்கு அனுமதிக்க முடியாது. உங்களுடைய வலிகள், பிரச்சினைகளை புரிந்திருந்தாலும் இதற்கான பதிலை வழங்கக் கூடிய நிலையில் இல்லை. எங்களுடன் சேர்ந்து இவற்றை மறந்து நீங்கள் பயணிக்க வேண்டும் எனக் கூறினார். இதைவிட பிரச்சினையான பல விடயங்கள் இருக்கின்றன. சாப்பாடு இல்லை, வீடு இல்லை, தண்ணீர் இல்லை இவை பற்றி நாம் பார்ப்போம் எனத் தெரிவித்தார்.

## அரசை எதிர்த்து நின்று...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

சஹ்ரானினால் நிகழ்த்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் காரணமாக முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. நல்லாட்சி காலத்தில் தான் இந்த தாக்குதல் இடம் பெற்றது என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. சஹ்ரானை பற்றி நூற்றுக்கும் அதிகமான முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும் நல்லாட்சி அரசில் யாருமே அதனை கவனத்தில் கொள்ளவில்லை. அதன் விளைவுகளையே இன்று அனுபவிக்கிறோம் என்பதை முஸ்லிம் சமூகம் விளங்கிக்கொள்ள வேண்டும். திகன பிரச்சினையும் கூட நல்லாட்சி அரசின் காலத்தில் தான் நடந்தது.

20 ஆம் திருத்தத்தை நாம் ஆதரவளித்த நாளில் இருந்து எங்களை விமர்சிக்கவென்றே சில கூட்டங்கள் செயற்பட்டு வருகின்றன. முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமைகளை எவ்வாறு வெற்றிகொள்ள வேண்டும் என்றோ எவ்வாறு ஜனநாயக ரீதியிலே ராஜதந்திரமாக காய்நகர்த்த வேண்டும் என்றோ புரிந்துகொள்ளாமலும் நாட்டின் நிலைமைகளை உணராமலும் வெளியில் இருந்து வெறுமனே பேசிக்கொண்டு இருப்பதால் எந்த நன்மையும் அடைய முடியாது. அரசை எதிர்த்து நிற்பதால் நாம் எதனையும் சாதித்துவிட முடியாது. நாட்டிலே சிறுபான்மை சமூகமாக உள்ள நாம் அரசாங்கத்துடன் இராஜதந்திர ரீதியில் காய் நகர்த்தி எமது விடயங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் எந்த இலாப நோக்கத்திற்காகவும் இந்த அரசாங்கத்துடன் இணையவில்லை, அரசிடமிருந்து எமக்கு 5 சதமும் தேவையில்லை, எமது சமூகத்திற்காக இந்த எம்.பி பதவியை கூட தூக்கி வீச நாம் தயாராக இருக்கிறோம்.

நாம் அரசுடன் இணைந்து செயற்படுவதால் தான், எமது சமூகம் சார்ந்த பல விடயங்களை பேசித் தீர்க்க முடிந்துள்ளது. அரசை விமர்சிப்பதால் மாத்திரம் எதனையும் சாதித்துவிட முடியாது.நாம் அரசு டன் இணைந்து செயற்படுகின்ற காரணத்தினால் தான், எமது சமூகம் சார்ந்த பல விடயங்களை பேசித் தீர்க்க முடிந்தது. நாம் அரசு டன் இணைந்து செயற்படுகின்ற காரணத்தினால் தான், எமது சமூகம் சார்ந்த பல விடயங்களை பேசக்கூடியதாக உள்ளது.

எமது சமூகம் முகங்கொடுக்கும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம். பல இடங்களில் காணிப் பிரச்சினைகள் உள்ளன.அது தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அரசாங்கத்துடன் கைகோர்த்து எமது தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து வருகிறோம் என்றார்.

## வரவு – செலவு திட்டத்தின் ...

ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தின் 2022ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இம்மாதம் 12ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதனைத்தொடர்ந்து, வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகி, ஏழு நாட்களாக நடைபெற்ற நிலையில், இன்று 22ஆம் திகதி மாலையுடன் நிறைவடைகிறது.

அதனைத்தொடர்ந்து, இரண்டாம் வாசிப்பு மீதான வாக்களிப்பையடுத்து நாளை 23ஆம் திகதி முதல் குழு நிலையிலான விவாதம் இடம்பெறவுள்ளது. இந்த விவாதம், சனிக்கிழமை உள்ளடங்கலாக டிசம்பர் 10ஆம் திகதி வரை 16 நாட்கள் விவாதம் இடம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து, வரவு – செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 10ஆம் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணாமலாக்கப்பட்டவர்களை...

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களிற்கு தமிழில் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் 20 ஆவணங்களை சமர்ப்பித்தாலே காணாமலாக்கப்பட்டவர்களை கண்டுபிடிக்கமுடியும் என காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

காணாமல்போனவர்கள் குறித்த முறைப்பாடு கிடைத்துள்ளதை உறுதிசெய்கின்றோம் என தனது கடிதத்தில் தெரிவித்துள்ள காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் போதுமானவையல்ல என குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட கடிதத்தில் புள்ளியிடப்படாத ஆவணங்களை கோருகின்றோம். அவற்றை மாத்திரம் அனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் என காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகத்திற்கான விண்ணப்பம், காணாமல் போனவரின் தேசிய அடையாள அட்டை, வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம் காணாமல்போனவரின் அடையாள அட்டை இலக்கம், பிறப்பு அத்தாட்சி பத்திரம், உட்பட 20 ஆவணங்களை காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் கோரியுள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்கள் உயிரிழந்து விட்டனர் என அவர்களது குடும்பத்தினரை ஏற்கச்செய்யும் மரணச்சான்றிதழ்களை காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என அரசாங்கம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வரும் நிலையிலேயே 20 ஆவணங்களை காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் கோரியுள்ளது.

மரணச்சான்றிதழ்களை உறவினர்கள் ஏற்றுக்கொண்டால், குறிப்பிட்ட நபர் உயிரிழந்துவிட்டார் என தெரிவித்து அவரை தேடும் நடவடிக்கைகளை நிறுத்தலாம். மேலும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் நடவடிக்கைகளையும் கைவிடலாம்.

## சிறிதரன் MP க்கு எதிராக...

பாராளுமன்றத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரை தரக்குறைவாக பேசியதைக் கண்டித்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபனின் ஆதரவாளர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரும் இணைந்து (20) குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், அங்கிருந்து ஊர்வலமாக பசார் வீதி ஊடாக பழைய பஸ் நிலையத்திற்கு சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அவர்களுக்கு எதிராக கோசங்களை எழுப்பியதுடன், பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் கொடும்பாவி மீதும் தாக்குதல் நடத்தி அதனை எரியூட்டினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் 'கள்ள வாக்கு சிறிதரனே கல்வியைப் பற்றி பேசாதே, வீண் வாய் பேச்சு சிறிதரனே 20 வருடம் ஏமாற்றியது போதாதா, கள்ளவாக்கு போட்டதை ஒத்துக் கொண்ட சிறிதரனே கல்வி பற்றி பேசுகிறாயா, மறக்கவில்லை சிறிதரனே உன் பிரதேசவாத பேச்சை, கணனி துறையில் சாதித்த திலீபன் எம்.பியை தரக்குறைவாக பேசாதே, கள்ள வாக்கு நாயகனே உனக்கு என்ன தகுதி உண்டு திலீபன் எம்.பி பற்றி பேசுவதற்கு, சிறிதரனே அபிவிருத்தி உமக்கு மட்டும் ராஜபோக வாழ்க்கையா' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர். இறுதியில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கொடும்பாவி எரியூட்டப்பட்டதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈபிடிபி) உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரதேச மட்ட இணைப்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## அரசாங்கத்தை அரசாங்க ...

உத்தரவை பிறப்பித்துள்ளது.

சமூக ஊடகங்களில் அரசாங்கத்தை விமர்சிக்கும், கருத்துக்களை வெளியிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என அரசாங்க ஊழியர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலாளர்கள், கிராமசேவகர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டை தொடர்ந்தே அரசாங்கத்திடமிருந்து இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

அரசசேவைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களை பதிவிடுவோருக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுக்கலாம் என தெரிவிக்கும் சுற்றுநிருபமொன்று வெளியாகியுள்ளது. ஏற்கனவே சமூக ஊடகங்களில் கருத்துக்களை பதிவு செய்தவர்களை கண்டுபிடிப்பதற்காக தகவல்தொழில் நுட்ப நிபுணர்களின் உதவியுடன் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக உள்துறை அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலாளர்கள் தங்களிற்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களிற்கு இது குறித்து அறிவுறுத்தவேண்டும் என உள்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அரசாங்கத்தை விமர்சிக்கும் கருத்துக்கள் அதிகரிக்கின்றன. சிரேஷ்ட அமைச்சர்களும் விமர்சனத்திற்கு உள்ளாகின்றனர். கிராமசேவையாளர்களே அதிகளவு விமர்சனங்களை முன்வைக்கின்றனர் என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## TNA எம்.பிமாருக்கு...

இடையூறு ஏற்படுத்தியிருந்தனர்.

அத்துடன் புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினை ஒத்த கொடிகளைச் சுமந்தவாறு மண்டபத்திற்கு வெளியே ஆர்பாட்டத்தையும் முன்னெடுத்தனர்.

தங்களுக்கு அரசியல் தீர்வுத் தேவை இல்லை என்றும் தனித் தமிழீழமே தீர்வாக அமைய வேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக குறித்த பகுதிக்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை தொடர்ந்து, 45 நிமிடம் தாமதமாகி குறைவான மக்கள் பங்குபற்றுதலுடன் கூட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இதன்போது,கூட்டத்தில் மக்கள் தமது கேள்விகளை வாய்மொழியாக கேட்க முற்பட்ட போது அதனை எழுத்துமூலமாக எழுதி தருமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்த நிலையில் அங்கு சற்று பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பல பகுதிகளிலிருந்தும் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மக்கள் தம்மால் எழுத்துமூலமாக கேள்விகளை வினவ முடியாதென தெரிவித்த நிலையில், வாய்மொழியாக கேள்விகளை கேட்க பின்னர் ஏற்பாட்டாளர்கள் அனுமதித்துள்ளதுடன், குறைந்தளவிலான மக்கள் பங்குபற்றுதலுடன் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கூட்டம் இடம்பெற்ற மண்டபத்திற்குள் நுழைந்து சாணக்கியன் மற்றும் சுமந்திரன் ஆகியோரை அங்கிருந்து வெளியேறுமாறு குழப்பத்தில் ஈடுபட்டதாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த பதற்றமான சூழ்நிலை காரணமாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மண்டபத்திலிருந்து முழுமையாக வெளியேறியுள்ளதுடன், மண்டபத்தினை ஆர்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்துள்ளதுடன் கூட்டம் பதற்றமான சூழ்நிலையில் இடம்பெற்றதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சிங்கள மக்களுக்கு ஆதரவாளராக செயற்படுவதாகவும் எதிர்ப்பாளர்கள் குற்றம் சுமத்தினர். ஏற்கனவே சுமந்திரன் இவ்வாறு வெளிநாடுகளில் கலந்து கொண்ட பல நிகழ்வுகளில் இவ்வாறான எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்ட சட்ட நிபுணர்கள் குழு அங்கு சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர்.

## வீடு அல்ல காணி...

வீடுகளுக்காக நாம் சண்டை போடுகிறோம். ஆனால் 150 வருடங்களாக அந்த மக்களுக்கு காணி உரிமை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார். வரவு செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

2021 வரவு செலவு திட்டத்தில் பல வேலைத்திட்டங்களை முன்வைத்தாலும் கொவிட் தொற்றினால் நாம் நினைத்த அளவு அவற்றை செய்ய முடியாமல்போனது. ஒதுக்கப்பட்ட நிதியில் அதிகம் கொவிட் கட்டுப்பாட்டுக்கே செலவிடப்பட்டது. மஸ்கெலியாவில் இரண்டு வைத்தியசாலைகளை புதுப்பித்தோம். எமது முன்னெடுப்புகளின் காரணமாக கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையை 35வரை குறைக்க முடிந்தது. எமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் பாரிய தொகையை கொவிட் கட்டுப்பாட்டுக்காக செலவிடப்பட்டாலும் எங்களால் முடிந்த அபிவிருத்திகளை மேற்கொண்டோம். நெடுஞ்சாலை அமைச்சின் உதவியுடன் மலையகத்தில் பாதை அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாக மலையகத்தில் வீதி அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. தற்போது 350க்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் நீள வீதிப் பணிகள் இடம்பெறுகின்றது.

அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டுத்துறை என்பன தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். அதாவது இந்த மூன்று விடயங்களும் மலையகத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இந்த மூன்றுக்கும் முக்கியத்துவம் வழங்கினால் நிச்சயமாக மலையகத்தை முன்னேறமுடியும். மலையகத்தில் ஸ்மாட் வகுப்பு உருவாக்க 250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பது முக்கிய அம்சமாகும். அரசாங்கம் தோட்ட வீடமைப்புக்கு வெறும் 500 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாக எதிர்க்கட்சி விமர்சிக்கிறது. ஆனால் 500மில்லியனுக்கு மேலதிகமாகவே வீடமைப்புக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது எமது அமைச்சுக்கு இரண்டாயிரத்தி 471மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிதியை கொண்டு மலையகத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை விரைவில் அறிவிப்போம். கொவிட் காலத்தில் அபிவிருத்தி இடம்பெறவில்லை என யாருக்கும் கூற முடியாது.

மலையத்துக்கு இருக்கும் பிரதான பிரச்சினை வீடமைப்பு அல்ல. காணி பிரச்சினையேயாகும் மலையகத்துக்கு இந்திய அரசாங்கத்தினால் 14ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்ட இருக்கின்றன. எமது அரசாங்கத்தினால் வருடத்துக்கு ஆயிரம் வீடுகள்தான் நிர்மாணிக்க முடியும். ஒரு இலட்சம் வீடுகள் மலையகத்துக்கு தேவைப்படும் நிலையில் 14ஆயிரம் வீடுகளுக்காக நாங்கள் சண்டை போட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆனால் 150 வருடங்களாக வாகழும் அந்த மக்களுக்கு காணி உரிமை இல்லை. ஆனால் 30வருடத்துக்கு முன்னர் வந்த துறைமாருக்கு காணி உரிமை இருக்கின்றது. இது எந்தளவுக்கு நியாயம். எமது மக்கள் நினைத்தால் அவர்களுக்குரிய வீடுகளை கட்டிக்கொள்ள முடியும். அந்த வசதிகள் அவர்களுக்கு இருக்கின்றன. என்றாலும் சொந்த காணியில் வீடு கட்ட வேண்டும் என்றே இருக்கின்றனர்.

அதனால் அந்த மக்களுக்கு வீடு வழங்குவதைவிட அவர்களுக்கு சொந்தமாக காணி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். எமது கட்சியின் இலக்கும் அந்த மக்களுக்கு காணி பெற்றுக்கொடுப்பதாகும்.

## இரசாயன உர இறக்குமதிக்கு ...

பரவலாக செய்தி வெளியாகியுள்ளது. உரிய தரத்தில் தரமான தாவர சத்துகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தினகரன் வினவியதற்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இரசாயனப் பசளை இறக்குமதியை தடை செய்யும் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று குறிப்பிட்ட அவர், சேதனப்பசளை பயன்பாட்டுக்கு தேவையான அனைத்து முன்னெடுப்புகளும் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

இரசாயனப் பசளை இறக்குமதியை அரசாங்கம் அண்மையில் நிறுத்தியதோடு சேதனப்பசளை பயன்பாட்டை ஊக்குவித்து வருகிறது. இதற்கு எதிராக சில விவசாய அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஆனால் அரசாங்கம் இந்தியாவில் இருந்து நெனோ நைட்ரஜன் திரவ உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. ஆனால் இரசாயனப் பசளை இறக்குமதிக்கு அனுமதி வழங்குமாறு சில தரப்பினர் தொடர்ந்து கோரிக்கை முன்வைத்து வந்த போதும் அரசாங்கம் தொடர்ந்தும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது. சேதனப்பசளை ஊக்குவிப்பிற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு விவசாயிகளின் உற்பத்தி குறைந்தால் இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது தெரிந்ததே.

## நோய் அறிகுறிகள்...

குறித்த அறிவுறுத்தலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை,

மாணவர் ஒருவருக்கு கொவிட்19 தொற்று உறுதியானதாக சந்தேகித்தாலோ அல்லது தொற்று உறுதியானாலோ பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய முறைமைகள் அடங்கிய சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வாறு மாணவர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டால், அவர்களைத் தனிமைப்படுத்துவதற்கான தனி இடம் ஒன்று பாடசாலைகளில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளின் நுழைவாயிலில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உடல்நலம் குறித்துக் கண்காணிப்பது அத்தியாவசியமாகும்.

மாணவர் ஒருவருக்கு தொற்று உறுதியானால் உடனடியாக பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அறிவிக்க வேண்டும்.

அத்துடன், அந்தப் பகுதிக்குப் பொறுப்பான சுகாதார தரப்பினருக்கு அறியப்படுத்துமாறும் குறித்த சுகாதார வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது

## குறைவான வளப்...

பாரிய வேலைத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தும் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள முழுமையான ஊழியர்கள் மற்றும் வாகன எண்ணிக்கை என்பன, நல்லாட்சிக் காலத்திலிருந்த ஊழியர் மற்றும் வாகன எண்ணிக்கையில் மூன்றில் ஒரு (1/3) பகுதியாகும்.

விடயம் இவ்வாறு இருக்கும் போது, சரியான தகவல்கள் அல்லது தரவுகளை ஆய்வு செய்யாமல், ஜனாதிபதி அலுவலகத்தின் வாகனப் பயன்பாடு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, (19) பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானதும் சரிவர ஆய்வு செய்யாமலும் முன்வைக்கப்பட்டவை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். ஜனாதிபதி உள்ளிட்ட ஜனாதிபதி அலுவலகத்தில் சேவை புரிகின்ற எந்தவோர் அதிகாரியும் வாகனத் தொடரணியைப் பயன்படுத்துவதில்லை என்பதை பொறுப்புடன் கூற வேண்டும்.

அதேபோன்று, அதிகாரிகள் தமது பதவிக்குரிய வாகனத்தைக்கூட பயன்படுத்தாது, கடமைக்கு ஏற்ற வகையில் பட்டியலில் உள்ள வாகனங்களையே குறித்த கடமையை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

அதனால், சந்திம வீரக்கொடி உண்மையான விடயத்தை அறியாது, இவ்வாறு தவறான தகவல்களை முன்வைப்பது வருந்தத்தக்க விடயமாகுமென ஜனாதிபதி அலுவலகம் சுட்டிக்காட்டுகின்றது.

## இரு வாரங்களில்...

சமீபத்திய சீரற்ற காலநிலை, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணிகளால் இலங்கையில் எரிவாயு தேவை அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் எரிவாயு ஏற்றிவந்த கப்பல் நேற்று நாட்டுக்கு வந்தடைந்ததாகவும், எரிவாயுவை இறக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனக பத்திரத்ன கூறினார்.

இதேவேளை, காஸ் விநியோகம் சீராக இடம்பெற சுமார் 150,000 சிலிண்டர்கள் தேவைப்படுவதாக எரிசக்தி துறை வட்டாரங்கள் கூறுகின்றன. சமீபத்திய வாரங்களில் விநியோக நெருக்கடி காரணமாக லிட்ரோ மற்றும் லாப்ஸ் காஸ் விற்பனை நிலையங்களில் வரிசைகள் காணப்பட்டன. சந்தைக்கு வந்த காஸ் விரைவாகத் தீர்ந்துபோனது. இது பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.

இந்நிலையில் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு லிட்ரோ மற்றும் லாப்ஸ் காஸ் சந்தைகளில் இலகுவாகக் கிடைப்பதை உறுதி செய்யுமாறு அரசு வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 998 kg வெடிபொருட்கள் ...

பரிசோதகர் தலைமையில் சென்ற பொலிஸாரே இந்த வெடிபொருட்களை சனிக்கிழமை கைப்பற்றினர்.

கடற்படையினர் பொலிஸாருக்கு வழங்கிய இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் ஜெயதிலக தலைமையில் சென்ற மன்னார் பொலிஸார், சாந்திபுரத்தில் ஒரு வீட்டை முற்றுகையிட்டு சோதனைக்கு உட்படுத்தியபோது 998 கிலோ கிராம் வெடி பொருட்களை கைப்பற்றினர். இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இந்த வெடிபொருள் மீன்பிடிக்காக பாவிக்கப்படுபவை என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் 55 வயதான நபர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பதுளை சிறையில் 12 ...

பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகா' பியல் பத்ம தெரிவித்துள்ளார்.

95 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 12 கைதிகளுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மத்திய வங்கி ஆளுநர்..

யின் சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் பயனடைந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, வசாவிளான் இயற்கை உர தோட்டம் உள்ளிட்ட சிலவற்றை பார்வையிட்டதுடன் பயனாளிகளுடனும் கலந்துரையாடினார்.

நேற்று (21) காலை இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் விசேட கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்த மத்திய வங்கி ஆளுநரது விஜயம் முக்கியத்துவமானதாக காணப்படுகிறது.

## கருத்துத் தெரிவிக்கும்... (03ஆம் பக்கத் தொடர்)

வேலைப்பளுவினால் அமைச்சர் வராதிருக்கலாம். சில முக்கிய காரணம் நிமித்தம் அவருக்கு வெளியில் சென்றுவரமுடியும் என தெரிவித்தார்.

மேலும் நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ளது. உற்பத்தியின் சரிவு இதுவரை உலகில் வர்த்தக போக்கை மாற்றியுள்ளது என தெரிவித்த சபாநாயகர், இதனை மக்கள் புரிந்து கொண்டு பொறுமையுடன் செயற்பட வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

## 'ஒரே நாடு, ஒரே சட்டம்'... (03ஆம் பக்கத் தொடர்)

“ஒரே நாடு, ஒரே சட்டம்” என்பதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

பேராசிரியர் ஷாந்தி நந்தன வீரசிங்க, அய்யம்பிள்ளை ஆனந்தராஜா உள்ளிட்ட செயலணியின் உறுப்பினர்கள், செயலணியின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளருமான ஜீவந்தி சேனாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கைக்குள் “ஒரே நாடு, ஒரே சட்டம்” என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினர் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் கருத்துகளைக் கருத்திற்கொண்டு, செயலணியின் நோக்கத்துக்கமைய அவற்றை ஆராய்ந்த பின்னர், அதன் அடிப்படையில் இலங்கைக்கு ஏற்ற வகையில் செயற்திட்ட வரைபு ஒன்றைத் தயாரிப்பதற்காக, 2021 நவம்பர் 30ஆம் திகதியன்று இந்தச் செயலணி உருவாக்கப்பட்டது.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி

த.பெ. எண். 504, கொழும்பு.

என்ற முகவரிக்கு அல்லது ocol.consultations@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, உங்களுடைய கருத்துக்கள் மற்றும் யோசனைகளை அனுப்பி வைக்க முடியும். இன்று முதல், தனிப்பட்ட முறையிலும் இச்செயலணிக்கு கருத்துகளைத் தெரிவிக்க முடியும் என்று செயலாளர் அறிவித்துள்ளார்.

# தம்புள்ள மாநகர சபை

## 2022ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கை

தம்புள்ள மாநகர சபையின் 2022ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் அடங்கிய குறை நிரப்பு வரவு செலவுத்திட்ட அறிக்கை 2022.11.23 முதல் 07 நாள் காலத்திற்கு தம்புள்ள மாநகர சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பொதுமக்களின் பிரிசீலனைக்காக திறந்திருக்கும் என மாநகர சபை சட்டவாக்கத்தின் (252ஆம் அதிகாரம்) 212(அ) பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**2021 நம்பர் 19ம் திகதி**
**தம்புள்ள மாநகர சபை அலுவலகத்தில்**

**எச்.எச்.ஏ.டி.ஜே.எச். ஓபாத்த**
**நகர முதல்வர்.**

# பண்டாரவளை மாநகர சபை

## 2022 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் காலத்தின் நீடிப்பு

2021.10.05 ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியுஸ் பத்திரிகைகளில் வெளியான 2022 ஆம் ஆண்டுக்காக விண்ணப்பதாரர்களை பதிவு செய்யும் விளம்பரத்தின் விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2021.12.15 ஆம் திகதி பி.ப. 2.00 வரை நீடிக்கப்படுகிறது.

மேலும், மேலுள்ள திகதியில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் ஏனைய விடயங்கள் அவ்வாறே செல்லுபடியாகும்.

**2021.11.16**
**பண்டாரவளை மாநகர சபையில்.**
**கையொப்பமிட்டவர் - ஜனக்க நிசாந்த ரத்னாயக்க**
**நகர பிதா**

# பொதுமக்களுக்கான அறிவித்தல்

## 1979ம் ஆண்டின் 48ம் இலக்க (திருத்தப்பட்ட) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 13ம் பிரிவின் கீழ் ஆலோசனை சபையை நிறுவுதல்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி அவர்களால் 1979ம் ஆண்டின் 48ம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 13 இன் கீழ் கீழ்வரும் உறுப்பினர்கள் ஆலோசனை சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதியரசர் ஜே.என்.டி.சில்வா - ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் - தலைவர் திரு. சுகத கம்லத்- ஜனாதிபதி சட்டத்தரணி ஓய்வு பெற்ற சொலிசிட்டர் ஜெனரல் - உறுப்பினர் திரு எ.எ.ஆர். ஹெய்யன்துடுவ - ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி- உறுப்பினர்

பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபம் 4ம் இலக்க கட்டிடத்தில் 2ம் மாடியில் அறை இலக்கம் 201இல் ஆலோசனை சபையின் காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 1979ம் ஆண்டின் 48ம் இலக்க பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு நபர் சார்பிலும் பிரதிநிதி ஒருவர் ஆலோசனை சபையின் முன் கருத்துத் தெரிவிக்கலாம் என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

யாரேனும் நபர் 1979ம் ஆண்டின் 48ம் இலக்க பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் அல்லது கட்டுப்பாட்டு உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்பின் அவரது பிரதிநிதி ஆலோசனை சபைக்கு எழுத்து மூலமாக அல்லது வாய்மொழி சமர்ப்பணம் மூலமாக கருத்துத் தெரிவிக்கலாம்.

அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற கருத்து தெரிவித்தல் சம்பந்தமாக ஆலோசனை சபையின் பதில் நடவடிக்கை அச்சபையின் செயலாளரால் அறிவிக்கப்படுவதோடு அவ்வறிவிப்பு சம்பந்தமாக தேவைப்படுகின்ற முகவரி மற்றும் வேறு அனுப்பக்கூடிய முறைகள் உங்களால் மேற்கொள்ளப்படுகின்ற விண்ணப்பத்துடன் தெளிவாகவும் குழப்பம் இன்றியும் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**செயலாளர்**
**1979ம் ஆண்டின் 48ம் இலக்க பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஆலோசனை சபை**
**கட்டிட இலக்கம் 04**
**அறை இலக்கம் 201**
**பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபம்**
**கொழும்பு 07**
**தொலைபேசி இலக்கம் : 0112691671**
**தொலை நகல் : 0112691671**
**மின்னஞ்சல் : advisoryboardpta@gmail.com**

# இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2021 நவம்பர் 24ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 61,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122B256** | LKA18222E273** | LKA36422K258** | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 18,000 | 18,000 | 25,000 | 61,000 |

ஏல விற்பனைத் திகதி : 2021 நவம்பர் 24
தீர்ப்பனவுத் திகதி : 2021 நவம்பர் 26
வழங்கப்படும் திகதி : 2021 நவம்பர் 26
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2021 நவம்பர் 24, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

* * வங்கி விடுமுறை நாளொன்றில் முதிர்ச்சி வருகின்றவிடத்து திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளுக்கு புதிய விடுமுறை விதிமுறை ஏற்புடையதாகும். அதாவது 2022 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும் கொடுப்பனவுகள், உடனடியாகத் தொடர்ந்து வருகின்ற அலுவல் நாளன்று மேற்கொள்ளப்படும்.

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


# பாரிய ஏல விற்பனை

S&S SINCE 1892 · CELEBRATING 125 Years

## கனரக இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் கட்டுமான உபகரணங்கள்

## 2021 நவம்பஇ 27 சனிக்கிழமை

கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள
BMICH இன் "மிஹிலக்க மெதுர" மண்டபத்தில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

கெப்கள்:
PQ-7427 டாட்டா 207 DI சிங்கிள் கெப் 2011
54-4435 இசுசு டபிள் கெப் 1993

டிரக்குகளும் டிப்பர்களும்:
LD-7878 டைஹட்சு V116HUC ஹாப் டிரக் 1999
LC-4242 இசுசு U-CXZ71JD டிப்பர் 1994

டிரக்குகளும் டிப்பர்களும்:
LC-5858 இசுசு CXZ81K டம்ப் டிரக் 1998
LD-4747 இசுசு CXZ81K டம்ப் டிரக் 1995

மோட்டார் கிரேடர்கள்:
JF-2002 மிட்சுபிஷி MG-300 1998
RS-0696 கொமட்சு 2002
RS-0489 மிட்சுபிஷி MG-230 2001

என்பன உட்பட பின்வருவனவும்

இங்கர்சால் ராண்ட், டைனபேக் மற்றும் XCMG வைபர்டிங் ஏர்த் கொம்பாக்ட் ரோலர்கள், **கொமட்சு மற்றும் கட் டோஸர்கள்**, கோபெல்கோ எக்ஸவேட்டர், **டொயோட்டா மற்றும் TCM போர்க்லிப்ட்டுகள்**, மிட்சுபிஷி மற்றும் சுமிட்டோமோ பேவர்ஸ், **TCM ஸ்கிட் லோடர்ஸ்**, லேலன்ட் 145 ரூபோ கேபின் வித் செஸீஸ், **லேலன்ட் கொமெட் செஸீஸ்**, பிற்றுமின் பவ்சர், **யுனிவேர்சல்**, வென்சன் சன்பேக் அன்ட் சன்வின் கொன்கிறீட் மிக்ஸர்கள், **சக்காய் ரோலர்கள்**, எயார்மேன் எயார் கொம்பிரசர்கள், **போமாக் வேக்கர்ஸ்**, பிற்றுமின் டிரெய்லர் பௌசர், **மருயோ அன்ட் யன்மார் லைட் டவர்ஸ்**, யன்மார் லைட் டவர் ஜெனரேட்டர், **எயார்மேன் அன்ட் டெனியோ ஜெனரேட்டர்கள்**, டிரக்டர் ரெயிலர்கள், **எவர்டிக்ம் பிரேக்கர் இணைப்புகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாரியளவு என்ஜின்கள்**, ஸ்கிராப் என்ஜின்கள், **ஸ்கிராப் கியர் பொக்ஸ்கள்**, ஸ்கிராப் ஜெனரேட்டர்கள், **ஸ்கிராப் லைட் டவர்கள் மொத்தமாக**

**பார்வையிடல்: 2021 நவம்பர் 24 புதன் முதல் 26 வெள்ளி வரை**
**இல. 598/4, அம்பத்தளை வீதி, களனிமுல்ல, அங்கோடை**
**(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)**

விற்பனை நிபந்தனைகள்

- ஏல தின நுழைவு: ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் செல்லுபடியான அடையாளச் சான்றிதழ் மற்றும் COVID 19 தடுப்பூசி பெற்றுக்கொண்டமைக்கான சான்றிதழ் என்பவற்றுடன், பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2,000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 50,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும். சுகாதார அமைச்சின் வழிமுறைகளுக்கு அமைய, முதலில் வந்தவர்களுக்கு முதல் சேவை என்ற அடிப்படையில், கொள்வனவாளர்கள் வரையறுக்கப்பட்ட அளவில் ஏல விற்பனை நிலையத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். பதிவு நடவடிக்கைகளுக்காக காலை 8.30 மணிக்கு நுழை வாயில் திறக்கப்படும்.
- கொடுப்பனவுகள்: விற்பனை முடிவில், மொத்தத் தொகையில் 25% மீளளிக்கப்படாத காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2021 நவம்பர் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர் காசாகச் செலுத்துதல் வேண்டும். அத்துடன், 2021 டிசம்பர் 01 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அங்கிருந்து பொருட்கள் அகற்றப்படுதல் வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு பொருட்களையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- முகாமைத்துவத்தின் / ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®**
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

011 2671468 www.sandslanka.com



S&S SINCE 1892 · FINTREX finance

# பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிட்டெட் மாபெரும் ஏல விற்பனை

105 டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்களும்
முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களும்

## 2021 நவம்பர் 25 வியாழக்கிழமை

கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள
BMICH இன் "மிஹிலக்க மெதுர" மண்டபத்தில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

மோட்டார் கார்கள்:
WP CBJ-2xxx அவுடி - A1 2016
WP CAG-1xxx நிஸான் லீப் 2013
WP KY -5xxx ஹொண்டா FIT GP1 2012
WP KK-9xxx சவர்லெட் 2010
CP GY-4xxx மஸ்டா பாமிலியா 1999

டிரக்குகள்:
NW PX-5xxx மஹிந்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் 2014

மோட்டார் கோச்சுகள்:
SP NG-6xxx நிஸான் டீசல்-KL 2016
SG NA-0xxx அசோக் லேலன்ட் 2005
SP ND-6xxx மிட்சுபிஷி புசோ 2013
WP NB - 4xxx நிஸான் சிவிலியன் 2007
WP JF-1xxx டாட்டா பஸ் 2004
62-2xxx நிஸான்-கெரவன் 1991

முச்சக்கர வண்டி:
WP QS-8xxx பஜாஜ் 4 ஸ்ரோக் 2009

மோட்டார் சைக்கிள்கள்:

பஜாஜ் பொக்சர், **பஜாஜ் CT 100**, பஜாஜ் டிஸ்கவர் 125, **பஜாஜ் பிலெட்டினா**, பஜாஜ் பல்சர் 135, **ஹீரோ டேஷ்**, ஹீரோ கிலெமர், **ஹீறோ HF டிலக்ஸ்**, ஹீரோ ஹங்க், **ஹீறோ ஐ ஸ்மாட்**, ஹீறோ மெஸ்ற்றோ ஏஜ், **ஹீரோ பெஷன் புறோ**, ஹீரோ பிலெஷர், **ஹொண்டா ரிவிஸ்டர்**, ஹொண்டா CD ட்றீம் DLX, **ஹொண்டா டியோ**, ஹொண்டா நவி, **TVS அபாச்சி**, TVS மெட்ரோ, **TVS ஸ்கூட்டி பெப்ட்**, TVS வெகோ, **TVS XL சுப்பர் HD 100**, யமஹா அல்பா, **யமஹா FZ**, யமஹா ரே ZR.

**இப்போது பார்வையிடலாம்:**
**இல. 346, மானெல்வத்த, பொல்லேகல, கோணவல, களனி**
**(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)**

(ஏல விற்பனை தினத்தில் வாகனங்களைப் பரிசோதிக்க முடியாது)

மேலதிக விபரங்களுக்கு **www.sandslanka.com** என்ற எமது இணைய தளத்தைப் பார்க்கவும்.

விற்பனை நிபந்தனைகள்

- **சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.**
- வாகனங்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் தொகுதி அடிப்படையிலேயே அனுமதிக்கப்படுவார்கள்.
- சுகாதார அமைச்சின் வழிமுறைகளுக்கு அமைய, முதலில் வந்தவர்களுக்கு முதல் சேவை என்ற அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அளவில் கொள்வனவாளர்கள் ஏல விற்பனை நிலையத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2,000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தல் வேண்டும். பதிவு நடவடிக்கைகளுக்காக காலை 8.30 மணிக்கு நுழை வாயில் திறக்கப்படும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் **மீளளிக்கப்படாத** 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2021 நவம்பர் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், கொழும்பு 07, தர்மபால மாவத்தை, இல. 101 என்ற முகவரியில் அமைந்துள்ள பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்படுவதோடு, அன்றைய தினமே வாகனத்தையும் அகற்ற வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாராரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®**
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/ பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

CELEBRATING 125 Years

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671465, 011-2671468
தொலை/ பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

011 2671468 www.sandslanka.com


## திகதி 20.11.2021 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4592
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,189,550.00
ஆங்கில எழுத்து: R — வெற்றி இலக்கங்கள்: 0 4 5 7 1 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,782,532.00

**கொவிசெத (Govisetha)** — சீட்டிழுப்பு இலக்கம் : 2887
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,818,820.00
ஆங்கில எழுத்து: D — வெற்றி இலக்கங்கள்: 03 23 58 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,666,730.40

**Mega POWER கோடி 10 மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 940
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,908,980.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 154,086,066.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: H — சுப்பர் இலக்கம்: 02 — வெற்றி இலக்கங்கள்: 02 04 20 45

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 622
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,406,540.00
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 37 63 65 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,235,632.80

**ஜாதிக சம்பத (JATHIKA SAMPATHA)** — சீட்டிழுப்பு இலக்கம் : 1168
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,025,360.00
வெற்றி இலக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 6 5 5 3 8 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,469,540.40
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ட்டத்தை கொண்டு வருகின்றது.

**20.11.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 521,482**
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 23,349,250.00
ரூ. 2,000,000.00 பரிசுகள 01 — ரூ. 1,000,000.00 பரிசுகள 02
ரூ. 100,000.00 பரிசுகள 24

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## திகதி 19.11.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4591
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,296,340.00
ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 5 6 1 3 2 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,250,780.00

**கொவிசெத (Govisetha)** — சீட்டிழுப்பு இலக்கம் : 2886
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,115,080.00
ஆங்கில எழுத்து: E — வெற்றி இலக்கங்கள்: 06 10 12 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,513,234.80

**Mega POWER கோடி 10 மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 939
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,714,720.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 153,862,557.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: T — சுப்பர் இலக்கம்: 09 — வெற்றி இலக்கங்கள்: 11 55 58 65

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 621
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,838,380.00
ஆங்கில எழுத்து: R — வெற்றி இலக்கங்கள்: 21 26 36 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,221,735.60

**சுபிரி வாசனா** — சீட்டிழுப்பு இலக்கம் : 1635
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,590,320.00
சுப்பர் இலக்கம்: 10 — வெற்றி இலக்கங்கள்: 25 27 48 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,000,000.00

**19.11.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 571,312**
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 26,554,840.00
ரூ. 2,000,000.00 பரிசு 02 — ரூ. 1,000,000.00 பரிசு 02
ரூ. 5,000,000.00 பரிசு 01 — ரூ. 100,000.00 பரிசு 20

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# பெறுகை அறிவித்தல்

## சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல்

### களனிப் பல்கலைக்கழகம் இலங்கை

## தளுகம வளாகம் மற்றும் ராகம மருத்துவ பீட வளாகம்

களனிப் பல்கலைக்கழகத்திற்கு உரித்தான கட்டிடங்கள் விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் அதன் சுற்றுச் சூழல்களை சுத்திகரிப்புச் செய்தல் குப்பைகளை அகற்றுதல் மற்றும் ராகம வளாகத்தில் உள்ள மருத்துவ பீடத்தின் கட்டிடங்கள் மற்றும் அதன் சுற்றுச் சூழலை சுத்திகரிப்புச் செய்தல் குப்பைகளை அகற்றுதல்களிற்காக உரித்தான துறையில் 03 வருடங்களிற்குக் குறையாத அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்து முத்திரையிட்ட விலைமனுக்கள் 2021.12.14 அன்று பி.ப. 2.30 வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ்விலைமனு தொடர்பான முன்னோடிக் கூட்டம் 2021.12.07 அன்று மு.ப. 10.30 இற்கு தளுகம வளாகப் பதிவாளரின் அலுவலகத்தில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விலைமனு ஒன்றிற்காக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 2000/-ஐ பல்கலைக்கழக சிறாப்பரிடம் அல்லது மக்கள் வங்கி களனிக் கிளையின் 055100110667549 என்ற கணக்க இலக்கத்திற்குச் செலுத்திப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து விபரக்குறிப்புக்களுடன் கூடிய விலைமனு மாதிரிப்படிவங்களை 2021.12.13 அன்று பி.ப. 2.30 வரை பிரதிப் பதிவாளர் (பொது நிருவாகம்) இடம் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் பல்கலைக்கழகப் பூங்காப் பாதுகாப்பு பொறுப்பாளரிடம் களனிப் பல்கலைக்கழகத்தின் வளாகம் மற்றும் ராகம மருத்துவ பீடத்தின் பிரதிப் பதிவாளரிடம் ராகம மருத்துவ பீடத்தின் வளாகத்தைப் பரிசீலனை செய்வதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனத் தனித்தனி உறைகளில் சேர்த்து முத்திரையிட்டு அவற்றின் இடது பக்க மேல் மூலையில் 'களனிப் பல்கலைக்கழக தளுகம வளாகத்தைச் சுத்திகரிப்பதற்கான விலைமனு' / களனிப் பல்கலைக்கழக ராகம மருத்துவ பீட வளாகத்தைச் சுத்திகரிப்புச் செய்வதற்கான விலைமனு' எனக் குறிப்பிட்டு 2021.12.14 அன்று பி. ப. 2.30 இற்கு முன்னர் களனிப் பல்கலைக்கழக தளுகம வளாகத்தின் பிரதான பாதுகாப்பு அதிகாரியின் அலுவலகத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பொது நிருவாகப் பிரிவின் பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறன்றி உரியவாறு பூரணப்படுத்தப்படாத விலைமனுக்கள் பரிசீலிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

2021.12.14 அன்று பி.ப. 2.30 இற்கு களனிப் பல்கலைக்கழக தளுகம வளாகத்தின் பீடாதிபதி குழு கூட்ட மண்டபத்தில் விலைமனுத் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்.**

2021.11.22

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.பா.)

(மாகாண வீதி போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக வீடமைப்பு நிர்மாணத்துறை தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு (மேல் மாகாணம்)

## ஏபிசிகல் (கலப்பு கல்) மற்றும் கருங்கல் வகைகளை வழங்குதல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் கீழ்க்காணும் நிறைவேற்று பொறியிலாளர் பணிமனை மற்றும் பி. செயலக பிரிவுகளுக்கு தேவையான ஏபிசி கல் (கலப்பு கல்) மற்றும் வகவத்த எஸ்போல்ட் களஞ்சியத்திற்கு தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

### கேள்விச் சுருக்கம்

| கேள்வி இலக்கம் | விபரம் | கருங்கல் $M^3$ | ABC கலப்பு கல் $M^3$ | கேள்விப் படிவக் கட்டணம் (வெட்வரி உடன்) ரூ. | கேள்விப் பிணை பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக ரூ. | வங்கி/காப்புறுதி மூலம் |
| PRDA/WP/ PRO/2021/53 | அவிசாவளை மி. பொ. பணிமனை | - | 2000 | 2000.00 | 32,500.00 | 65,000.00 |
| PRDA/WP/ PRO/2021/54 | கொழும்பு மி.பொ. பணிமனை | - | 3000 | 2000.00 | 48,500.00 | 97,000.00 |
| PRDA/WP/ PRO/2021/55 | மொறட்டுவ மி.பொ. பணிமனை | - | 3000 | 2000.00 | 48,500.00 | 97,000.00 |
| PRDA/WP/ PRO/2021/56 | நிட்டம்புவ மி.பொ. மணிமனை | - | 5000 | 2000.00 | 80,850.00 | 162,000.00 |
| PRDA/WP/ PRO/2021/57 | உடுகம்பொல மி.பொ. மணிமனை | - | 5500 | 2000.00 | 89,000.00 | 177,850.00 |
| PRDA/WP/ PRO/2021/58 | நீர்கொழும்பு ஜாஎல வத்தளை, கட்டான பி.செ. பிரிவிற்காக (நீர்கொழும்பு மி.பொ. பணிமனை | - | 10945 | 2000.00 | 177,000.00 | 354,000.00 |
| PRDA/WP/ PRO/2021/59 | கிரிந்தவெல மி.பொ. பணிமனை | - | 3000 | 2000.00 | 48,500.00 | 97,000.00 |
| PRDA/WP/ PRO/2021/61 | வகவத்த எஸ்போல்ட் களஞ்சியத்திற்கு தேவையான கருங்கல் வகை வழங்குவதற்கான கேள்வி கோரல் (0-5, 5-10, 10-20 அளவுகள்) | 13400 | - | 2000.00 | 192,100.00 | 384,200.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2021.11.12 முதல் 2021.12.03 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணங்களைச் செலுத்தி (அதிகார சபையின் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மேற்படி பெறுகைக்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்களால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2021.12.06 பி.ப. 2.30 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் திறக்கப்படல் அன்றே அந்த நேரத்திலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்.**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, மே.மா.),**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொலைபேசி இல. 011-5676903**

# நோர்வூட் பிரதேச சபை

## 2022ம் ஆண்டிற்கு விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

கீழ்க்காட்டப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் வழங்குபவர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் 2022.01.01ம் திகதி தொடக்கம் 2022.12.31ம் திகதி வரையான காலப்பகுதிக்கு பதிவு செய்து கொள்வதற்காக தகைமையுடைய விநியோகஸ்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், முகவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சகல விண்ணப்பப்படிவங்களும் 2021.12.24ம் திகதிக்கு முன் **"தவிசாளர், நோர்வூட் பிரதேச சபை, டியன்சின் பசார், பொகவந்தலாவை"** என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலின் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து கையளிக்கலாம். தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் **"2022ம் ஆண்டிற்கான விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்"** எனக் குறிப்பிடப்பட வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சேவைகள் வழங்கல் மற்றும் பொருட்கள் விநியோகத்திற்காக தனித்தனியே விண்ணப்பித்தல் வேண்டும்.

**விநியோகஸ்தர்கள்**

| வகை இல. | விபரம் | மீள் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 01 | எல்லா வகையான காகிதாதிகள், இறப்பர் முத்திரைகள் | 1,000.00 |
| 02 | ஹாட்வெயார் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சுக்கள் (எல்லா வகையான ஹாட்வெயார் பொருட்களும், நிறப்பூச்சுக்கள் மற்றும் பளபளப்பாக்கும் திரவியம் பொலிஷ் முதலியன) | 1,000.00 |
| 03 | நலம் காக்கும் மற்றும் சுகாதார சேவைக்குத் தேவையான உபகரணங்கள் (மழை மேலங்கி, பூட்ஸ், பிளாஸ்டிக் வாளிகள், தும்புத்தடி, ஈக்கிள், குப்பை அகற்றுவதற்குத் தேவையான கைவண்டி பங்கசு கொல்லிகள் மற்றும் ஏனைய பொருட்கள்) | 1,000.00 |
| 04 | வீதி மற்றும் கட்டிடப்பொருட்கள் (மெட்டல் கற்கள், கருங்கல், சீமெந்து, மணல், செங்கற்கள், ஓடுகள், சுண்ணாம்பு முதலியன) | 1,000.00 |
| 05 | வாகன உதிரிப்பாகங்கள் (மின்கலம், டயர், டியூப் மற்றும் சகல விதமான உதிரிப்பாகங்கள்) | 1,000.00 |
| 06 | காரியாலய தளபாடங்கள் (மேசை,நாற்காலி, அலுமாரிகள், கோவைகள் வைக்கும் அலுமாரி, இரும்பு அலுமாரி, மற்றும் ஏனைய தளபாடங்கள்) | 1,000.00 |
| 07 | காரியாலய உபகரணங்கள் (நிழற்பிரதி இயந்திரம், மேசைக் கண்ணி, மடிக்கண்ணி, கணணி உதிரிப்பாகங்கள், தொலைநகல் இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் ஏனையன | 1,000.00 |
| 08 | வீதி விளக்கு பொருட்கள், பாதுகாப்புப் பட்டி மற்றும் சகல விதமான மின் பொருட்கள் | 1,000.00 |
| 09 | அனுமதி பத்திர இலக்கத் தகடுகள் | 1,000.00 |
| 10 | விளையாட்டு உபகரணங்கள் (கரம், செஸ், கிரிக்கெட், உதைப்பந்து, வலைப்பந்து மற்றும் கரப்பந்து ஆகியவற்றுக்கு தேவையான உபகரணங்கள் ஏனையன) | 1,000.00 |

**சேவைகள்**

| வகை இல. | விபரம் | மீள் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 11 | அச்சக சேவைகள் மற்றும் புத்தகங்கள் கட்டும் வேலைகள் | 1,000.00 |
| 12 | மோட்டார் வாகனம், இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் சேவைகள் | 1,000.00 |
| 13 | காரியாலய உபகரணங்களைப் பழுது பார்த்தல் (போட்டோ கொப்பி இயந்திரம், பிரதி எடுத்தல் இயந்திரம், கணினி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் முதலியன) | 1,000.00 |
| 14 | அலுவலக தளபாடங்கள் பழுதுபார்த்தல் | 1,000.00 |
| 15 | கட்டிட வரைபட கலைஞர்களை பதிவு செய்தல் (கட்டிட வரைபடங்கள் கீறுவதற்கு) | 1,000.00 |

**ஒப்பந்தக்காரர்கள்**

| வகை இல. | விபரம் | மீள் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 16 | இயந்திர உபகரணம் வழங்குநர் (Backhoe Loader, Lorries & Wacker Machine) | 5,000.00 |

**குறிப்பு:- பதிவு செய்யப்படும் விநியோகஸ்தர்கள் பொருட்களை களஞ்சியசாலைக்கு கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.**

விநியோகஸ்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் தங்களை பதிவுசெய்யும் போது விண்ணப்பப்படிவத்துடன் வியாபார பதிவுச்சான்றிதழின் பிரதியினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் மீளச் செலுத்தப்படாத மேற்குறிப்பிட்ட பதிவுத் தொகையினை **"தவிசாளர், நோர்வூட் பிரதேச சபை"** என்ற பெயருக்கு காசாக/காசோலையாக விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பதிவுக்கட்டணங்கள் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு செயலாளரை தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் :- 052-2267678/052-2267788**

**K.K. ரவி**
**தவிசாளர்,**
**நோர்வூட் பிரதேச சபை**

## கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால் வளர்ப்பு,
மீன்பிடி துறைமுக அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள்
மற்றும் மீன்கள் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

**இலங்கை தேசிய நீரியல் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார சபை**

# வெற்றிடங்கள்

தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்களையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கீழ்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(1) **பதவி: பணிப்பாளர் (கடற்கரை நீரியல் உயிரின அபிவிருத்தி) – HM 1-1**

**தகைமைகள் மற்றும் அனுபவங்கள் - வெளி**

a) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல் விஞ்ஞானம் பற்றி விஞ்ஞானவியல் பொதுப்பட்டம் அல்லது விலங்கின விஞ்ஞானம் அல்லது நீரியல் உயிரினங்கள் வளர்ப்பு / மீன்பிடி நடவடிக்கைகள் பற்றிய விசேட பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் மற்றும் போசனை / விவசாயம் / விலங்கியல் விஞ்ஞானம் பற்றிய ஆரம்ப பட்டம்

மற்றும்

b) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நீரியல் உயிரின வளர்ப்பு / மீன்பிடி நடவடிக்கைகள் துறைக்குரிய முதுமானி பட்டப்படிப்பு (முதுகலைமானி) மற்றும் கூட்டுறவில், கூட்டிணைந்த சபையில்/ நிறுவனமொன்றில் அல்லது வரவேற்கத்தக்க தனியார் பிரிவில் "முகாமைத்துவ மட்டத்தில்" பதவியொன்றில் ஆகக்குறைந்தது 15 வருட முன்னனுபவம்.

**தகைமைகள் மற்றும் அனுபவங்கள் - உள்ளக**

a) NAQDA இல் நீரியல் உயிரின வளர்ப்பு/ நன்னீர்/ கரையோர/ செயற்றிட்ட சேவை முகாமைத்துவ வகுப்பில் (MM) 1 தரத்திலான பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடம் சேவையாற்றிருத்தல்.

**சம்பள அளவு : HM 1-1-2016 ரூ. 81,670 - 15 x 2,270 - 115,720**

**பொது நிபந்தனைகள்**

அரசால்/ மாகாண நிர்வாக திணைக்களத்தில்/ கூட்டுறவில்/ கூட்டிணைந்த சபையில் சேவையாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவக பிரதானிகள் ஊடாக முன்வைக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாகவிருத்தல்.
- பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கு நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.
- 35 வயதுக்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாதவர்களாயிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயதெல்லைகள் கிடையாது.
- விண்ணப்பதாரி சிறந்த உயரிய கதாப்பாத்திரத்தைக் கொண்டிருத்தல்.
- நியமனம் நிரந்தரமாக மேற்கொள்ளப்படும்.

**இலங்கை தேசிய நீரியல் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும் வேறு பிரதிலாபங்கள் கிடைக்கப்பெறும்**

- மருத்துவ பிரதிலாபங்கள்
- அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள பிற தொழில்சார் கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறும்.
- தற்போதைய அரச சுற்றறிக்கைகளின் படி அனுமதிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவுகள் மற்றும் சாரதிகள் அல்லது வாகனக்கொடுப்பனவுகளுடன் வாகனமொன்று இலங்கை தேசிய நீரியல் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும்.
- ஊ.சே.நி மற்றும் ஊ.ந.பொ.நி

**மேல் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்கான உங்கள் விண்ணப்பங்களை அனுப்பும் போது கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்களை முன்வைக்க வேண்டும்.**

- சுயவிபரக்கோவை
- தகைமைகள் மற்றும் முன் அனுபவங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் உறுதிசெய்யப்பட்ட நகல்பிரதி

முழுமையான தகவல்கள் அடங்கிய விண்ணப்பம், விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத்தபாலின் மூலம் "தலைவர்" இலங்கை தேசிய நீரியல் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, இல 41/1 புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்லை, எனும் விலாசத்திற்கு இவ்விளம்பரம் பிரசுரமாகி 14ஆவது நாள் அல்லது அதற்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை தேசிய நீரியல் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை**




## ஜனவரி முதல் மீற்றர் இல்லாத

# முச்சக்கரவண்டிகளுக்கு சட்ட நடவடிக்கை



- இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

எம்.ஏ.அமீனுல்லா

சகல பயணிகள் முச்சக்கர வண்டிகளுக்குமான மீற்றர் கட்டண நடைமுறையை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கட்டாயமாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி 01ஆம் திகதி மேல் மாகாணத்தில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நாடு பூராகவும் விஸ்தரிக்கப்பட்டு அதன் பின்னர் மீற்றர் இல்லாத முச்சக்கர வண்டிகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (20) கண்டி நகர பஸ் போக்குவரத்து சேவையை ஆரமித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அமைச்சர்:

அனைத்து முச்சக்கர வண்டிகளையும் மீட்டர் டக்சிகளாக மாற்றுவதை கட்டாயமாக்கும் வர்த்தமானி அறிவித்தல் கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பான வேலைத்திட்டம் தொடர்பில் முச்சக்கர வண்டி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்படும் வரை அது இன்னும் வெளியிடப்படவில்லை.

என்றும் அவர் தெரிவித்தார்..

கட்டணத்தை காட்சிப்படுத்துவதற்கு மீட்டர்கள் இல்லாததால், இன்று சில முச்சக்கர வண்டி சாரதிகள் அறவிடும் நியாய மற்ற கட்டணங்கள் தொடர்பில் பொது மக்களிடமிருந்து அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

ஆகவே இரு தரப்பினரையும் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், மக்களுக்கு நம்பகமான மற்றும் தரமான சேவையை வழங்குவதே இதன் நோக்கமாகும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## நுவரெலியாவில் விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்தால்

# பொருளாதார மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் பாதிப்பு



ஹற்றன் சுழற்சி நிருபர்

பெரும் போகத்திற்கு தேவையான இரசாயன உரம் மற்றும் விவசாயத்திற்கு தேவையான ஏனைய இரசாயன திரவியங்களை பெற்றுதருமாறு கோரி நுவரெலியாவில் நேற்று விவசாயிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.



பிரதேச விவசாயிகளுடன் இணைந்து தேரர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். போராட்ட பேரணியானது நுவரெலியா காமினி தேசிய பாடசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு பதுளை நுவரெலியா பிரதான வீதியினூடாக நுவரெலியா தபால் நிலையத்திற்கு முன்பாக சென்றடைந்தது.

அங்கு போராட்டமானது தொடர்ந்து சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் சுமார் 2000 பேர் வரை கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்பட்டு, பதாதைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்திற்கு ஆதரவாக நுவரெலியா, கந்தபளை, மீபிலிமான, நானுஓயா ஆகிய நகரங்களில் உள்ள கடைகளை மூடி இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் செயற்பாடுகளும் தடைபட்டிருந்தன.





மலையக கலை பண்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஊடகவியலாளர் வரதன் கிருஸ்ணாவின் 'வெந்து தணியாத பூமி' நூல் வெளியீட்டு நிகழ்வில் ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளரும் கல்வியியலாளருமான நாகலிங்கம் ஐயா, மூத்த தொழிற்சங்க வாதி ஐயாதுரை ஐயா ஆகியோர் கௌரவிக்கப்பட்டதையும் படங்களில் காணலாம்.....

## நாவுல பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் நிறைவேற்றம்

மாத்தளை சுழற்சி நிருபர்

நாவுல பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 15 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாவுல பிரதேச சபையின் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கான அமர்வு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது பிரதேச சபைத் தலைவர் திசநாயக்கவினால் வரவு செலவுத்திட்ட முன்மொழிவு சபையில் முன்வைத்து ஆரம்பித்து வைத்தார். இதனையடுத்து வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் உறுப்பினர்கள் 15 பேர் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் 9 பேரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இரண்டு பேரும் ஜேவிபி உறுப்பினர் ஒருவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களில் 4 பேரில் மூவர் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். மற்றுமொருவர் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

## மாத்தளை போகஹகொடுவ வீதி ஒன்பது கோடி ரூபாய் செலவில் அபிவிருத்தி



மாத்தளை சுழற்சி நிருபர்

சுபிட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய நாடு முழுவதும் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதி அபிவிருத்தி செய்யும் வேலை திட்டத்தின் கீழ் மாத்தளை மாநகர சபைக்குட்பட்ட போகஹகொடுவ வீதி 9 கோடி ரூபாய் செலவில் காபட் இட்டு அபிவிருத்தி செய்யப் படவுள்ளது.

வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக கோட்டேகொட இதன் ஆரம்ப பணியை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வில் மாத்தளை மாநகரசபை முதல்வர் எஸ். பிரகாஷ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## மத்திய மாகாணத்தில் 08 மாதங்களில்

# 11 பெண்கள் கொலை,12 பெண்கள் உட்பட 94 சிறுவர் துஷ்பிரயோகம்

### சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவு

தம்புள்ள தினகரன் நிருபர்

இவ் வருடத்தின் முதல் 08 மாத காலப் பகுதியில் மத்திய மாகாணத்தில் 11 பெண்கள் கொலை செய்யப்பட்டிருப்பதுடன்,குறித்த அதே 08 மாத காலத்தில் 94 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் பதிவாகியிருப்பதாக மத்திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ் வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையிலான முதல் 08 மாத காலத்தில் இச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக மத்திய மாகாண சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புப் பிரிவிற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அதிகாரி திருமதி ஜானகி செனவிரத்ன இத் தகவல்களைத் வெளியிட்டார்.

குறித்த 08 மாத காலத்தினுள் சிறுவர்களைத் தாக்கிக் காயப்படுத்திய 27 சம்பவங்கள் மத்திய மாகாணத்தில் பதிவாகியுள்ளன.மாத்தளை பொலிஸ் பிரிவில் சிறுவர்களை தாக்கிக் காயப்படுத்திய சம்பவங்கள் 09மும், கண்டி பொலிஸ் பிரிவில் 08 உம் பதிவாகியிருக்கும் நிலையில், கம்பளை பொலிஸ் பிரிவில் அத்தகைய சம்பவங்கள் எதுவும் பதிவாகாமை விசேட அம்சமாகும்.

இக்காலப் பகுதியில் பெண்கள் மீதான 12 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதே காலப் பகுதியில் 11 பெண்கள் கொலை செய்யப்பட்டிருப்பதுடன் இவற்றில் 04 கொலைச் சம்பவங்கள் நுவரெலியா பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளன. கண்டி பொலிஸ் பிரிவில் பெண்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் 04 பதிவாகியுள்ளன.

இவை இவ்வாறிருக்க,கொவிட் வைரஸ் பரவல் நிலை காரணமாக பாடசாலைகள் மற்றும் தனியார் வகுப்புகள் என்பன இடம் பெறாதிருந்த பின்னணியில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இலக்கான சம்பவங்கள் பெற்றார்களின் பாதுகாப்பில் பிள்ளைகள் இருந்த காலத்தில் என்பதையும் இது தொடர்பில் பெற்றார்கள் விசேட கவனம் செலுத்துதல் அவசியம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பலரிடம் இவ் விவகாரம் தொடர்பில் வினவிய போது அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோரிடம் தொலைப்பேசி வசதிகள் எதுவும் இல்லாதிருந்தமை தெரிய வந்ததாகவும்,துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர் மற்றும் சிறுமிகள் பலரும் பாதிக்கப்பட்டிருப்பது அவர்கள் தமது தாய் அல்லது தந்தையின் தொலைப் பேசிகளின் மூலம் வெளிநபர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளின் மூலம் என்பது தெரிய வந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் MP கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர் விரைவில் நலம் பெற ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளரும் வத்தளை மாபோல நகரசபை உறுப்பினருமான சசிகுமார் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் ஏற்பாட்டில் வத்தளை ஸ்ரீ சிவசுப்ரமணிய திருக்கோவிலில் யாக பூஜை நடைபெற்ற பின்னர் எடுக்கப்பட்ட படம்.



ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவர் ஹாஷெம் அஷ்ஜஸாதெஹ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்று சந்தித்து சமகால விடயங்கள் பற்றி கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

## கல்லொழுவை அல் அமானில் தொழில்வாண்மை செயலமர்வு



பாடசாலை கல்வித் துறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் எண்ணக்கருவின் கீழ், பாடசாலைகளில் தொழில்வாண்மைக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், பாடசாலை மட்டத்தில் தொழில்வாண்மை ஆசிரியர்களை உருவாக்கும் வகையிலான புதிய திட்டத்தில் செயலமர்வுகளை நடத்தும் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

கொவிட் 19 தொற்றுப் பரவலால் நாட்டின் கல்வித்துறை பாரிய சவாலை எதிர்கொண்டது. தற்போது நிலைமை ஓரளவு சீரடைந்து காணப்படும் நிலையில், இதற்கமைய ஆரம்ப நடவடிக்கையாக, ( SBATD ) "பாடசாலை மட்ட தொழில் வாண்மை ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத்தை" முதன்மைப் படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு அங்கமாக, கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட 11 ஆசிரியர்களை உள்வாங்கிய செயலமர்வொன்று, அண்மையில் இடம்பெற்றது.அதிபர் எம்.ரீ.எம். ஆஸிம் வழிகாட்டலில், முழு நாள் செயலமர்வாக நடைபெற்ற இந்நிகழ்வின் இறுதியில், இதில் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 நவம்பர் 22
திங்கட்கிழமை

# மன்னாரில் 20 நாட்களில் 423 கொரோனா தொற்றாளர்கள்

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலை

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில் கடந்த 20 நாட்களில் 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலவரம் தொடர்பாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று (21) ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,,,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முந்தினம் சனிக்கிழமை (20) மேலும் புதிதாக 18 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நவம்பர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் 2799 தொற்றாளர்களும்,மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 2816 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.மாவட்டத்தில் தற்போது வரை 25 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

என்னிடம் பழிவாங்கும் நடவடிக்கைகள் இல்லை;

# என்னை கொல்ல முற்பட்ட பிரபாகரனின் மரணத்தில் பரிதாபம் ஏற்பட்டது

அமைச்சர் டக்ளஸ்

**பரந்தன் குறூப் நிருபர்**



என்னை கொல்ல பல தடவை முற்பட்ட பிரபாகரனையே பழி வாங்கவில்லை. மாறாக அவரது மரணத்தில் பரிதாபம் ஏற்பட்டது என அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அழிவுகள், இழப்புக்கள், இடம்பெயர்வுகள் எமக்கு வந்திருக்காது. மேலும் பல மடங்கு முன்னேற்றகரமான வாழ்க்கையில் நாங்கள் இருந்திருப்போம். கெடுகுடி சொற்கேளாது என்பது போல அது அப்படியே போய்விட்டது.

கடந்த பாராளுமன்ற தேர்தலிலும் கூட சந்திரகுமார் எம்மோடு சேர்ந்து கேட்டிருந்தால் கட்சிக்கு 3 ஆசனங்கள் கிடைத்திருக்கும். ஆனால் அவருடன் சேர்ந்து கேட்டால் இங்கு வாக்கு விழாது என யாரோ கூறியிருந்த நிலையில் அவர் அதற்கு எடுபட்டு போய்விட்டார். அது அவருடைய விதி. அந்த விதியை மதியால் வெல்ல முடியும் என்று நான் நம்புகின்றேன். ஆனால் அவருக்கு அது முடியாமல் போய்விட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் தொழிலோடு சம்பந்தப்பட்டது மாத்திரமல்லாது, சமுர்த்தி உள்ளடங்கிய சகல வேலைகளையும் மேற்பார்வை செய்யவும், அதனை கண்காணிக்கவும் வழிநடத்தவும் விரும்புகின்றேன். அது எனக்குரிய சட்ட கடமைகளாகவும் இருக்கலாம். எனக்குரிய அரசியல் கடமைகளாகவும் இருக்கலாம்.

என்னிடம் பழிவாங்கும் நடவடிக்கைகள் இல்லை. நான் பிரபாகரனையே பழிவாங்கவில்லை.

நான் உங்களிடம் எதிர்பார்ப்பது சட்ட கடமைகள், மக்கள் கடமைகளை மாத்திரமே.இந்த பகுதி மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

குறிப்பாக சமுர்த்தி வேலைத் திட்டத்தின் ஊடாக மாத்திரமல்ல, ஏனைய அமைச்சர்களுடைய வேலைத்திட்டங்களுடன் சேர்த்து நான் அதை மேற்கொள்ள விரும்புகின்றேன்.

மத்திய வங்கி ஆளுநர் தலைமையில் யாழ்ப்பாணத்தில்

# சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்




**பருத்திதுறை விசேட நிருபர்**

இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து தீர்வு காணும் விசேட கலந்துரையாடல் மத்திய வங்கி ஆளுநரின் பங்குபற்றுதலுடன் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வு இலங்கை மத்திய வங்கியின் பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

வட பிராந்தியத்துடன் தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் பிராந்தியத்தின் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான ஒருங்கிணைந்த பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் சிக்கல்களை கையாள்வதற்கான சாத்தியமான தீர்வுகள் மற்றும் உத்திகள் வழங்குவதை நோக்காக கொண்டு இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்கள், வங்கிகளின் பிராந்திய பொது முகாமையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இதன்போது முதலீட்டாளர்களின் பிரச்சினைகளைக் நேரடியாக கேட்டறிந்து கொண்ட மத்திய வங்கி ஆளுநர் அதற்கான தீர்வுகளை வட மாகாண ஆளுநர், அரச அதிபர்கள் மற்றும் மற்றும் வங்கி அதிகாரிகளுடன் பேசி அதற்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

# கிளிநொச்சி டிப்போ சந்தியில் கன்டர் வாகனம் மோதி இருவர் படுகாயம்



**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி டிப்போ சந்தியில் நேற்று பகல் இடம்பெற்ற பாரிய விபத்து சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து நேற்று பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பரந்தன் திசையிலிருந்து கிளிநொச்சி நகருக்குள் நுழைந்த கன்டர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து நிலையத்தில் தரித்திருந்த முச்சக்கர வண்டி மற்றும் காருடன் மோதியுள்ளது.

இதன் போது இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.மோதுண்ட கன்டர் வாகனம் பகுதியளவில் சேதமடைந்ததுடன், முச்சக்கரவண்டி மற்றும் கார் ஆகியனவும் சேதமடைந்துள்ளன.

விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த 15ம் திகதி விபத்து இடம்பெற்ற பகுதியை அண்மித்துள்ள கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் முன்பாக பாதசாரி கடவையில் இவ்வாறான தொரு விபத்தின்போது பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்திருந்தது டன் மற்றுமொரு மாணவி படுகாயமடைந்திருந்தார்.

அதிகரித்த வேகம், நெரிசல் காரணமாக இவ்வாறான விபத்துக்கள் கிளிநொச்சியில் பதிவாகி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளருக்கு அழைப்பாணை

**யாழ். விசேட நிருபர்**

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை இன்று காலை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் கட்டளை அச்சுவேலி பொலிசாரினால் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம் தொடர்பில் நீதிமன்றங்களினால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வரும் நிலையில் மாவீரர் தினம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டே இவ் அழைப்புக்கட்டளை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவீரர் தினம் மற்றும் தியாக தீபம் திலிபனின் நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரின் நினைவேந்தல் சுதந்திரத்திற்கு எதிராக பொலிசார் வழக்குகளைத் தாக்கல் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம் முறை உப தவிசாளர் கபிலனின் பெயரும் இவ் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

# 'ஒரே நாடு, ஒரே சட்டம்' செயலணியின் கூட்டத்தில் கலந்து கொள்ள ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

**வவுனியா விசேட நிருபர்**

ஒரே நாடு, ஒரே சட்டத்தின் செயலணித் தலைவர் ஞானசார தேரர் வடக்கில் முதலாவதாக நடத்திய கூட்டத்தில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முதலாவது கூட்டம் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் தொடக்கம் மாலை வரை (20) இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணியின் சட்டம் தொடர்பான கருத்தறியும் கூட்டம் ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. இதன்போது அழைப்பு விடுக்கப்பட்ட சமூக மட்ட உறுப்பினர்களிடம் மட்டும் ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கேட்டறியப்பட்டன. இதன்போது குறித்த கலந்துரையாடலில் செய்தி சேகரிப்பதற்கு சென்ற வவுனியா ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் பட்ஜட் தோற்கடிப்பு;

# பொருத்தமான ஒருவரை தவிசாளராக நியமித்தால் ஆதரவு

**வவுனியா விசேட நிருபர்**

தமிழ் தேசிய மக்கள் முன்னனி

வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு தோற்கடிக்கப்பட்டாலும் பொருத்தமான ஒருவரை தவிசாளராக நியமித்தால் தமிழ் தேசிய மக்கள் முன்னனி ஆதரவளிக்கும் என கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஜெ.மயூரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா வடக்கு பிரதேச நிலப்பரப்பையும், அதன் பகுதிகளையும் தமிழ் பிரதிநிதி ஒருவரே தொடர்ந்தும் நிர்வகிக்க வேண்டும் என்பதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அன்று தொடக்கம் உறுதியாகவே உள்ளது.

அதனடிப்படையிலே முதன் முதலாக வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின் போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவிற்கு உதவியிருந்தது.

ஆனாலும் தற்போதைய தவிசாளர் பாரபட்சமாக நடப்பதுடன், மக்கள் நலன்சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதற்கும் தடையாக இருப்பதாக எமது கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக தெரிவித்து வந்த நிலையில், பாதீட்டிலும் குறைபாடுகள் காணப்பட்டது.

அதன் காரணமாகவே நாம் அதனை எதிர்க்க வேண்டிய நிலை உருவாகியது. எமது கட்சி உறுப்பினர்கள் மட்டுமன்றி ஈபிஆர்எல்எப் கட்சியின் உறுப்பினர்கள் கூட குறித்த பாதீட்டுக்கு எதிராகவே வாக்களித்திருந்தனர்.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச சபையானது பெரும்பான்மையினத்தவர்களின் கைகளுக்கு செல்வதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்றும் இடமளிக்காது என்பதை மீள நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

எனவே, வவுனியா வடக்கின் நிலமையை உணர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு பொருத்தமான ஒருவரை தவிசாளராக முன்மொழிந்து செயற்பட வேண்டும்.

# வரலாற்று ஆலயம் மீள் புனரமைக்கப்பட்டு மன்னார் ஆயரால் திறந்து வைப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**



வவுனியா பங்கின் மிக பழமை வாய்ந்த பறண்நட்டகல் தூய அடைக்கல அன்னை ஆலயம் மீள் குடியேற்றத்தின் பின் புனரமைக்கப்பட்டு மன்னார் மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகையால் (20) அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

பங்கு தந்தையின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வு மறைமாவட்ட குரு முதல்வர்களுடன் இணைந்து கூட்டு திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டதன் பின்னர் பறண்நட்டகல் அடைக்கல அன்னை அபிஷேக விழா செய்து வைக்கப்பட்டது.




"பாதசாரிக் கடவையில் மாணவரை பாதுகாப்போம்"

# வவுனியா முதல் வட்டுக்கோட்டை வரை விழிப்புணர்வு (V2V)

"பாதசாரிக் கடவையில் மாணவரை பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் வவுனியா முதல் வட்டுக்கோட்டை வரை விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று முன்தினம் (20) ஆரம்பமானது.

இவ் வேலைத்திட்டம் நேற்றுக் காலை 08 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் முன்பாக ஆரம்பமானது.

கிளி.பீப்பள் எனும் புலம்பெயர் அமைப்பின் நிதி பங்களிப்புடன் கல்வி, கலாசார அபிவிருத்தி அமையத்தின் ஒழுங்கமைப்பினால் இவை முன்னெடுக்கப்படுகின்றது.

கல்வி கலாசார அபிவிருத்தி அமையத்தின் ஒழுங்கமைப்பில் கிளி. பீப்பளின் செயற்திட்டமான "வவுனியா தொடக்கம் வட்டுக்கோட்டை வரை" (V2V) வீதி விபத்துக்களை குறைக்கும் விழிப்புணர்வு பதாதைகளை பாடசாலை முன்பாக மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் காட்சிப்படுத்தும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 8.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வில் வைத்தியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். அண்மையில் விபத்தில் உயிரிழந்த பாடசாலை மாணவிக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் விழிப்புணர்வு பதாதைகள் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அருள் மழை பொழியும் பகவான் சத்ய சாயிபாபா



சத்திய நாராயண ராயூ என்ற இயற்பெயர் கொண்ட பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா, 1926ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி இந்தியாவின் ஆந்திரப்பிரதேசம் மாநிலத்தில் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள "புட்டபர்த்தி" என்ற இடத்தில் பெத்தவெங்கம ராயூ என்பவருக்கும் ஈசுவராம்மாவுக்கும் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சத்ய நாராயண விரதம் இருந்து பிறந்ததால், இவருடைய பெற்றோர்கள் இவருக்கு சத்திய நாராயணன் எனப் பெயர் சூட்டினர். புட்டபர்த்தியில் உள்ள ஒரு பள்ளியில் தன்னுடைய ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த அவர், இளம் வயதிலேயே பக்திமார்க்கம் சார்ந்த நாடகம், இசை, நடனம், மற்றும் கதை எழுதுதல் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

அவர் படிக்கும் பொழுது, தன்னுடைய நண்பர்கள் ஏதாவது கேட்டால் உடனே அதை வரவழைத்து நண்பர்களுக்குக் கொடுப்பார். இதனால் அவரை சுற்றி எப்பொழுதும் நண்பர்கள் இருந்து கொண்டே இருப்பார்கள். ஒரு நாள் தன்னுடைய வீட்டில் இருந்தவர்கள் முன், கையில் கற்கண்டு வரவழைத்து காண்பித்தார். இதைக் கண்ட அவருடைய தந்தை அவரை கண்டித்தார். ஆனால் அவர் நான்தான் "சாய் பாபா" என்றும், 'சீரடி சாய் பாபாவின் மறுஜென்மம் நானே!' என்றும் கூறினார். அவருடைய பேச்சும், செய்த அற்புதங்களும் மக்களிடையே பரவத் தொடங்கியது.

அவர் பலரும் வியக்கதக்க வகையில் "விபூதி தருதல், மோதிரங்கள், கடிகாரங்கள், லிங்கம்" போன்றவற்றை வரவழைத்து அற்புதங்கள் நிகழ்த்தியதால், பக்தர்கள் அவரைத் தேடி வர ஆரம்பித்தனர்.

1940 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், பல்வேறு இடங்களுக்கு சென்ற அவர், தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அருள் வழங்கினார். அவருடைய ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்ட பக்தர்கள், அவரை 'கடவுளின் அவதாரம்' எனக் கருதி, 1944 ஆம் ஆண்டு அவருக்கு கோயில்கள் எழுப்பினர். பின்னர் 1954 ஆம் ஆண்டு, அங்கு ஒரு சிறு மருத்துவமனையைத் தொடங்கி, அங்குள்ள மக்களுக்கு இலவச மருத்துவ வசதி அளித்தார்.

மேலும், இவருடைய பெயரில் பல தொண்டு நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, இலவசக் கல்வி மற்றும் மருத்துவம், பாடசாலைகள், உயர் கல்வி நிலையங்கள், குடிநீர் வழங்குதல் எனப் பல்வேறு திட்டங்களில் சேவைப் புரிந்து வருகிறது.

# சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### ஐயடிகள் காடவர்கோன் நாயனார்



58

ஐயடிகள் காடவர்கோன் பெறுதற்கரிதாகிய மானுட சரீரமானது முடிமன்னராய் உலகாண்டு அறபரிபாலனஞ் செய்யும் உயர்பெரு மகிமை தாங்குதற்கு முரியதாகும். ஆனால், இச்சரீரத்தோடு உயிர்க்குள்ள தொடர்பானது நாளொரு விதமாய்த் தேய்ந்து தேய்ந்து போய் ஒரு கட்டத்தில் உயிர் உடலை விட்டு அறுதியாக விலகியேவிட வேண்டிய அவலநிலையும் மேல் மேல் எடுக்கவிருக்குஞ் சரீரந்தோறும் மீளமீள அப்படியே நிகழ்ந்து கொண்டிருக்கும் அநர்த்த



மும், தவிர்க்கமுடியாத வகையில் உளதாகும். அங்ஙனம் நிலையில்லாமையாகிய இப்பொய்ம்மையோடு கூடிய இந்த உடலுயிர் வாழ்க்கைப் பற்றை, மனமே, நீ அறவிட்டொழிவாயாக. விட்டதும் பாம்பை வைத்தாட்டுந் திருக்கரத்தினரும் பரமபதியும் திருமுருகன் தந்தையுமாயுள்ளவரும் திருத்தினை நகரில் எழுந்தருளி யுள்ளவருமாகிய சிவக்கொழுந்தீசனைச் சென்றடைவாயாக என்பது அவ்வாய்மை. அது நாயனார் வாக்கில், "வேந்த ராயுல காண்டறம் புரிந்து வீற்றிருக்குமிவ் வுடலது தன்னைத் தேய்ந்திறந்துவெந் துயருழந்திடுமிப் பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே பாந்தளங்கையில் ஆட்டுகந்தானைப் பரமனைக் கடற் சூர்தடிந்திட்ட சேந்தன் தாதையைத் திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே" என வரும். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

## ஹம்ஸ யோகம் - 48

விழிப்படைந்த ஆக்ஞா சக்கரம் அதிமான காட்சிகளைக் காட்டுவதுடன் உடலைச் சூழ இருக்கும் பிராணகாந்த சக்தியைக் இன்னொருவருக்குக் கடத்தும் ஆற்றலையும் தரும். இந்தக் கதிர்ப்பு எல்லாவிதமான அறியாமை, தீய குணங்களையும் அழித்து சாதகனின் சூக்ஷ்ம உடலைத் தூய்மைப்படுத்தும். ஆகவே பிந்து யோகத்தின் பயிற்சியினால் எமது நுண்ணுடலில் இருக்கும் குச சம்ஸ்காரங்கள் எனும் பலவீனங்களை முற்றாக நீக்கலாம். இது ஆக் ஞா சக்கரத்திலிருந்து வெளிப்படும் ஒளிப் பிரபாவத்தினால் ஏற்படுவது. மூன்றாவது கண்ணை விழிப்படையச் செய்வது என்பதன் தத்துவார்த்த விளக்கம் உண்மையில் விவேகத்தை விழிப்படையச் செய்வதாகும். விவேகம் என்பது பகுத்தறியக் கூடிய புத்தி, சரியாக உய்த்தறியக் கூடிய பண்பு. இது அனைவரது மூளையிலும் உறை நிலையில் இருக்கிறது. அனேகருக்கு இதை விழிப்படையச் செய்யும் ஆற்றல் இருப்பதில்லை. எம்மில் மறைந்திருக்கும் இந்த ஞானத்தை விழிப்படையச் செய்வதால் அது எல்லாவிதமான சுய நலங்கள், பேதங்கள், பற்றுக்கள், அகங்காரங்கள், பொறாமை, எரிச்சல்கள், அளவு கடந்த ஆசைகள், மனக் குழப்பங்கள் அனைத்து இல்லாமல் ஆக்கப்படும்.

இதுவே புராணங்களில் கூறப்படும் சிவதாண்டவத்தின் மறை பொருள் விளக்கமாகும். உலகம், பிரபஞ்சம் ஒழுங்கற்று தீய குணங்களால் நிறையும் போது அதன் ஒழுங்கை நிலைநிறுத்த சிவன் தாண்டவம் எனும் நடனத்தை ஆடி நெற்றிக் கண்ணைத் திறப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நெற்றிக் கண்ணின் பொறிகள் தீமைகளை அழித்து புதிய ஞானத்திற்கு வித்திடும் செயலாகக் கூறப்படுகிறது.

எமது தனி மனித வாழ்க்கையிலும் சரி, சமூக வாழ்க்கையிலும் சரி எமது முன்னேற்றத்திற்கு தேவையற்ற, அர்த்தமற்ற பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள், அழிக்கப்படுதல் அவசியமாகிறது. இத்தகைய புரட்சி வெற்றி பெறும் போது மக்கள் ஒரு புதுவித வாழ்க்கைத் தரத்தைப் பெறுகிறார்கள். இந்த அறிவு எமது நெற்றிக் கண் விழிப்படைவதால் ஏற்படும் ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் விவேகத்தினால் மாத்திரமே சாதிக்க முடியும். இந்த உண்மையை புராணங்கள் கதாரூபமாக சூக்ஷ்ம மாக வெளிப்படுத்துகிறது.

தற்போது உள்ள துன்பங்கள் விவேகத்தின் மூலம் மனித மனத்தின் சிந்தனைப் போக்கினையும், மனபாங்கினையும் மாற்றியமைப்பதன் மூலமே நீக்க முடியும். தற்போது உள்ள மனநிலை சுய நலத்திற்கான ஆசைகள், மனிதருக்கிடையே பேதங்கள், காமம், அகங்காரம், அறமற்ற சிந்தனைகள் அடிப்படையிலான முன்னேற்றம். இவை எப்போதும் மனிதனை துன்பத்தில் ஆழ்த்துபவை. உண்மையான எண்ணப் புரட்சி என்பது விவேக சக்தியினை விழிப்படையச் செய்வதன் மூலமே சாத்தியமாகும்.



**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## கொழும்பு தட்டாரத்தெரு

# துர்க்கையம்மன் ஆலய இரதபவனி

கொழும்பு 12, சில்வர் சிமித் (தட்டாரத் தெரு) வீதியிலுள்ள ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 16ஆம் திகதி மகா கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகியது.

இவ்வாலயத்தில் கடந்த 17ஆம் திகதி முதல் காலையும் மாலையும் விஷேட அபிஷேக ஹோமத்துடன் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது. இந்த விஷேட அபிஷேக ஹோமத்துடனான இலட்சார்ச்சனை 26ஆம் திகதி வரை நடைபெறும்.

எதிர்வரும் 27ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு நவோத்திரா அபிஷேகமும் காலை 7.30 மணிக்கு பால் குட பவனியும் நடைபெறவுள்ளது.

பால்குட பவனி காலை 7.30 மணிக்கு தட்டாரத்தெரு முனிசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு விஷேட அபிஷேகமும் நடத்தப்படும்.

அன்று காலை 11 மணிக்கு இரதபவனி நடைபெறும். இரதபவனி குவாரி வீதி சந்தி வரை சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

அன்று பிற்பகல் 1 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படும். எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு திருவூஞ்சல் திருவிழாவும் எதிர்வரும் 29ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வைரவர் மடையும் நடைபெறும்.

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### கந்தபுராணம்

*18728) இது எத்தனை சுலோகங்களைக் கொண்டது?*

***81,000 ஸ்லோகங்கள் உடையது.***

*18729) கந்த புராணத்தின் பெருமை என்ன?*

***பதினெட்டு புராணங்களில் பத்து புராணங்கள் சிவ பரமானவை; அவைகளில் கந்த புராணம் சிறந்தது; ஏனெனில் வேதாந்த சித்தாந்த சாரங்களை உள்ளடக்கியது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் எளிதில் தரவல்லது. மங்கலத்தைச் செய்விப்பது; வலிமிக்க கலித் துன்பத்தை நீக்குவது.***

*18730) கச்சியப்பர் இது பற்றி செப்பியது யாது?*

***"காந்தம் என்னும் பெருங்கடல்" — என்று அருளினார். 10,346 பாடல்களை ஆறு காண்டங்களாகவும் 94 படலங்களாகவும் அவர் பிரித்தார்.***

*18731) இதைச் சுருக்க முடியுமா?*

***சம்பந்த சரணாலய சுவாமிகள் என்பார், கந்தப் புராணத்திலுள்ள வரலாறுகளை 'சுருக்கித் தொகுத்தல்' என்னும் யாப்பால் 1049 செய்யுட்களால் இயற்றி அருளினார்.***

*18732) கந்தப் புராணத்தின் மஹிமை என்ன?*

***வடமொழியில் உள்ள ஏழாவது காண்டமான உபதேச காண்டத்தை கோனேரியப்பர் என்பவர் 4347 செய்யுட்களாகப் பாடியுள்ளார்; அதில் சூரன் முதலியோரின் முன்னை வரலாறும் உருத்திராக்க மஹிமையும், விபூதி மஹிமையும், சிவ நாம மஹிமையும் உளது.***

*18733) கந்த புராணத்தில் உள்ள ஆறு காண்டங்கள் யாவை?*

***உற்பத்தி காண்டம், அசுர காண்டம் , மஹேந்திர காண்டம் , யுத்த காண்டம் , தேவ காண்டம், தக்க காண்டம் என்று ஆறு காண்டங்கள்***

***இவற்றில் அறுமுகக் கடவுளின் அவதாரம், தேவரை அசுரர்கள் சிறை செய்த வரலாறு, சூரபன்மனை முருகன் வென்ற வரலாறு, வள்ளி, தெய்வயானை திருமணம், முதலியன உடையது.***

*18734) கந்த புராணத்தை தமிழில் வெளியிட்டவர் யார்?*

***கந்த புராணத்தின் மூல பாடம் முழுவதையும் முதலில் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் பதிப்பித்தார். அவரே கந்தபுராணத்தை வசன நடையிலும் எழுதி வெளியிட்டார்.***

## அர்த்தமுள்ள இந்துமதம்



பெண்ணாசை வளர்ந்துவிட்டால், பாபம் நிகழ்கிறது. இந்த மூன்றில் ஓர் ஆசைகூட இல்லாத மனிதர்கள் மிகவும் குறைவு. ஆகவேதான் பற்றற்ற வாழ்க்கையை இந்து மதம் போதித்தது. பற்றற்று வாழ்வதென்றால், எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிப்போய் சந்நியாசி ஆவதல்ல! "இருபது போதும்; வருவது வரட்டும்: போவது போகட்டும்: மிஞ்சுவது மிஞ்சட்டும்" என்று சலனங்களுக்கு ஆட்படாமலிருப்பதே பற்றற்ற வாழ்க்கையாகும். ஆசை, தீமைக்கு அடிப்படையாக இல்லாதவரை, அந்த ஆசை வாழ்வில் இருக்கலாம் என்கிறது இந்து மதம். நான் சிறைச்சாலையில் இருந்தபோது கவனித்தேன். அங்கே இருந்த குற்றவாளிகளில் பெரும்பாலோர் ஆசைக் குற்றாளிகளே. மூன்று ஆசைகளில் ஒன்று அவனைக் குற்றவாளியாக்கியிருக்கிறது.

சிறைச்சாலையில் இருந்து கொண்டு, அவன் "முருகா, முருகா!" என்று கதறுகிறான். ஆம், அவன் அனுபவம் அவனுக்கு உண்மையை உணர்த்துகிறது.

அதனால்தான் "பரம்பொருள் மீது பற்று வை: நிலையற்ற பொருள்களின் மீது ஆசை வராது" என்கிறது இந்துமதம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பறைப்
பற்றுக பற்று விடற்கு" – என்பது திருக்குறள்.

ஆசைகளை அறவே ஒழிக்கவேண்டியதில்லை.அப்படி ஒழித்துவிட்டால் வாழ்க்கையில் என்ன சுகம்? அதனால்தான் 'தாமரை இலைத் தண்ணீர் போல்ய என்று போதித்தது இந்து மதம். நேரிய வழியில் ஆசைகள் வளரலாம். ஆனால் அதில் லாபமும் குறைவு.

பாபமும் குறைவு. ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஐநூறு ரூபாய் மட்டுமே கிடைத்தால், நிம்மதி வந்து விடுகிறது. எதிர்பார்ப்பதைக் குறைத்துக்கொள்: வருவது மனதை நிறைய வைக்கிறது" என்பதே இந்துக்கள் தத்துவம். எவ்வளவு அழகான மனைவியைப் பெற்றவனும், இன்னொரு பெண்ணை ஆசையோடு பார்க்கிறானே, ஏன்?

லட்சக்கணக்கான ரூபாய் சொத்துக்களைப் பெற்றவன்மேலும் ஓர் ஆயிரம் ரூபாய் கிடைக்கிற தென்றால் ஓடுகிறானே,ஏன்?

அது ஆசை போட்ட சாலை.

அவன் பயணம் அவன் கையிலில்லை; ஆசையின் கையிலிருக்கிறது. போகின்ற வேகத்தில் அடி விழுந்தால் நின்று யோசிக்கிறான். அப்போது அவனுக்கு தெய்வஞாபகம் வருகிறது. அனுபவங்கள் இல்லாமல, அறிவின்மூலமே, தெய்வத்தைக் கண்டு கொள்ளும்படி போதிப்பதுதான் இந்து மத்தத்துவம். 'பொறாமை, கோபம்' எல்லோமே ஆசை பெற்றெடுத்த குழந்தைகள்தான்.

வாழ்க்கைத் துயரங்களுக்கெல்லாம் மூலகாரணம் எதுவென்று தேடிப் பார்த்து, அந்தத் துயரங்களிலிருந்து உன்னை விடுபடச் செய்ய, அந்தக் காரணங்களைச் சுட்டிக் காட்டி, உனது பயணத்தை ஒழுங்குபடுத்தும் வேலையை, இந்து மதம் மேற்கொண்டிருக்கிறது.

இந்து மதம் என்றும் சந்நியாசிகளின் பாத்திரமல்ல.

அது வாழ விரும்புகிறவர்கள், வாழ வேண்டியவர்களுக்கு வழிகாட்டி.

வள்ளுவர் சொல்லும் வாழ்க்கை நீதிகளைப் போல இந்து மதமும் நீதிகளையே போதிக்கிறது. அந்த நீதிகள் உன்னை வாழவைப்பதற்கேயல்லாமல் தன்னை வளர்த்து கொள்வதற்காக அல்ல. உலகத்தில் எங்கும் நிர்பந்தமாக, வெண்மையாக, தூய்மையாக, இருக்கிறது என்றதற்கு அடையாளமாகவே அது 'திருநீறு' பூசச் சொல்லுகிறது. உன் உடம்பு, நோய் நொடியின்றி ரத்தம் சுத்தமா இருக்கிறது என்பதற்காகவே, 'குங்கும்ம்' வைக்கச் சொல்கிறது. 'இவள் திருமணமானவள்' என்று கண்டுகொண்டு அவளை நீ ஆசையோடு பார்க்காமலிருக்கப் பெண்ணுக்கு அது 'மாங்கல்யம்' சூட்டுகிறது. தன் கண்களால் ஆடவனுடைய ஆசையை ஒருபெண் கிளறிவிடக்கூடாது என்பதற்காகவே, அவளைத் 'தலைகுனிந்து' நடக்கச் சொல்கிறது.

கோவிலிலே தெய்வ தரிசன்ம் செய்யும் போது கூட கண் கோதையர்பால் சாய்கிறது. அதை மீட்க முடியாத பலவீன்னுக்கு, அவள் சிரித்துவிட்டால் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுபோல் ஆகிறது. "பொம்பளை சிரிச்சா போச்சு; புகையிலை விரிச்சாப் போச்சு" என்பது இந்துக்கள் பழமொழி. கூடுமானவரை மனிதனைக் குற்றங்களிலிருந்து மீட்பதற்கு, தார்மீக வேலி போட்டு வளைக்கிறது இந்துமதம். அந்தக் குற்றங்களிலிருந்து விடுபட்டவனுக்கே நிம்மதி கிடைக்கிறது. அந்த நிம்மதியை உனக்கு அளிக்கவே இந்துமதத் தத்துவங்கள் தோன்றின.

இன்றைய இளைஞனுக்கு ஷேக்பியரைத் தெரியும்; ஷெல்லியைத் தெரியும்;ஜேம்ஸ் பாண்ட் தெரியும். கெட்டுப்போன பின்புதான் அவனுக்குப் பட்டினத்தாரைப் புரியும்.

ஓய்ந்த நேரத்திலாவது அவன் ராமகிருஷ்ண மரமஹம்சரின் உபதேசங்களைப் படிப்பானானால், இந்து மதம் என்பது வெறும் 'சாமியார் மடம் ' என்ற எண்ணம் விலகிவிடும்.

நியாயமான நிம்மதியான வாழ்க்கையை நீ மேற்கொள். உன் தாய் விடிவில் துணை வருவது இந்துமதம். ஆசைகளைப்பற்இ பரமஹம்சர் என்ன கூறுகிறார்? "ஆழமுள்ள கிணற்றின் விளிம்பில் நிற்பவன், அதனுள் விழுந்துவிடாமல் எப்போதும் ஜாக்கிரதையாக இருப்பதைப்போல் உலக வாழ்க்கையை மேற்கொண்டவன் ஆசாபாசங்களிஙல் அமிழ்ந்து விடாமல் இருக்க வேண்டும்" என்கிறார். "அவிழ்த்து விடப்பட்ட யானை, மரங்களையும் செடிகொடிகளையும் வேரோடு பிடுங்கிப் போடுகிறது.

ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தியதும், அது சாந்தமாகி விடுகிறது. அது போல, அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகிறது" "விவேகம் என்ற அங்குசத்தால் அது வீழ்த்தப்பட்டதும் சாந்தமாகி விடுகிறது". என்றார். அடக்கியாள்வதன் பெயரே வைராக்யம். நீ சுத்த வைராக்கியனாக இரு. ஆசை வளராது. உன்னைக் குற்றவாளியாக்காது, உன் நிம்மதியைக் கெடுக்காது.





கண்டி நகரில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் பெருமான் ஆலயத்தில் சூரன்போர் உற்சவம் அண்மையில் நடைபெற்றது.

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்)

# கிழக்கின் குரல்



# அடிக்கல் நடப்பட்ட இடம் கூட தெரியாத நிலையில் வரவேற்புவளைவு

## நிருவாகச்சிக்கலே தாமதத்திற்கு காரணமாம்

**காரைதீவு மக்கள் விசனம்**

*காரைதீவு குறூப் நிருபர்*

காரைதீவு தென்புற எல்லையில் வரவேற்பு வளைவை நிர்மாணிப்பதற்காக மூன்று வருடங்களுக்கு முன் அடிக்கல் நடப்பட்டும் இன்னும்; ஒரு சாண் கூட நகராமல் அப்படியே கிடப்பது குறித்து காரைதீவு பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அடிக்கல் நடப்பட்ட தடயத்தைக் கூட காண முடியாத நிலையிலுள்ள அந்த இடத்தில் நேற்றுமுன்தினம் கூடிய பொது மக்கள் இதற்கு தீர்வு காணப்படவேண்டும் என கருத்துரைத்தனர்.

தற்பொது அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபரான வே.ஜெகதீசன் காரைதீவு பிரதேச செயலாளராகவிருந்த 2018ஆம் ஆண்டு இதற்கான அடிக்கல் நடுவிழா கோலாகலமாக நடைபெற்றது.

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் அதற்கான 85 இலட்ச ரூபா நிதியை முன்னாள் அமைச்சர் மனோ கணேசனிடமிருந்து பெற்று பிரதேச செயலகத்திடம் கொடுத்திருந்தார்.அமுல்படுத்தும் பொறுப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்மாணத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.



எனினும் நிருவாக நடவடிக்கைகள் காரணமாக தாமதமடைந்து வந்தது.சுமார் இரு வருட காலமாக இக் கட்டுமானப் பணி இழுபட்டு வந்தது.

இந்த நிலையில் 2020 நவம்பர் மாதம் 16ஆம் திகதி இதன் கட்டுமானப் பணிகளை மீள ஆரம்பிக்கு முகமாக பிரதேச செயலாளர் தவிசாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை உயரதிகாரிகள் கூடி களத்திற்குச் சென்று உரிய இடத்தை நிர்மாணத் திணைக் களத்திற்கு வழங்கியிருந்தனர். இருந்த போதிலும் இன்று வரை அப்பணி ஆரம்பமாகவில்லை. அடிக்கல் நடப்பட்ட இடம் கூட தெரியாத நிலையில் உள்ளது.

இது தொடர்பாக அங்கு மக்கள் கருத்துரைக்கையில்:

3 வருடத்திற்கு முன்பு அடிக்கல் நடப்பட்ட போதிலும் இன்னும் வரவேற்பு வளையியைக் காணாமல் கவலையடைகின்றோம். ஏனைய சில ஊர்களில் நினைத்த மாதிரி இத்தகைய வளையிகளைக் கட்டுகிறார்கள்.ஆனால் இங்குமட்டும் ஏகப்பட்ட தடைகள் நடைமுறைகள் இருந்தும் 3 வருடமாக இழுபட்டு வருகிறது என்றால் வெட்கமாகவிருக்கிறது. இதற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர், தவிசாளர், வீதித்துறையினர் பதிலளிக்க வேண்டும் என்றனர்.

# குழாய் உடைந்து கடந்த ஒரு மாதமாக வெளியேறும் குடிநீர்



கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பிரதான வீதியில் செல்லும் குடிநீர் குழாய் உடைந்து கடந்த ஒரு மாதமாக குடிநீர் வெளியேறி வருகிறது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிட்டங்கி பிரதான வீதியில் செல்லும் குடிநீர் குழாய் உடைந்து கடந்த ஒரு மாத காலமாக குடிநீர் விரையமாகிச் செல்கின்றது. எனினும் இவ்விடயம் குறித்து எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் கல்முனை பிராந்திய குடிநீர் வடிகால் அலுவலகம் காணப்படுகின்றதுடன் பிராந்திய அலுவலகத்தில் சேவையாற்றும் பல்வேறு அதிகாரிகள் பிரதான வீதியில் விரையமாகி ஓடிக்கொண்டிருக்கும் குடிநீரினை கண்டும் காணாதது போல் செல்கின்றனர். இவ்வாறு விரையமாகிச் செல்லும் குடிநீர் வீதியின் நெடுகிலும் ஓடிச் செல்வதால் பிரதான வீதியில் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இவ்வாறு குடிநீர் விரையமாவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**பாறுக் ஷிஹான்**

# மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த சாணக்கியன் உள்ளிட்டவர்களுக்கும் தடை

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மட்டக்களப்பில் ஏழு பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சாணக்கியன், கோ.கருணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஷ், முன்னாள் போராளிகள் நடராசா, சுரேஸ், தம்பித்துரை, கஜேந்திரன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம் ஆகியோருக்கே இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக குறித்த நபர்கள் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறையில் உலக மீனவ தினம்

*அம்பாறை சுழற்சி நிருபர்*

உலக மீனவ தினத்தை முன்டிட்டு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்ட மீனவ பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (21) அக்கரைப்பற்றில் இடம்பெற்றது. 'மீனவ மற்றும் விவசாய சமூகத்தின் சமூகப் பாதுகாப்பு, சிறிய அளவிலான உற்பத்தியாளர்களின் பொருளாதார பாதுகாப்பு மற்றும் இயற்கைச் சூழலின் நல்வாழ்வை உறுதி செய்வோம்.' எனும் தொனிப்பொருளில் நேரடியாகவும் இணையவழியூடாகவும் சுகாதார வழிமுறைகளுடன் இவ்விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட மீனவ பேரவையின் இணைப்பதிகாரி கே.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேரவையின் தலைவர் எம்.எச். முபாறக் பிரதேச இணைப்பாளர் கே.கண்ணன் உள்ளிட்ட மீனவ குடும்பங்களின் தலைவர்கள் மற்றும் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# போதையொழிப்பிற்கான விழிப்புணர்வு

*றொட்டவெவ குறூப் நிருபர்*





போதைப் பொருள் விற்பனையிலிருந்து விடுதலை பெரும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் திருகோணமலையில் யான் சிறிலங்கா வலையமைப்பு,எடிக் சிறிலங்கா அமைப்பின் அனுசணையின் கீழ் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை(NANA) இவ் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்திருந்தது.

திருகோணமலை பிரதான பேருந்து தரிப்பிடத்திடத்துக்கு முன்பாகவும் திருகோணமலை கடற்கரைக்கு முன்பாகவும் நேற்று இவ் விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இவ் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தில் சாராயக் கம்பனிகளின் தந்திரோபாயங்களுக்கு ஏமாறும் ஏமாளிகளை மூளை உள்ள எந்த பெண்தான் விரும்புவாள்? அனைத்து மகளிர்களுக்கும் பியர் வயிறு அற்ற கணவனை பெற உரிமை உண்டு என்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் அமைதியாக இளைஞர்களினால் இவ் விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

# அக்கரைப்பற்றில் வாழ்வாதார உதவிக்கான ஆடுகள் கையளிப்பு

*பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்*

ஜனாதிபதியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு 2ஆம் பிரிவு கிராம சேவகர் பரிவில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தவர்களுக்கான வாழ்வாதார உதவிக்கான ஆடுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.



அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரதி பணிப்பாளர் ஏ.எம்.தமீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.அன்சார், பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.றாசிக் உட்பட பலர் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று ஆலிம் நகர், மற்றும் இசங்கணிச்சீமை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய**

# தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் கொரோனா தொற்றில் மரணம்

*றொட்டவெவ குறூப் நிருபர்*

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றி வந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு (20) இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் விசாரணை பிரிவில் கடமையாற்றி வந்த ஹப்புத்தளை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய கணேஷன் என்றழைக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் உணவு ஒவ்வாமை காரணமாக (19) ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்படவில்லை.

ஆனாலும் ஒவ்வாமை காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் இதனையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை மூலம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தனர்.



மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலய தேசிய பாடசாலையில் இது வரைகாலமும் எதிர்நோக்கி வந்த கட்டட வசதி இல்லாத பிரச்சினையை தீர்க்க மத்திய கல்வி அமைச்சு சுமார் ஆறு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்றுமாடிக் கட்டட தொகுதியை இராம கிருஷ்ண மிஷன் இலங்கை கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷய னைந்தாஜி மஹராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டுசம்பிரதாய பூர்வமாக திறந்துவைத்தார்.



(படங்கள்: மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

**சுவாமி நீலமாதவானந்தஜீ எழுதிய**

# விபுலானந்த அடிகளார் தொடர்பான இருநூல்கள் வெளியீடு

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*



மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிசன் துணை மேலாளர் ஸ்ரீமத்சுவாமி நீல மாதவானந்தா ஜீ எழுதிய, உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஆக்கங்களடங்கிய இரு நூல்களின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு கல்லடியிலுள்ள சுவாமியின் புனரமைக்கப்பட்ட சமாதி அமைந்துள்ள வளாகத்திலுள்ள மணிமண்டத்தில் கோலாகலமாக நடைபெற்றது. ''விபுலாநந்தம்' என்ற தமிழ் நூலும் 'Essay of Swami Vipulanantha' என்ற ஆங்கில நூலும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நூல்களை இந்துசமய கலாசார திணைக்களம் பதிப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1008 பக்கங்களுடன் கூடிய ''விபுலாநந்தம்' தமிழ் நூலும் 252 பக்கங்களுடைய 'Essay of Swami Vipulanantha' ஆங்கில நூலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனினால் இலங்கை இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மஹராஜ்ஜுக்கு வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது.

# கிண்ணியாவில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு சீர் செய்யப்பட்டது

*கிண்ணியா மத்திய நிருபர்*



முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவினால் 1981ம் ஆண்டு கிண்ணியாவில் திறந்து வைக்கப்பட்ட மாதிரி கிராமத்தின் பெயர் கல்வெட்டு அப்பகுதி இளைஞர்களால் சீர்செய்யப்பட்டு நேற்று முன்தினம் மீண்டும் மக்களின் பார்வைக்கு விடப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகாமாறு கிராம சேவகர் பிரிவில் 1981 ஆம் ஆண்டு, கப்பல் துறை முன்னாள் இராஜாங்க அமைச்சர் மர்ஹூம் எம்.ஈ.எச். மகரூபின் கோரிக்கையை ஏற்று, அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவினால் 'மகரூப் கிராமம்' என்ற பெயரில் ஒரு மாதிரி கிராமம் திறந்து வைக்கப்பட்டது.

அதில் நடப்பட்டிருந்த பெயர் கல்வெட்டை சுற்றி செடிகளும் கரையான் புற்றுகளும் வளர்ந்து இருந்தமையால், அது நீண்ட காலமாக மறைக்கப்பட்டு அழிந்த நிலையில் காணப்பட்டது. இந்த நிலையிலேயே அந்தப் பெயர் கல்வெட்டு அமைந்திருந்த சுற்றுப்பகுதி இளைஞர்களால் சிரமதானம் மூலம் சீர்செய்யப்பட்டு, கல்வெட்டும் புதுப்பிக்கப்பட்டு பொது மக்களுக்கு தெரியும் வகையில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# மதுபோதையில் அட்டகாசம் செய்த மூன்று இளைஞர்கள் கைது

*றொட்டவெவ குரூப் நிருபர்*

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மதுபோதையில் வீதிகளில் அட்டகாசம் செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேக நபர்களை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 25 வயது 28 வயது மற்றும் 40 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட குறித்த மூன்று சந்தேக நபர்களையும் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய போது மது அருந்தியமை தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட குறித்த இளைஞர்கள் தொடர்பில் ஏற்கனவே பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், திருகோணமலை நீதிமன்றில் பல வழக்குகள் இடம்பெற்று வருவதாகவும் மொரவெவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

இருந்த போதிலும் மூன்று இளைஞர்களையும் பொலிஸ் பிணையில் விடுவிக்குமாறு இளைஞர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் பொலிசார் அதனை நிராகரித்துள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

## சூடானின் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் பதவிக்குத் திரும்பினார்

சூடானில் கடந்த மாதம் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியில் பதவி கவிழ்க்கப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட பிரதமர் அப்தல்லா ஹம்தொக் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.



இராணுவம், சிவில் தலைவர்கள் மற்றும் முன்னாள் கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையே எட்டப்பட்ட புதிய உடன்படிக்கையின் ஓர் அங்கமாக அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படவுள்ளதாக மத்தியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி திடீர் அவசர நிலையை அறிவித்த இராணுவ ஜெனரல், சிவில் தலைமையையும் பதவியில் இருந்து அகற்றினார்.

இதனால் அந்நாட்டில் இடம்பெற்று வரும் பாரிய ஆர்ப்பாட்டங்களில் பலரும் கொல்லப்பட்டனர். இந்நிலையில் கடந்த சனிக்கிழமை உடன்'பாடு ஒன்று எட்டப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை கைச்சாத்திடப்பட்டதாக சூடான் உம்மா கட்சி தலைவர் பதல்லா புர்மா நாசில் உறுதி செய்துள்ளார்.

இதன்படி தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதமர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டு பிரதமர் மீண்டும் தமது பதவிக்கு திரும்புவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை நோக்கி சூடானின் நிலைமாற்று அரசாங்க ஆட்சி மீண்டும் நிலைநிறுத்தப்படவுள்ளது.

சூடானில் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ஓமர் அல் பஷீர் பதவி கவிக்கப்பட்ட பின் 2019 ஓகஸ்ட் மாதம் தொடக்கம் அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டில் சூடான் இராணுவம் மற்றும் சிவில் தலைவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் இரு தரப்புக்கும் இடையே முறுகல் அதிகரித்திருந்தது. இதனைத் தொடர்ந்தே கடந்த மாதம் இராணுவ சதிப்புரட்சி ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட்-19: ஐரோப்பா தொடர்பில் உலக சுகாதார அமைப்பு கவலை

ஐரோப்பாவில் அதிகரித்து வரும் கொரோனா தொற்று சம்பவங்கள் குறித்து உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.



அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் மேலும் அரை மில்லியன் பேர் நோய்த் தொற்றால் உயிரிழக்கலாம் என்று அந்த அமைப்பின் பிராந்திய பணிப்பாளர் ஹான்ஸ் குலுஎஜ் தெரிவித்தார்.

முகக்கவசம் அணிவோர் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் அதன் மூலம் நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த முடியுமென அவர் வலியுறுத்தினார்.

தடுப்பூசி போட்டுக்கொள்வது, பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவது ஆகியவை நோய்ப்பரவலைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும் என்று டொக்டர் குலுஎஜ் கூறினார்.

ஐரோப்பாவில் பரவிவரும் டெல்'டா வைரஸ் திரிபு, எதிர்வரும் குளிர் காலத்தின்போது மோசமாகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல ஐரோப்பிய நாடுகள் கடுமையான நடவடிக்கைகளை மீண்டும் அமுல்படுத்துவது குறித்து அறிவித்துள்ளன. சில நாடுகள் அது குறித்துப் பரிசீலிக்கின்றன.

கடந்த வாரத்தில் கொவிட் 19 தொடர்பிலான உயிரிழப்புகள் அதிகரித்த ஒரே பிராந்தியமாக ஐரோப்பா உள்ளது என்ற உலக சுகாதார அமைப்பு முன்னதாக கூறியிருந்தது. அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை 5 வீதம் அதிகரித்துள்ளது.

குளிர் காலம், போதுமான அளவுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படாதது, ஐரோப்பிய பிராந்தியத்தில் கொரோனாவின் டெல்டா திரிபு பரவுவது என பல்வேறு காரணிகள் இந்த மாபெரும் பரவலுக்குப் பின் இருப்பதாக டொக்டர் குலுஎஜ் கூறினார்.

## இஸ்ரேலிய குடியேறியை கொன்ற பலஸ்தீன ஆடவர் சுட்டுக்கொலை

இஸ்ரேலிய குடியேறி ஒருவரை கொன்று இரு பொலிஸார் உட்பட மேலும் மூவருக்கு காயம் ஏற்படுத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் கத்திக் குத்து தாக்குதலில் ஈடுபட்ட பலஸ்தீனர் ஒருவரை இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படை சுட்டுக்கொன்றது.



ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலத்தின் பாபல் சில்சிலா பழைய நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜெருசலத்தின் சுவாபத் அகதி முகாமைச் சேர்ந்த பாதி அபூ ஷ் கெய்தம் என்ற 42 வயது பலஸ்தீன ஆடவர் ஒருவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதில் 30 வயதுகளில் உள்ள குடியேறி தலையில் காயத்திற்கு உள்ளான நிலையில் அந்த காயம் காரணமாக மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார் என்று இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

46 வயதான மற்றொரு இஸ்ரேலிய குடியேறி ஆபத்தற்ற நிலையில் இருப்பதாகவும் இரு இஸ்ரேலிய பொலிஸார் சிறு காயத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

# கொவிட்-19 கட்டுப்பாடுகளுக்கு எதிராக ஐரோப்பாவில் புதிய ஆர்ப்பாட்டங்கள்

### நெதர்லாந்தில் 2ஆவது நாளாக கலவரம்

ஐரோப்பாவில் கொரோனா தொற்று சம்பவங்கள் அதிகரிக்கும் நிலையில் புதிய பொது முடக்கநிலை விதிகளுக்கு எதிராக நெதர்லாந்தில் புதிய வன்முறைகள் வெடித்துள்ளன.




ரொட்டாமில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் வன்முறை வெடித்த நிலையில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதற்கு அடுத்த தினமும் ஹேகில் சைக்கிள்களுக்கு தீ வைத்த மக்கள் பொலிஸ் நிலையத்தின் மீது எரியும் பொருட்களை வீசினர்.

இந்தப் பிராந்தியத்தில் கொரோனா தொற்று அதிகரிப்பது கவலை அளிப்பதாக உள்ளது என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நோய்த் தொற்று அதிகரிப்பதற்கு எதிராக பல அரசுகள் புதிய கட்டுப்பாடுகளை கொண்டுவந்துள்ளன. பிராந்தியத்தின் பல நாடுகளிலும் அண்மைய நாட்களில் தினசரி தொற்றுச் சம்பவங்களில் பெரும் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இந்நிலையில் நெதர்லாந்தின் பல நகரங்களின் இரண்டாவது நாளாகவும் கடந்த சனிக்கிழமை இரவு கலவரங்கள் வெடித்துள்ளன.

முகத்தை மறைக்கும் தொப்பிகளை அணிந்த கலகக்காரர்கள் ஹேக் வீதிகளில் இருக்கும் சைக்கிள்களுக்கு தீ வைத்தனர். இந்த கூட்டத்தினரை துரத்துவதற்கு கலகமடக்கும் பொலிஸார் தண்ணீர் பீச்சியடித்ததோடு நாய்கள் மற்றும் தடிகளையும் பயன்படுத்தினர். நகரில் அவசர நிலையை அறிவித்த அதிகாரிகள் குறைந்தது ஏழு பேரை கைது செய்தனர்.

நோயாளி ஒருவரை அழைத்துச் செல்லும் அம்புலன்ஸ் வண்டி ஒன்றின் மீது சிலர் ஜன்னல்கள் வழியாக கற்களை எறிந்து தாக்குதல் நடத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஐந்து பொலிஸார் காயமடைந்ததாகவும் முழங்காலில் காயம் ஏற்பட்ட ஒருவர் அம்புலன்ஸ் வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் நகர பொலிஸார் ட்விட்டரில் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் வேறு பகுதிகளில் ரசிகர்கள் மைதானத்திற்குள் நுழைந்ததால் இரு முன்னணி கால்பந்து போட்டிகள் சிறிது நேரம் நிறுத்தப்பட்டன. புதிய கொரோனா கட்டப்பாடுகள் காரணமாக ரசிகர்கள் மைதானத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நாளைக்கு முன் ரொட்டர்டாமில் இடம்பெற்ற கலவரம் “ஒரு கூட்டு வன்முறை” என்று நகர மேயர் கண்டித்துள்ளார். நிலைமை உயிர் அச்சுறுத்தல் கொண்டதாக இருந்ததால் வானை நோக்கியும் நேராகவும் எச்சரிக்கை வேட்டுகளை செலுத்த வேண்டி ஏற்பட்டது என்று பொலிஸ் பேச்சாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிக் காயம் காரணமாக குறைந்து மூன்று ஆர்ப்பாட்டக்காரர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து நிர்வாகம் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொவிட்19 சம்பவம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்ததை அடுத்து நெதர்லாந்தில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மூன்று வாரங்களுக்கு பகுதி அளவான முடக்க நிலை அமுல்படுத்தப்பட்டது. மதுபான கடைகள் மற்றும் விடுதிகள் இரவு 8 மணிக்கு மூடப்பட வேண்டும் என்பதோடு விளையாட்டு நிகழ்ச்சிகளில் கூட்டம் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் அரசு புதிய முடக்க நிலையை அறிவித்ததை அடுத்து ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்கு 2022 பெப்ரவரியில் தடுப்பூசி பெறுவதை கட்டாயமாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் ஐரோப்பாவின் முதல் நாடாக ஆஸ்திரியா உள்ளது.

திங்கட்கிழமையில் இருந்து 20 நாட்களுக்கு ஆஸ்திரியாவில் முடக்க நிலை அமுல்படுத்தப்படுகிறது. அத்தியாவசிய கடைகள் தவிர அனைத்து கடைகளும் மூடப்படுவதோடு மக்கள் வீடுகளில் இருந்து பணிபுரிய கோரப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டதற்கு எதிராக குரோசிய தலைநகர் சக்ரெப்பில் ஆயிரக்கணக்கானவர்கள் பேரணி நடத்தியுள்ளனர். தொழில் இடங்களில் தடுப்பூசி பெற்றதற்கான அனுமதிச் சீட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு எதிராக இத்தாலியின் சில நூறு பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## உய்குர் மக்களுக்கு ஆதரவாக லண்டன் நகரில் ஆர்ப்பாட்டம்

சீனா, உய்குர் முஸ்லிம்களை நடாத்தும் விதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அந்நாட்டின் சின்ஜியாங் மாகாணத்திலுள்ள தடுப்பு முகாம்களை மூடுமாறு கோரியும் பிரித்தானியாவின் லண்டனிலுள்ள சீனத் தூதரத்திற்கும் மன்செஸ்டரிலுள்ள கொன்சியூலர் அலுவலகத்திற்கும் முன்பாக ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.



இந்த ஆர்ப்பாட்டங்களில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டுள்ளதோடு உய்குர் முஸ்லிம்களுக்கான தங்களது ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளனர். 'சீனாவே இன அழிப்பை நிறுத்து' என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பியுள்ளனர். தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான அப்ஸல் கான், “உய்குர் மக்களை சீனா நடாத்தும் விதத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே நாங்கள் இங்கு கூடியுள்ளோம்.அந்தமக்கள்எதிர்கொண்டுள்ள நிலைமை பெரிதும் கவலையளிப்பதாக உள்ளது. அவை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை அல்ல. இந்நிலைமையை சீனா முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்” என்றார்.

உய்குர் முஸ்லிம்களை வெகுஜன தடுப்பு முகாம்களுக்கு அனுப்புதல், அவர்களது மத நடவடிக்கைகளில் தலையிடுதல், உய்குர் சமூகத்தின் உறுப்பினர்களை சில வகையான வலுக்கட்டாய மறு கல்வி நடவடிக்கைக்கு அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்காக உலகளாவிய ரீதியில் சீனாவுக்கு கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## சோமாலிய ஊடகவியலாளர் தற்கொலை தாக்குதலில் பலி

இஸ்லாமியவாத போராட்டக் குழுவான அல் ஷபாபை விமர்சித்து வந்த சோமாலியாவின் முன்னணி ஊடகவியலாளர் அப்தியசிஸ் மஹமுத் குலத், தலைநகர் மொகடிஷுவில் தற்கொலை குண்டுத் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டுள்ளார்.



அப்தியசிஸ் அப்ரிகா என்றும் அறியப்படும் அவர் கடந்த சனிக்கிழமை நண்பகலில் உணவு விடுதி ஒன்றில் இருந்து வெளியேறிய நிலையில் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் அருகில் இருந்த இருவர் காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த ஊடகவியலாளரை இலக்கு வைத்து தாக்குதலை நடத்தியதாக அல் ஷபாப் குறிப்பிட்டுள்ளது. அவர் ‘ரேடியோ மொகடிஷு‘ வானொலியில் பணியாற்றி வருகிறார்.

சோமாலிய தேசிய தொலைக்காட்சியின் பணிப்பாளர் மற்றும் ஓட்டுநர் ஒருவருடன் குலத் இருக்கும்போது உணவு விடுதிக்கு அருகில் கார் ஒன்றுக்கு முன்னால் தற்கொலைதாரி குண்டை வெடிக்கச் செய்திருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கைது செய்யப்பட்டிருக்கும் அல் ஷபாப் சந்தேக நபர்களை நேர்காணல் செய்து ஒலிபரப்புவதில் பெரிதும் அறியப்பட்டு வந்த குலத்தின் நிகழ்ச்சிகள் அதிகமானோரை கவர்ந்துள்ளது.

அல் ஷபாப் குழு ஐ.நா ஆதரவு அரச துருப்புகளுடன் ஒரு தசாப்தத்திற்கு மேலாக போராடி வருகிறது.

## பிரிட்டன் தடைக்கு ஹமாஸ் கண்டனம்

பலஸ்தீன போராட்டக் குழுவான ஹமாஸ் அமைப்பை பயங்கரவாத குழுவாக பிரிட்டன் அறிவித்ததற்கு அந்த அமைப்பு கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இந்த தடை மூலம் அந்த அமைப்புக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கு 14 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும்.



அடுத்த வாரம் பிரிட்டன் பாராளுமன்றத்தில் இந்தத் தடையை கொண்டுவரவிருக்கும் உள்துறை செயலாளர் பிரித்தி படேல், ஹமாஸ் அரசியல் மற்றும் ஆயுதப் பிரிவுகளை வேறுபடுத்தி பார்க்க சாத்தியம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் அடிப்படையில் கடுமையான யூத எதிர்ப்பு அமைப்பு என்றும் யூத சமூகத்தை பாதுகாக்க வேண்டி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு பதிலளிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் ஹமாஸ் அமைப்பு: “பஸ்தீன மக்களுக்கு எதிரான (பிரிட்டனின்) வரலாற்றுப் பாவத்தை சரி செய்வது மற்றும் மன்னிப்புக் கேட்பதற்கு பதில், பாதிக்கப்பட்டவர்களின் இழப்பில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளது.

சியோனிச அமைப்புக்கு பலஸ்தீன நலங்களை வழங்கிய பல்போர் பிரகடனம் மற்றும் பிரிட்டிஷ் அணையையே இதில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

## தாய்வான் விவகாரம்: லிதுவேனியா உடன் உறவை தரமிறக்கியது சீன

லிதுவேனிய தலைநகர் வில்னியுஸில் தாய்வான் செயலளவிலான தூதரகம் ஒன்றை திறந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து லிதுவேனியாவுடனான இராஜதந்திர உறவை சீனா தரமிறக்கியுள்ளது.




தாய்வான் என்ற பெயரில் இந்தத் தூதரகக் கட்டடத்தை திறப்பதற்கு லிதுவேனியா அனுமதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்க இராஜதந்திர நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

தனது ஆட்புலத்தின் ஓர் அங்கமாக தாய்வானை கருதும் சீனா ‘தாய்வான்’ என்ற பெயரை பயன்படுத்துவதை தடுக்க முயன்று வருகிறது.

“இறைமை மற்றும் சர்வதேச உறவுகளின் அடிப்படை அம்சங்களை பாதுகாப்பதற்காக இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை சீன அரசு தரம் குறைத்தது” என்று சீன வெளியுறவு அமைச்சு இது பற்றி வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

“இது தொடர்பில் எழும் அனைத்து விளைவுகளுக்கும் லிதுவேனிய அரசு பொறுப்பேற்க வேண்டும்” என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லிதுவேனியாவுக்கான சரக்கு ரயில்களை நிறுத்தி இருக்கும் சீனா அந்த நாட்டுக்கான உணவு ஏற்றுமதி அனுமதியையும் நிறுத்தியுள்ளது.

சீனாவின் இந்த முடிவை இட்டு வருந்துவதாக லிதுவேனிய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

# உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்த இது உகந்த நேரமாகும்



உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்த இது உகந்த நேரமாகும். தமிழ் பேசும் மக்கள் கட்சி பேதம் குலபேதமின்றி புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க முன்வரவேண்டும் என மக்கள் காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா எம்.பி தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கடந்த சனிக்கிழமை உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஒரு நாடு ஒரு சட்டம் என்று காலத்தை வீணடிக்காது அனைவரும் இணைந்து சிங்கள, முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ மக்களுக்கு உகந்தவற்றை பாராளுமன்றத்தில் ஆராய்ந்து முடிவு எடுக்க முடியும்.

உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்த இது உகந்த நேரமாகும். தமிழ் பேசும் மக்கள் கட்சி பேதம், குல பேதமின்றி புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க முன்வரவேண்டும். 225 எம்.பிகளும் வாக்களித்த மக்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

மாகாண சபை வெள்ளை யானையைப் போன்றது. எம்.பிகளினதும் ஜனாதிபதியினதும் ஓய்வூதியம் நிறுத்தப்பட இருக்கிறது. அதனை செய்வோம்.

இலங்கையர்களாக சிங்கள மக்கள் எங்கள் சகோதரர்கள். தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். சிறியளவினரே உள்ளனர். நாம் பேசி எமக்கு உகந்த அரசியலமைப்பை அமைப்போம். வெளிநாடுகளுக்கு தலைசாய்க்கத் தேவையில்லை. நாம் உகந்த யாப்பொன்றை பொருளாதாரத்திற்கான சிறந்த கொள்கைத் திட்டமொன்றை தயாரிப்போம். ஒரு நாடு ஒரு சட்டம் என்று காலத்தை வீணடிக்காது அனைவரும் இணைந்து சிங்கள, முஸ்லிம். தமிழ், கிறிஸ்தவர்களுக்கு உகந்தவற்றை ஆராய்ந்து பாராளுமன்றத்தினால் முடிவு எடுக்கலாம். பிரச்சினைகளை பேசி தீர்ப்போம். வெளிநாடுகள் ஒப்பந்தங்கள் பற்றி எமக்குக் கூறத் தேவையில்லை.

## ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்

நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் நாள் ஒன்றுக்கு 175 தொற்றாளர்கள் பதிவானார்கள். பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள அந்த மக்கள், பல்வேறு கொவிட் மத்திய நிலையங்களுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். அதனால் ரம்பொடையில் உள்ள தொண்டமான் கலாசார நிலையம் மற்றும் தொண்டமான துறைப்பயிற்சி நிலையமும் கொவிட் நிலையங்களாக மாற்றினோம். மஸ்கெலியாவில் இரண்டு வைத்தியசாலைகளை புதுப்பித்தோம். இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டு கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைக்க முடிந்தது.

பெருந்தோட்ட விவகாரம் தொடர்பாக அரசாங்கத்துடன் பேசிப் பயனில்லை. பெருந்தோட்ட கம்பனிகளுடனே பேசவேண்டும். கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து இரு தரப்பினரும் வெளியேறி இருக்ம் நிலையில், பல்வேறு பிரச்சினைகள் இடம்பெறுகின்றன. மஸ்கெலியாவில் பாரிய அடக்குமுறை இடம்பெறுகின்றது. இதற்கு அரசாங்கமோ எதிர்த்தரப்போ காரணமல்ல. கம்பனிகளே இதற்குக் காரணம். கூட்டு ஒப்பந்தம் இல்லாதமையால் அவர்கள் நினைத்தவாறு செயற்படுகின்றனர். ஆனால் கூட்டு ஒப்பந்தம் தேவை . என்றாலும் தற்போது மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெற இருக்கும் கலந்துரையாடலில் பேசுவோம்.

மலையத்துக்கு பல்கலைக்கழகம் அமைப்பதற்கு பொருத்தமான காணி தேடிக்கொண்டிருக்கின்றோம். நாங்கள் நினைத்திருந்திருந்தால் கட்டடத்தை கொடுத்து பல்கலைக்கழகம் அமைத்திருக்கலாம். ஆனால் எமது நோக்கம் அதுவல்ல. அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய பல்கலைக்கழகம் அமைப்பதே எமது நோக்கம். அதனை அமைத்தே தீருவோம். மலையகத்துக்கு பல்கலைக்கழகம் வரும். அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸினாலே உருவாக்கப்படும் அதனை யாராலும் தடுக்க முடியாது .

## பழனி திகாம்பரம் எம்.பி (ஐ. ம. ச)

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்திற்குள்ளேயே மக்கள் எதிர்ப்பினை சம்பாதித்துள்ளது. இந்நிலையில் வரவு செலவு திட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போதும், ஏமாற்றம் தரும் வரவு செலவு திட்டமொன்றே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டுப்பற்று உள்ளவர்கள் போன்று பேசினாலும், நாட்டுக்கான நல்லவை நடப்பதாக இல்லை.

இன்று பெரும்பாலான மக்கள் அரச எதிர்ப்பு மன நிலையிலேயே உள்ளனர். சகல துறை சார்ந்தவர்களும் தமது உரிமைகளுக்காகவும் தேவைகளுக்காகவும், போராடும் நிலைமையே காணப்படுகின்றது.

கடந்த அரசாங்கத்தில் நாம் எடுத்த சகல அபிவிருத்தி பணிகளும் இன்று கிடப்பில் போடப்பட்டுள்ளன. எமது ஆட்சியில் மலையகத்திற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை முன்னெடுத்தோம். மலையகத்தில் புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டன. பிரேதேச சபைகளை அதிகரித்தோம். மலையகத்திற்கு சேவை செய்ய புதிய அதிகார சபைகளை உருவாக்கினோம். ஆனால் அவற்றை முன்னெடுக்க நிதி ஒதுக்கப்படவில்லை.

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் வழங்க வேண்டும் என அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்ட போதும் அரசாங்கத்தின் ஏனைய சகல வர்த்தமானிகள் போலவே இதுவும் இன்னும் நடைமுறையில் வரவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளமும் கிடைக்கவில்லை. கம்பனிகளின் அடக்குமுறை அதிகரித்துள்ளது. இவற்றையெல்லாம் அரசாங்கம் கண்டுகொள்ளவும் இல்லை. இன்று பெருந்தோட்ட காணிகள் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. இலங்கை மட்டுமே கொரோனாவை காரணம் காட்டி நாட்டை பின்னோக்கி செல்கின்றது . எனவே அரசாங்கம் மக்களின் அபிலாசைகளை தீர்க்க வேண்டும். எஞ்சிய குறுகிய காலத்திற்காவது மக்கள் ஆட்சியை நடத்த வேண்டும்.

## செல்வராஜா கஜேந்திரன் எம்.பி (தமிழ் தேசிய மக்கள் முன்னணி)

13 ஆவது திருத்தத்தையோ ஒற்றையாட்சியையோ நாம் ஒருபோதுமே தீர்வாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எங்களது உரிமைக்கு நாம் தொடர்ந்தும் போராடுவோம். எனவே அரசு தனது அணுகுமுறையை மாற்ற வேண்டும்.

கடந்த 2009 யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இதுவரை 13 வரவு செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தமிழ் தேசத்தை முற்றாக புறக்கணித்தே தயாரிக்கப்பட்டிருந்தன. துறைமுக அதிகாரசபை ஊடாக வடக்கில் மயிலிட்டி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு அது தமிழ் மக்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டு இன்று முழுமையாக சிங்கள மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை, வர்த்தகத்துறை உங்களின் கொள்கையினால் அழிக்கப்படுகின்றன. இந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தே ஆக வேண்டுமென்ற நிலையில் நாம் உள்ளோம். கடந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களுக்கு சமஷ்டி வழங்கினால், அதிகாரங்கள் வழங்கினால் நாடு பிரிந்து விடுமெனக்கூறி இனவாதமாக செயற்பட ஆரம்பித்திருந்தீர்கள். சமஷ்டி கொடுத்தால் நாடு பிளவு படும் என்ற எண்ணத்திலிருந்து விடுபடுங்கள். 13 ஆவது திருத்தத்தையோ ஒற்றையாட்சியையோ நாம் ஒருபோதுமே தீர்வாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எங்களது உரிமைக்கு நாம் தொடர்ந்தும் போராடுவோம்.

## வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசோ கொரோனா தொற்றோ காரணமில்லை. 1955ஆம் ஆண்டில் இருந்து நாட்டை ஆட்சி செய்துவந்த அனைத்து கட்சிகளுமே இந்த பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பு. நாடு பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. .நாட்டில் பணம் இல்லை. டொலர் இல்லை என்பதை நாங்கள் வெளிப்படையாக தெரிவித்து வருகின்றோம். அவ்வாறு இல்லாமல் நாட்டில் அவ்வாறான பிரச்சினை இல்லை. தேவையான அளவு பணம் இருப்பதாக நாங்கள் தெரிவித்துவந்தால் இந்தப் பிரச்சினையில் இருந்து எமக்கு வெளியில் வரமுடியாது. அதனால்தான் கடந்த ஜூன் மாதம் ஆரம்பத்திலேயே நாட்டின் பொருளாதார பிரச்சினை தொடர்பாக தெரிவித்தேன்.

1955ஆம் ஆண்டில் இருந்து நாங்கள் சமர்ப்பித்த அனைத்து வரவு செலவு திட்டங்களும் பற்றாக்குறை வரவு செலவு திட்டங்களே. எமது வருமானத்தையும் பார்க்க செலவு அதிகம். அதனால் பற்றாக்குறையை நிரப்பிக் கொள்ள கடன் பெற்றோம். அவ்வாறு பெற்ற கடன்தான் இப்போது பாரிய பிரச்சினையாகி இருக்கின்றது. அதனால் இந்தப் பிரச்சினைக்கு 1955இல் இருந்து ஆட்சி செய்த அனைவரும் பொறுப்பு கூறவேண்டும். எமது அனைத்துத் தேவைகளுக்கும் வெளிநாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் நிலையே உள்ளது. பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினத்தை சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தேசிய கொடியை அசைத்துத்தான் கொண்டாடுகிறோம்.

கொரோனா காரணமாக இன்றைய பிரச்சினை ஏற்படவில்லை. 2019இல் எமது பொருளாதார அபிவிருத்தி வேகம் 2 வீதத்துக்கு குறைந்துள்ளது. கடன் வீதம் 87வீதத்தால் அதிகரித்துள்ளது. அதுதான் பொருளாதார வீழ்ச்சிக்கான அடையாளம். இந்தப் பிரச்சினை எப்போதாவது வெடிக்கவே இருந்தது. என்றாலும் கொரோனா காரணமாக விரைவாக வெடித்திருக்கிறது.

2019ஆம் ஆண்டு இறக்குமதி செலவு மற்றும் ஏற்றுமதி வருமானங்களுக்கு இடையில் வித்தியாசம் 8 பில்லியன் டொலர். கொரோனா தொற்று ஏற்பட்டதனால் வருமான வழிகள் தடைப்பட்டன. அதனால் யார் ஆட்சியில் இருந்தாலும் இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும்.

கொரோனாவைப் பயன்படுத்தி அனைவரும் இணைந்து அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு பதிலாக அனைவரும் இணைந்து கொரோனாவைத் தோற்கடிப்பதற்கு இணைந்து செயற்படவேண்டும். என்றாலும் எதிர்க்கட்சி கொவிட் நிலையையும் பொருட்படுத்தாது, கொரோனா 4ஆவது அலையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருவது கவலைக்குரியது.

# பட்ஜட் விவாதம்



சபை நிருபர்
ஷம்ஸ் பாஹிம்













## அங்கஜன் இராமநாதன் (பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர்)

எமது அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விமர்சிக்கும் தமிழ்கட்சிகள் அவர்களின் நல்லாட்சியில் ஏன் இதில் சிறு பகுதியையேனும் செய்யவில்லை. மக்கள் பல சவால்களை இன்னல்களை சந்தித்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் வந்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா அலைகள், அதிக விலைவாசி உயர்வுகள், பதுக்கல்கள், உணவுப் பற்றாக்குறை என இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் இதற்கான தீர்வுகளை இந்த வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கின்றனர். மக்களுக்கு மேலும் சுமைகளை சுமத்தாமல் இருப்பதே இதில் முதல் தீர்வாகும். வழமையான மக்களிடமிருந்து வரிகள் மூலம் பணத்தை எடுத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கு கொடுக்கப்படும். ஆனால் இம்முறை சொற்ப நபர்களிடமிருந்து நிதியை எடுத்து மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மக்களின் வலியை, சுமையை அறிந்து தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமாகவே இது உள்ளது.

இதனை விட கடந்த ஒன்றரை வருடங்களில் இந்த அரசும் நாமும் எமது மக்களுக்கு செய்த அபிவிருத்தி பணிகள் ஏராளம். ஒவ்வொரு கிராமத்துக்கும் 20 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டு, யாழ் மாவட்டத்தில் மட்டும் 3100க்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. யாழ் மாவட்டத்தில் ஒரே தடவையில் 26 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக்கப்பட்டுள்ளன. குடாநாட்டு மக்களின் தண்ணீர் பிரச்சினைக்கும் தீர்வு முன் வைக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தில் 16 உற்பத்திக்கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் 20 இளைஞர், யுவதிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் 6 நகரங்கள் பல் பரிபாலன நகரங்களாக அபிவிருத்திக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. 30 விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கில் மட்டும் முன்னடுக்கப்பட்டுள்ளன. முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் விழுந்த வாக்குகள் 374401. யாழ் மாவட்டத்தில் விழுந்த வாக்குகள் 23261. வாக்குகளில் வித்தியாசம் இருந்தாலும் நிதி ஒதுக்கீடுகளில் வித்தியாசம் இல்லையென்பதனை நான் அடித்துக் கூறுகின்றேன். 14021 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் சரி சமமான நிதி ஒதுக்கீடாக 30 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒரு அற்புதமான வேலைத்திட்டம்.

இன்று வடக்கில் பல இடங்களில் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இங்கு பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகள் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் வசமே உள்ளன. அவர்கள் ஒழுங்காக வேலை செய்திருந்தால் இந்தப் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்காது. ஆனால் அவர்கள் வீதிகள் அமைப்பதாலேயே வெள்ளப்பாதிப்புக்கள் ஏற்படுவதாக கூறுகின்றனர். யாழ் மாநகரத்தில் கடந்த வாரம் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் உடனடியாக வழிந்தோடியது. யாழ் மாநகர சபையினர் இந்த வருட முற்பகுதியில் வடிகான்களை துப்புரவாக்குவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். அதனால் வெள்ளம் உடனடியாகவே வழிந்தோடியது. யாழ் மாநகர சபைக்கும் முதல்வருக்கும் உறுப்பினர்களுக்கும் களப் பணியாளர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். யாழ் மாநகரசபை போன்று அனைத்து உள்ளூராட்சி சபைகளும் வேலை செய்தால் நிச்சயமாக எமது பிரதேசங்கள் மேலும் அபிவிருத்தியடையும்.

எமது அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விமர்சிக்கும் தமிழ்க் கட்சிகள் அவர்களின் நல்லாட்சியில் ஏன் இதில் சிறு பகுதியையேனும் செய்யவில்லை? அவர்கள் செய்தது வெறுமனே கம்பெரலிய. அதாவது தமது விருப்பு வாக்குகளை எப்படி அதிகரிக்க முடியும் என்ற திட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்தினர், யாழ் கூட்டுறவுத்துறைக்கு கொடுக்கப்பட்ட 1000 மில்லியன் ரூபாவைக்கூட இவர்கள் சரியாக பயன்படுத்தாது வீணடித்தனர் .

## ஜே .வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக எம்.பி.

நாம் பெற்றுக் கொண்டுள்ள கடன்களை பொறுத்தவரை ஆண்டு தோறும் 7 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. ஏற்றுமதி இறக்குமதிக்கு இடையிலான பாரிய இடைவெளி 8 பில்லியனை விஞ்சியதாக அமைந்துள்ளது. எனவே கடன்களையும் இறக்குமதியையும் சமாளிக்க 15 பில்லியன்கள் டொலர்கள் தேவைப்படுகின்றன. ஏற்றுமதி மூலமாக 11 பில்லியன் அமெரிக்க டொலர்களை எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சர் கூறினார். இறக்குமதிக்கு மட்டுமே 20 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்றன. இதனை சமாளிக்க தெளிவான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

சகல துறைகளிலும் வருவாய் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுகையில் பாரிய வீழ்ச்சியொன்று இந்த ஆண்டில் வெளிப்பட்டுள்ளது. இவற்றை மீளவும் பெற்றுக்கொள்ளும் குறுகிய கால வேலைத்திட்டமொன்று அவசியம். விவசாயத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்படப் போகின்றது. ஆகவே பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இதுவரை காலமாக கையாளப்பட்ட அரசியல், சமூக, பொருளாதார கொள்கை இந்த நாட்டை முழுமையாக நாசமாக்கியுள்ளது. இத்தனை கால பொருளாதார கொள்கையும் அரசியலும் எமது நாட்டை முழுமையாக நாசமாக்கிவிட்டன.

பேர்பச்சுவல் நிதியம் சட்டவிரோதமாக சம்பாதித்த 850 கோடி ரூபாவை மீண்டும் திறைசேரிக்கு பெற்றுக்கொள்ள நிதி அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது,

## வினோ நோகராதலிங்கம் எம்.பி (தமிழ் தேசியக்கூட்டமைப்பு)

இதேவேளை வன்னி மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மாவட்ட செயலகங்களில், பிரதேச செயலகங்களில் நடக்கும் கூட்டங்களில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து அங்குள்ள அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாகவோ, ஏனைய விடயங்கள் தொடர்பாகவோ எந்த வித ஆலோசனைகளும் நடத்தப்படுவதில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களைத் தவிர, மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களைத் தவிர வேறு எவற்றுக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை அழைக்கப்படுவதில்லை. ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர்கள் தன்னிச்சையாக முடிவெடுத்து அரச அதிகாரிகள் மூலம் குறிப்பாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு எம்.பி.க்கள் கலந்து கொள்ள முடியாதவாறு தடைகளை ஏற்படுத்துகின்றனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதிவரை ஒன்றுகூடல்களுக்கு புதிதாக ஒரு தடை விதிக்கப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சியினர் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்த இருந்ததாலும் ஒரே கல்லில் இரு மாங்காய்களாக மாவீரர் தினம் தமிழர் பகுதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாலும் இவற்றை புதிய சட்டம் மூலம் வர்த்தமானி ஊடாகத் தடுக்க முயற்சி நடைபெறுகிறது.

ஆர்ப்பாட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற நிலையில் அங்கு எந்தவித கொரோனா தொற்றுக்களும் ஏற்படவில்லை. ஆனால் வடக்கு,கிழக்கில் அஞ்சலி செலுத்த புறப்படுகின்ற வேளையிலே இவ்வாறான தடைகள் போடப்படுகின்றன.

# அரசின் தலைவர்களுடன் கலந்துரையாடியே எமது தேவைகளை நிறைவேற்ற முடியும்



எமக்கு முன்னர் அரசியல் செய்த எமது தலைவர்கள் ஆட்சியாளர்களுடன் சமரசமாக நடந்து சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துள்ளதை போன்றே நாமும் ஜனாஸா விவகாரம், முஸ்லிம் தனியார் சட்டம், ஞானசார தேரர் தலைமையிலான ஆணைக்குழு விவகாரம் என பல விடயங்களை கையாண்டு தீர்த்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை, வாழைச்சேனை, தோப்பூர் போன்ற விடயங்களை கையாள வேண்டுமானால் நாம் அரசின் தலைவர்களுடன் பேசித் தான் எமது பூர்வீக நகரங்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும். எதிர்வினை அரசியல் செய்தால் இந்த விடயங்களை தீர்ப்பது யார் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

வரவு செலவுத்திட்ட 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று (20) உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எமக்கு முன்னர் அரசியல் செய்த எமது தலைவர்கள் சில விடயங்களை வழிகாட்டிச் சென்றுள்ளனர். அன்றிருந்த ஆட்சியாளர்களுடன் சமரசமா க நடந்து சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துள்ளனர். இந்தப் பட்டியலில் ராசிக் பரீத், ரீ.பி.ஜாயா, எம்.சீ.எம்.கலீல், பதியுதீன் மஹ்மூத், எம்.எச்.எம் அஷ்ரப் என பலர் இருக்கிறார்கள்.

கொவிட்டினால் இறக்கும் மரணங்களை புதைப்பது தொடர்பான பிரச்சினை வந்தது. மு.கா எம்.பிகள் நால்வரையும் மக்கள் காங்கிரஸ் எம்.பிகள் மூவரையும் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்க அழைத்த போது கொரோனா மரணங்களை புதைப்பது தொடர்பான விடயங்கள் மற்றும் பிராந்திய பிரச்சினைகளைப் பேசி இவற்றுக்கானத் தீர்வு காண முயன்றோம். இது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் வந்தன. கோழையாக ஒழியாது பின்னர் ஜனாஸா விடயங்களைத் தீர்த்தோம். முஸ்லிம் தனியார் சட்ட விடயத்திலும் அமைச்சர் அலி சப்ரியுடன் பேசி பல முன்னேற்றகரமான விடயங்களை செய்கையில் துரதிஷ்டவசமாக ஞானசார தேரர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இது தொடர்பில் சமூகத்தில் ஆத்திரமும் ஆவேசமும் ஏற்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் அலி சப்ரியுடனும் உயர்மட்டத்துடனும் பேசினோம். இதனால் ஏற்படும் தாக்கம் பற்றி எடுதுரைத்தோம். அமைச்சர் அலி சப்ரி சாமர்த்தியமாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசிய நிலையில் அந்த செயலணியின் அதிகாரம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மாடறுப்பு தொடர்பான பிரச்சினை வந்துள்ளது. முஸ்லிம் பிரதிநிதிகள் இது தொடர்பில் பேசி வருகின்றனர். பொருளாதார ரீதியில் ஏற்படும் பாதிப்பு பற்றி தெளிவுபடுத்தி வருகிறோம். அதில் நல்ல தீர்வு வரும் என்ற நம்பிக்கை உள்ளது. எமது காணிப் பிரச்சினைகள் பற்றியும் பிராந்திய ரீதியான விவகாரங்களை பற்றியும் பேசி வருகிறோம். இது தவிர கல்முனை, வாழைச்சேனை, தோப்பூர் போன்ற விடயங்களை கையாள வேண்டுமானால் நாம் அரசின் தலைவர்களுடன் பேசித் தான் எமது பூர்வீக நகரங்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும். எதிர்வினை அரசியல் செய்தால் இந்த விடயங்களைத் தீர்ப்பது யார்?

உள்ளூராட்சி மன்ற வரவு செலவு திட்டத்தின்போது...

# ஸ்ரீ.ல.சு.கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பது தொடர்பில் கட்சி அழுத்தம் கொடுக்காது

## அநுராதபுரத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

உள்ளூராட்சி மன்ற அமைப்புக்களின் எதிர் கால வரவு செலவு திட்டங்களின் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் வாக் களிப்பது தொடர்பில் கட்சி எவ்வித அழுத் தங்களையும் பிரயோகிக்காது. வரவு செலவு திட்டங்களுக்கு உறுப்பினர்கள் ஆதரவளிக் களிக்கவில்லை என்றால் அது தொடர்பில் கட்சி எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைக ளையும் எடுக்காது எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

எமது தொழில் சென்று அவர்கள் வயிறு வள ர்ப்ப தற்கு அனுமதிக்க முடியாது. உங் களின் உரிமையை நீங்கள் சுயாதீனமாக பிரயோகியுங்கள் அது உங்களின் உரிமை. அதற்காக கட்சியில் இருந்து எந்த தடையும் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மோசடி மற்றும் ஊழலை எதிர்க்க உங்களுக்கு உரிமை உள்ளது. உள் ளூராட்சி மன்றங்களில் பல மோச டிகள் இடம்பெற்று வருகின்றன. சில தலைவர்கள் பணத்திற்காக கையெழுத்து போட வேலை செய் கின்றார்கள். அது தொடர்பில் நாம் தகவல்களை சேகரித்து வருகின் றோம். அதற்கு எதிராக நாம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு செல்வோம். நாம் அரசாங்கத்தின் பங்காளி கட்சி என்று இருக்க மாட்டோம். இவைகளை நாட்டு மக் களுக்கு தெளிவு படுத்துவோம். நாம் அரசாங் கத்துடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதனை செய்வோம். இந்த இடத்திற்கு வர நீண்ட நேரம் ஆனது எனவும் தெரிவித்தார்.



அனுராதபுரம் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் அனுராதபுரம் மாவட்ட பிரதான கட்சி அலுவ லகத்தில் (19) இடம்பெற்ற விசேட கலந்துறையாடலின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்க ளின் வரவு செலவு திட்டத்தையும் அதிகாரத்தையும் பாதுகாக்கவும் அரசாங்கம் தவறு செய்யும் போது அமைதியாக இருக்கவும் முடியாது என தெரிவித்த அமைச்சர் தேவைப் பட்டால் பதவியை விட்டு விலகுவது குறித்து இருமுறை யோசிக்கப் போவதில்லை என்றும் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தேசிய அமைப் பாளர் துமிந்த திஸாநாயக்க இங்கு தெரிவிக் கையில்: ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத் துடன் இருப்பது அமைச்சு பதவிகளுக்கோ வேறு சலுகைகளை எதிர்பார்த்தோ அல்ல. சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்கும் என தெரிவித்தார்.

# இரத்தினக்கல் வியாபாரத்தை மேம்படுத்தும் அரசின் திட்டத்தை எமது சங்கம் வரவேற்கின்றது

## சீனன்கோட்டை இரத்தினக்கல் வர்த்தக சங்க செயலாளர் லியாகத் ரஸ்வி

**பேருவளை விசேட நிருபர்**

2022 ம் ஆண்டிற்கான புதிய வரவு செலவுத் திட்டத்தில் இரத்தினக்கல் ஆபரண வியாபார நடவடிக்கைக ளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்காக அரசினால் முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களையும் சலுகைகளையும் பெரும்பான்மையான வர்த்தகர்கள் அங்கத்துவம் வகிக்கும் சீனன்கோட்டை இரத் தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் சங்கம் வரவேற்பதோடு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ வையும் அவர்கள் பாராட்டியுள்ளனர்.



அண்மையில் பேருவளைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவினால் உறு தியளிக்கப்பட்ட சகல சேவைகளையும் வழங் கக் கூடிய தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் உத்தியோகபூர்வ கிளைக் காரியாலயத்தையும் இரத்தினக்கல் பயிற்சி மையத்தையும் அமைத்துத் தருவது குறித்தும் அவர்கள் நன்றியைதெறிவித்துக் கொண்ட னர். மேலும் அக்காரியாலயங்கள் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த சர்வதேச இரத்தினக் கல் வியாபார மையம் அமைந்துள்ள பத்தை 'சீனன்கோட்டை மாணிக்க கோபுரத்தில் '(China Fort Gem Tower) அமையவுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

இது தொடர்பில் கருத்தது தெரி வித்த சீனன்கோட்டை இரத்தினக் கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் லியாகத் ரஸ்வி, நவம் பர் மாதம் 13ம் திகதி இராஜாங்க அமைச்சரின் விஜயத்தின்போது வாக்குறுதியளிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதியமைச் சரின் வரவு செலவுத்திட்டத்தில் இலங்கையை மாணிக்க வியாபாரத்தின் மையமாக அமைக் கும் திட்டத்திற்கு உந்துகோளாக அமையும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் சங்கத்தில் நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் 1500 இற்கும் மேற் பட்டவர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். மேலும் இலங்கையில் அதிகமான மாணிக்க வர்த்தக அனுமதிப்பத்திரமுள்ள பிரபல மாணிக்க வியாபாரிகளை உள்ளடக்கிய இந்த சங்கத்தின் மூலம் இலங்கை, ஆபிரிக்கா உட்பட பலநாடுகளின் பெறுமதிவாய்ந்த 'ஸபையர்' உட்பட பெறுமதிமிக்க மாணிக்க கற்கள் ஏற்றுமதி இறக்குமதி மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரணவர்த்தகர்கள் சங்கத் தலைவர் பாரா ளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் , நிதிய மைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும், இராஜாங்கஅ மைச்சர் லொஹான் ரத்வத்தவிற்கும், தலைவர் திரு திலக் வீரசிங்கவிற்கும், அமைச்சின் செயலாளர் திரு எஸ்.எம். பியதிஸ்ஸ உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் தனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். மேலும் நாட்டின் அந்நியசெலாவணியைப் பெற்றுக் கொள்வதில் தொழில்சார் துறைதேர்ந் தவர்களின் உதவியுடன் இரத்தினக்கல் வியா பாரத்தினூடாகநாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பாரிய ஒத்துழைப்பு வழங்குவ தாகவும் அவர் இதன்போது உறுதியளித்தமை கயும் குறிப்பிடத்தக்கது.


## கூறுவிலை கோருதல்(IFB)

### போக்குவரத்து அமைச்சு
### பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நகரக் குடியிருப்பு அபிவிருத்திக்கூறு

கிரேட்டர் கொழும்பு நகராட்சி போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டு திட்டத்தின், போக்குவரத்து அமைச்சின் திட்ட கொள்முதல் குழு தலைவர், தகுதியான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர்களிடமிருந்து இடத்தை வாடகைக்கு எடுத்தல் தொடர்பான சீல் செய்யப்பட்ட ஏலங்களை அழைக்கிறது.

| கொள்முதல் இலக்கம் | பொருள் விபரம் | கூறுவிலை பிணைப் பணம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | கூறுவிலைக்கான இறுதித் தினம் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| MoT/3K/MMC/BD/2021/20.3/JB | குளிர்பான சாலை (194 sqft) | 30,000.00 | 3000.00 | 6-12-2021, 2:00 பி ப. |
| MoT/3K/MMC/BD/2021/20.19/MB | பால் சாலை (128.4 sqft) | 30,000.00 | 3000.00 | 6-12-2021, 2:00 பி ப. |
| MoT/3K/MMC/BD/2021/20.21/VS | காய்கறி கடை (99.2 sqft) | 30,000.00 | 3000.00 | 6-12-2021, 2:00 பி ப. |
| MoT/3K/MMC/BD/2021/20.30/VarS | பல்பொருள் கடை (320 sqft) | 30,000.00 | 3000.00 | 6-12-2021, 2:00 பி ப. |
| MoT/3K/MMC/BD/2021/20.31/CS | தேநீர் கடை (99.8 sqft) | 30,000.00 | 3000.00 | 6-12-2021, 2:00 பி ப. |
| MoT/3K/MMC/BD/2021/20.9/FH | வெற்று சமிஞ்சைதூண் (30'x50') | 30,000.00 | 3000.00 | 6-12-2021, 2:00 பி ப. |

1. தேசியப் போட்டி விலைமனு நடைமுறைக்கமைய விலைகூறுதல் இடம்பெறும்.
2. ஒப்பந்தம் தொடர்பிலான மீளளிக்கப்படாத கடடணத்தினைச் செலுத்தி அலுவலக நாட்களில் 2021 நவம்பர் 22 ஆந் திகதிலிருந்து 2021 டிசம்பர் 6 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணி வரையிலான நேரத்தில், கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கூறு, **GB-01**, அடித்தளம், செத்சிறிபாய கட்டம் **II**, பத்தரமுல்லை, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்துமூலம் வேண்டுகோளினைச் சமர்ப்பித்து, சிங்கள மொழியிலமைந்த முழுமையான விலைமனு ஆவணத்தினை பரிசோதித்து கொள்வனவு செய்து கொள்ள முடியும். பணம் மூலமான கொடுப்பனவு மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.
3. ஆர்வமிக்க விலைமனுதாரர்கள், கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கூறு, **GB-01**, அடித்தளம், செத்சிறிபாய கட்டம் **II,** பத்தரமுல்லை, இலங்கை. தொ.இல.: **011-2186094** பெக்ஸ்: **011-2186096** என்ற முகவரியூடாக மேலதிக விளக்கங்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
4. கொட்டாவவிலுள்ள மாகும்புர பல்நோக்கு மையத்திலிருந்து 2021 நவம்பர் 28 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு ஒரு தள விஜயம் ஆரம்பிக்கப்படும் என்பதுடன், தள விஜயம் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கூறுவிலைக்கு முன்னரான கூட்டம் நடாத்தப்படும்.
5. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கொள்முதல் இலக்கம் மற்றும் விடயம் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், கருத்திட்டப் பணிப்பாளர், **GB-01**, அடித்தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்கமுடியும்.
6. கூறுவிலையினை, 2021 டிசம்பர் **6** ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ, கீழ்வரும் முகவரிக்கு துணைப் பிரதியுடன் சமர்ப்பிக்க முடியும். பிந்திக் கிடைக்கும் கூறுவிலைகள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**கருத்திட்டப் பணிப்பாளர்,**
(பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கூறு,)
மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையம்,
கொட்டாவ,
மாகும்புர



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைத் துறைமுக அதிகார சபை

### கொழும்புத் துறைமுகத்திலுள்ள 'C' & 'D' AT JCT I & II உள்ளக வீதிகளின் புதுப்பித்தல் வேலைகள்

1. இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் அதன் பெறுகைக் குழுத் தலைவரினால் கொழும்புத் துறைமுகத்திலுள்ள 'C' & 'D' AT JCT I & II உள்ளக வீதிகளின் புதுப்பித்தல் வேலைகளுக்காக (ஒப்பந்த இலக்கம் **EW/JCT/02/2021/01**) தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.
2. இந்த ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   (அ) வீதி வேலைகளுக்கான விசேடத்துவப்படுத்தப்பட்ட C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கான ICTAD பதிவை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
   (ஆ) 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ், கூறப்பட்ட சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் தேவைப்படும் பதிவு.
3. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2021-12-01ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தளவிஜயம் இடம்பெறும்.
4. விலைமனுப் பிணை முறி 200,000.00 ரூபாவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற விலைமனு பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
5. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,000.00 ரூபாவைச் (வரிகள் உட்பட) செலுத்துவதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சிவில் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளரினால் (சிவில்) 21-11-23ஆம் திகதி முதல் 2021-12-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. விலைமனுக்களை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் உள்ளடக்கி ''கொழும்புத் துறைமுகத்திலுள்ள 'C' & 'D' AT JCT I & II உள்ளக வீதிகளின் புதுப்பித்தல் வேலைகள் (ஒப்பந்த இலக்கம் **EW/JCT/02/2021/01**)'' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, மே/பா பிரதான பொறியியலாளர் (சிவில்) இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளர் (சிவில்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. 2021-12-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
10. ஏதேனும் மேலதிக விபரங்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பொறியியலாளரிடமிருந்து (JCT) பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி இல. 011 - 2482878)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கைத் துறைமுக அதிகார சபை.**



## அம்பாறை பொது வைத்தியசாலை

### 2022/2023ஆம் வருடங்களுக்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2022ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள எதிர்பார்க்கும் வழங்குநர்கள் மற்றும் கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனிநபர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்கள்**

01. மருத்துவ உபகரணங்கள், சத்திர சிகிச்சை கருவிகள் மற்றும் மருத்துவ உபகரண உதிரிப்பாகங்கள்
02. பல் வைத்திய உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
03. ஆய்வுகூட உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், சிகிச்சைப் பொருட்கள் மற்றும் எதிர்வினைப் பொருட்கள்
04. வைத்திய உபகரணங்களுக்கு பயன்படுத்தும் கடதாசி வகைகளும் X-ray, CT Scan இயந்திரங்களுக்காக பயன்படுத்தும் Film Roll வகைகள்.
05. மருந்துகள் மற்றும் கட்டுத்துணிகள்
06. பால்மா வகைகள்
07. காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள்
08. கனரகப் பொருட்கள் (Hardware Items)
09. மருந்து மற்றும் கட்டுத்துணிகள்
10. தும்புத்தடி, ஈர்க்கிள், சலவைத் தூள்கள் உட்பட துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சலவையக இரசாயனப் பொருட்கள் மற்றும் குப்பையிடும் உறைகள்
11. மின்சார உபகரணங்கள் மற்றும் மின்சார துணைப்பாகங்கள்
12. தளபாடங்கள், வீட்டு உபகரணங்கள் மற்றும் வைத்தியசாலை உபகரணங்கள், தும்பு மெத்தைகள் மற்றும் இறப்பர் கலந்த மெத்தைகள்
13. வாகன உதிரிப்பாகங்களும் பற்றரி வகைகளும், டயர் வகைகளும் டியுப் வகைகளும்
14. சீருடைத் துணிகள், திரைச்சீலைகள் உட்பட துணி வகைகள்
15. கணனியும் கணனிக்கான துணைப்பாகங்களும்
16. எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கி பொருட்கள்
17. சமையல் எரிவாயு மற்றும் வெல்டிங் எரிவாயு
18. மரப் பொருட்கள் மற்றும் மரப்பலகை வகைகள்
19. அச்சு காகிதாதிகள் வழங்கல் (அச்சு பைல் உறை)
20. ரப்பர் முத்திரை வழங்குதல்

**02. சேவைகள்**

01. வாகன திருத்தவேலைகள், சேர்விஸ் செய்தல், மின்சார வேலைகள் மற்றும் குஷன் இடுதல் மற்றும் காப்புறுதி செய்தல்
02. Buggy Cart வண்டிகளின் திருத்தவேலைகளைச் செய்தல் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல்
03. அனைத்து மின்சார உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் திருத்தவேலைகள்
04. கணனி இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள், ரிசோ இயந்திரங்கள் போன்ற அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்
05. மருத்துவ உபகரணங்களின் திருத்தவேலைகள்
06. தொலைபேசிகளின் திருத்தவேலைகள்
07. சலவை இயந்திர திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள்

**03. கட்டிடங்கள் மற்றும் பல்வேறு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) ஒப்பந்தக்காரர் பதிவு செய்திருத்தல் மற்றும் பின்வரும் தரத்திற்கான தேசிய பிரேரணை முறையின் கீழ் இயைபுடைய தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கான கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

தகுதிகள் - C9, EM 05 அதற்கு மேல் (திருத்தப்பட்ட பதிவுசெய்தல் விதிமுறைகளின் பிரகாரம்)

பதிவுக் கட்டணமாக மேற்படி ஒவ்வொரு வகுதிக்காகவும் சமர்ப்பிக்கும் போது (ஒரு வழங்கல்/சேவைக்காக) மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையை அம்பாறை பொது வைத்தியசாலையின் சிறாப்பருக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் இயைபுடைய விண்ணப்பப் படிவங்களை 2021.11.22ஆம் திகதி முதல் 2021.12.22ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (முத்திரைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

விண்ணப்பப் படிவங்களை தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து ஒட்டி சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரமானது 2021.12.23ஆம் திகதி மு.ப. 10.25 மணியாகும் என்பதுடன் அன்றைய தினம் மு.ப. 10.30 மணிக்கு வைத்தியசாலை பெறுகைக் குழுவின் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பங்கள் திறக்கப்படும் நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை அம்பாறை பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

வழங்கல்/சேவையின் பொருட்டான விலைமனுக்கள் பொதுவாக வழங்குநர்களின் பட்டியலிலிருந்தே கோரப்படும் என்பதுடன் தேவையான வேளையில் பதிவு செய்யப்பட்ட பட்டியலுக்குப் புறம்பாக விலைகளைக் கோருதல் மற்றும் வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையை வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**மருத்துவர் உபுல் விஜேநாயக்க,**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை,**
**அம்பாறை.**

**063 2222261 - நீடிப்பு 240**

# பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

### தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்

பின்வரும் பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

### CBO நீர் வழங்கல் திட்டங்களுக்காக PVC/GI/DI குழாய்கள் மற்றும் பொருத்துதல்களின் வழங்கல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்காக PVC/GI உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடம் இருந்து பெறுகைக் குழுவினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்தப் பெயர் | தகைமைகள் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ரூபாவில் விலைமனு பிணை (வங்கி உத்தரவாதம்) | ஆவணம் வழங்கப்படும் இடம் மற்றும் ஒப்பந்த நபர் மற்றும் விலைமனு இறுதித் திகதி |
|---|---|---|---|---|
| 1. PVC குழாய்கள் மற்றும் பொருத்துதல்களின் வழங்கல் ஒப்பந்த இல.: **DNCWS/PRO/2021/PVC/03** | PVC குழாய் உற்பத்திகள் மற்றும் வழங்கல்கள் | 6,000.00 | 275,000.00 | பணிப்பாளர் (பெறுகை), தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம், இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட<br>தொ.பே. – 0112774927<br>விலைமனு இறுதித் திகதி மற்றும் நேரம்<br>2021 டிசம்பர் 7 அன்று, மு.ப. 10.00 |
| 2. GI/DI குழாய்கள் மற்றும் பொருத்துதல்களின் வழங்கல் ஒப்பந்த இல.: **DNCWS/PRO/2021/GI/03** | GI/DI வழங்கல்கள் | 4,000.00 | 200,000.00 | |

### CBO நீர் வழங்கல் திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகள்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்காக ஒப்பந்ததாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| # | விபரம் | குறைந்தபட்ச ICTAD பதிவு மற்றும் அனுபவம் | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனு செல்லுபடிக் காலம் (நாட்கள்) | ஆவணம் வழங்கப்படும் இடம் மற்றும் ஒப்பந்த நபர் மற்றும் விலைமனு இறுதித் திகதி |
|---|---|---|---|---|---|---|
| | **புத்தளம் மாவட்டம்** | | | | 120 | பணிப்பாளர் (பெறுகை), தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம், இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட<br>தொ.பே.: +9411 2774927<br>விலைமனு இறுதித் திகதி மற்றும் நேரம்<br>2021 டிசம்பர் 07 அன்று, மு.ப. 10.00 |
| 01 | Construction of $60m^3$ /12m height Ferrocement water tank in Henepola, Madampe in Puttalam District. DNCWS/PRO/2021/CV/03/PU/15 | C7 மற்றும் அதற்கு மேல் | 65,000 | 3500 | | |
| 02 | Construction of $60m^3$ /12m height Ferrocement water tank with plant room in Panangoda, Mahawewa in Puttalam District. DNCWS/PRO/2021/CV/03/PU/18 | C7 மற்றும் அதற்கு மேல் | 75,000 | 3500 | | |
| | **குருநாகல் மாவட்டம்** | | | | | |
| 03 | Construction of 6m Dia 8m Depth concrete dug well, $80m^3$ Ferro cement ground tank, 60m3 capacity 12m height Ferro cement elevated tank, 3m x 3m Pump House in Pothuwila 350, Polpithigama in Kurunegala District. DNCWS/PRO/2021/CV/02/KN/05 | C6 மற்றும் அதற்கு மேல் | 130,000 | 5000 | | |
| 04 | Construction of Pump house, $30m^3$ Ferrocement elevated tank, Fence in Randiya Dahara, Lihinigiriya, Polgahawela in Kurunegala District. DNCWS/PRO/2021/CV/04/KN/20 | C7 மற்றும் அதற்கு மேல் | 90,000 | 3500 | | |
| | **முல்லைத்தீவு மாவட்டம்** | | | | | |
| 05 | Construction of $80m^3$ – 13m Height Elevated Tank, Dug well, 3m x 3m Pump house & Valve chamber at Ethavetunuwewa Randiya bidu Gramiya CBO, Ethavetunuwewa, Welioya in Mullaitivu district. DNCWS/PRO/2021/CV/05/MU/04 | C6 மற்றும் அதற்கு மேல் | 125,000 | 4000 | | |
| | **மன்னார் மாவட்டம்** | | | | | |
| 06 | Construction of $60m^3$ -12m height elevated tank, type 1 valve chamber in St. Joseph Rural Water Supply Society CBO, Achhankulam, Nanattan. DNCWS/PRO/2021/CV/01/MN/01 | C7 மற்றும் அதற்கு மேல் | 70,000 | 3500 | | |
| | **பொலன்னறுவை மாவட்டம்** | | | | | |
| 07 | Construction of 20m3 Elevated tank in Samagi Jala Pariboghi Samithiya, 239 Alawakumbura, Dimbulagala in Polonnaruwa District. DNCWS/PRO/2021/CV/04/PO/04 | C8 மற்றும் அதற்கு மேல் | 40,000 | 2500 | | |
| 08 | Construction of 80m3 Elevated Tank, (6m Dia x 8m) Dug well, (3m x 3m) Pump house at Elikimbulawa CBO, Diyabeduma, Elahera in Polonnaruwa District. DNCWS/PRO/2021/CV/07/PO/07 | C6 மற்றும் அதற்கு மேல் | 125,000 | 4000 | | |
| | **அநுராதபுரம் மாவட்டம்** | | | | | |
| 09 | Construction of 3m x3m Pump House, 40m3 capacity Ferro cement Elevated tank in 607 Keeriyagaswewa, Kekirawa in Anuradhapura District. DNCWS/PRO/2021/CV/02/AN/02 | C8 மற்றும் அதற்கு மேல் | 25,000 | 2500 | | |
| | **காலி மாவட்டம்** | | | | | |
| 10 | Construction of Dug well, Pump house, 60m3 Elevated tank, in Sisilasa Diyadana, 215 Aluththanayamgoda pahala, Nagoda in Galle District. DNCWS/PRO/2021/CV/04/GA/24 | C7 மற்றும் அதற்கு மேல் | 80,000 | 3500 | | |
| | **கிளிநொச்சி மாவட்டம்** | | | | | |
| 11 | Construction work at Urvanikanpattu water supply society, Mukavil, Pachchilaippalli in Killinochchi District. DNCWS/PRO/2021/CV/03/KI/02 | C7 மற்றும் அதற்கு மேல | 90,000 | 3500 | | |
| | **பதுளை மாவட்டம்** | | | | | |
| 12 | Construction of Weir intake, 20m3 Ferro cement ground tank, Retain wall 2.1m height, Barbed wire fence and fixing gate in Seelathenna, Haldummulla in Badulla District. DNCWS/PRO/2021/CV/02/BA/01 | C8 மற்றும் அதற்கு மேல் | 45,000 | 2500 | | |
| 13 | Construction of Weir intake, 20m3 Ferro cement ground tank, Retain wall 2.1m height, Barbed wire fence and fixing gate in Murutahinne, Haldummulla in Badulla District. DNCWS/PRO/2021/CV/02/BA/02 | C8 மற்றும் அதற்கு மேல் | 40,000 | 2500 | | |
| 14 | Construction of Weir intake, 20m3 Ferro cement ground tank, Retain wall 2.1m height, Barbed wire fence and fixing gate in Nikapotha West, Haldummala in Badulla District. DNCWS/PRO/2021/CV/02/BA/03 | C8 மற்றும் அதற்கு மேல் | 40,000 | 2500 | | |
| | **கண்டி மாவட்டம்** | | | | | |
| 15 | Construction of Intake well, Pump house, Fence, Gate & Drains at Nil Diya Dahara, Gamunupura, Ganga Ihala Korale, Gamunupura RWS DNCWS/PRO/2021/CV/07/KA/14 | C8 மற்றும் அதற்கு மேல் | 25,000 | 2500 | | |

**மேலுள்ள விடயத்திற்கான பொது அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள்**

1. தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்திற்கு மீளளிக்கப்படாத கட்டத்தின் (பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம், இலங்கை வங்கியின் 0007040440 என்ற கணக்கு இலக்கத்திற்கு) வைப்புச் செய்த ரசீது மற்றும் விண்ணப்பதாரரின் முகவரி அச்சிடப்பட்ட தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தால் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
2. விலைமனு ஆவணங்களை சாதாரண வேலை நாட்களில் 2021 டிசம்பர் 06 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணிக்கு இடையே பெற முடியும் (ஆவணங்களை பெறுவதற்கு தொலைபேசி வழியாக முன்னேற்பாட்டை மேற்கொள்ளவும்) என்பதோடு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடு காரணமாக வைப்பு ரசீது மற்றும் கோரிக்கை கடிதத்தின் பிரதி ஒன்றை மின்னஞ்சல் மூலமாகவும் (dncwsfortender@gmail.com) அனுப்பலாம்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு சாதாரண வேலை நாட்களில் அந்த இடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2021 டிசம்பர் 07 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது விரைதூதர் மூலம் சமர்ப்பிப்பதற்கு அல்லது திணைக்களத்தின் 2ஆவது மாடியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும்.
5. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 2021 டிசம்பர் 07 ஆம் திகதி மு.ப. 10.15 க்கு அதே முகவரியில் அனைத்து விலைமனுக்களும் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பித் தரப்படும்.
6. விலைமனு பிணையானது 2022 ஏப்ரல் 07 ஆம் திகதி வரை (விலைமனு திறக்கப்பட்டதில் இருந்து குறைந்தது 120 நாட்கள்) செல்லுபடியான, தலவத்துகொட, பன்னிப்பிட்டிய வீதி, இல. 1114, தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்,**
**இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட.**
**2021.11.22**

Sunday Observer adz
தினகரன் வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 300/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 650/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# நுவரெலியா மாநகர சபை

## 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட வரைவு அறிக்கை

மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் (அதிகாரம் 252) 212(ஆ) பிரிவின் பிரகாரம் நுவரெலியா மாநகர சபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட வரைவு அறிக்கையானது 2021 நவம்பர் 23ஆம் திகதி முதல் நவம்பர் 29 வரை பொது மக்களின் பரிசீலனைக்காக நுவரெலியா மாநகர சபை அலுவலகம் பொது நூலகம், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் போன்ற இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக எமது இணையமான (www.nuwaraeliya.mc.gov.lk) மூலமும் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

**பி. டி. சந்தன லால் கருணாரத்ன**
**நகர முதல்வர்,**
**நுவரெலியா மாநகர சபை.**

2021.11.19

# பொது மக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

## இலங்கையின் தேசிய சுற்றுலாத்துறைக் கொள்கை

சுற்றுலாத்துறையினால் இலங்கைக்கு தேசிய சுற்றுலாத் துறை கொள்கையொன்றைத் தயாரிக்கும் கருமத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலைபேரான சுற்றுலாத்துறைக் கைத்தொழிலொன்றை ஏற்படுத்துதலை உறுதிப்படுத்துதல் என்ற அடிப்படைக் கொள்கையை எதிர்பார்த்து சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக இச் சுற்றுலாக் கொள்கையானது உதவும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதனைத் தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேவையான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுலாத்துறை கொள்கையைத் தயாரிக்கையில் சுற்றுலாத்துறைக்கான அனைத்து சட்டங்கள் ஒழுங்கு விதிகள் வழிகாட்டல்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புள்ள அரச மற்றும் மாகாண சபைகளை இணைத்துக் கொண்டு கருத்துக்கள் மற்றும் பிரேரணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் தனியார் துறை மற்றும் ஏனைய துறை சார் தரப்பினர் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறையில் வளங்களை நுகர்தல் மற்றும் தொடர்பான எதிர்கால சவால்களை மிகவும் நுனுக்கமாக முகாமைப்படுத்துவதற்காக புதிய தேசிய சுற்றுலாத்துறைக் கொள்கையொன்றைத் தயாரிக்கையில் சுற்றுலாத்துறையின் சாத்தியமான நான்கு (பிரதான) துறைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய சுற்றுலாத்துறைக் கொள்கையின் வரைவு பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சுற்றுலாத்துறையின் உத்தியோக பூர்வ இணையமான www.tourismmin.gov.lk இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உங்கள் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகள் 2021.12.22 அன்று அல்லது அதற்கு முன்னர் தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் secretary@tourismmin.gov.lk இற்கு வழங்குமாறு இதற்காக ஆர்வமுள்ளவர்களிடம் சுற்றுலாத்துறை அமைச்சு கேட்டுக் கொள்கின்றது.

**செயலாளர், சுற்றுலாத்துறை அமைச்சு,**
**இரண்டாம் மாடி,**
**எசட் ஆகேட் கட்டிடம்,**
**இல. 51/2/1, யோர்க் வீதி,**
**கொழும்பு -01.**

# பெறுகை அறிவித்தல்

## உரிமை கோரப்படாத சடலங்களை புதைத்தல் – 2022ஆம் வருடம்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவு - இரத்தினபுரி

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவின் பலாங்கொட, கஹவத்த மற்றும் எஹலியகொட ஆதார வைத்தியசாலைகளின் பின்வரும் வேலைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இயைபுடைய வேலைகள் இதுவாகும்,

- பிரசவ அறையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் மகப்பேற்று கழிவுகள் (மாதாந்த தொகைக்கு)
- பிரசவ அறையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் மற்றும் சத்திரசிகிச்சையகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படும் கருச்சிதைவு கழிவுப் பொருட்கள்
- அடையாளம் காணப்படாத, அடையாளம் காணப்பட்டும் பொறுப்பாளியினால் ஏற்றுக்கொள்ளப்படாத இறந்த சிசுக்களின் சடலங்கள் (அலகிற்கு)
- அடையாளம் காணப்படாத, அடையாளம் காணப்பட்டும் பொறுப்பாளியினால் ஏற்றுக்கொள்ளப்படாத முதியோர்களின் சடலங்கள் (அலகிற்கு)
- அப்புறப்படுத்தப்படும் திசுப் பகுதிகள் மற்றும் உடற் பாகங்கள் (மாதாந்த தொகைக்கு)

02. கேள்வி மாதிரிப் படிவங்களை 2021-11-23ஆம் திகதி முதல் 2021-12-07ஆம் திகதி ந.ப. 12.00 மணி வரை 2,000.00 ரூபா மீளளிக்கப்படும் பிணைத் தொகை மற்றும் 250.00 ரூபா மீளளிக்கப்படாத தொகையை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். 2021-12-08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும்.

03. சகல கேள்விகளையும் தலைவர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உரிமை கோரப்படாத சடலங்களைப் புதைப்பதற்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் கேள்வியை விண்ணப்பிக்கும் நிறுவனத்தின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும். (உதாரணம்: உரிமை கோரப்படாத சடலங்களைப் புதைப்பதற்கான விலைமனு - ஆதார வைத்தியசாலை, கஹவத்த) நீங்கள் அல்லது உங்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களை இரத்தினபுரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**இரத்தினபுரி.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 650/50 பட்டகெவத்த சுதவில வீதி, ரணால இல் வசிக்கும் **Rajapakse Dewage Amitha Rajapakse** (தே.அ.அ. இல.677471409V) ஆகிய நான் இலக்கம் 650/50, பட்டகேவத்த சுதவில வீதி, ரணால இல் வசிக்கும் **Delgoda Arachchige Thamod Dilsham Jayasinghe** (தே.அ.அ. இல. 199917610540 என்பவருக்கு வழங்கப்பட்டதும் 2018 ஜுலை 19ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு திரு. **S.Abeywickrama** என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 3263 இக்கமுடையதுமான அற்றோணி தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களிற்கும் மற்றும் தொடர்புள்ள அனைவருக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

## அறிவித்தல்

### மட்டக்களப்பு மாநகர சபை
### 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம்

மட்டக்களப்பு மாநகர சபை 2022ம் ஆண்டிற்காக சமூகமட்ட அமைப்புகளின் ஆலோசனைகளுடன் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் 2021.11.22ம் திகதி முதல் ஏழு (7) நாட்களுக்கு பொது மக்களின் பார்வைக்காக இவ் அலுவலகத்திலும், மட்டக்களப்பு பொது நூலகத்திலும் வைக்கப்படும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டம் 252இன் 212(ஆ) பிரிவின் தாற்பரியப்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தி. சரவணபவன்,**
**கௌரவ மாநகர முதல்வர்,**
**மாநகர சபை, மட்டக்களப்பு.**


**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**


### பெயர் மாற்றம்

இல. 212, நாப்பாவல, அவிசாவளையைச் சேர்ந்த முஹம்மத் ஹிலூபர் ஹிலூபர் ஆமீனா எனும் நான் இனிமேல் முஹம்மத் ஹிலூபர் ஆமினா என்றே சகல ஆவணங்களிலும் கையெழுத்திடுவேன் என்றும் இவ்வாறே என் பெயர் இருக்குமென்றும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறிவிக்கிறேன்.


**முகம்மத் ஹிலூபர் ஆமினா**


### சிறு விளம்பரம்



**மோட்டார் வாகனங்கள்**

122



**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

UP AAU-8742 Bajaj, 2014, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 073371


## கேள்வி அழைப்பு

### விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான நுவரெலிய வலயத்தின் பண்ணைகளில் குறித்த கீழ்க்காணும் உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக்க வேண்டிய காலம் | | | கேள்வி ஆவணக் கட்டணம் |
| | | | காசாக எனில் | வங்கிப் பிணை மூலம் எனில் | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் | |
| 01 | நுவரெலிய வலயத்தின் பண்ணைகளுக்கு பிளாஸ்டிக் Crates கொள்வனவு செய்தல் | SPD/2/5/4/76/(2021) | 35,100/- | 70200/- | 2022.03.28 | ரூ. 3000.00 |

